அண்ணாவின் அரசு

மா. தங்கவேலர்

MADRAS

அன்பு நிலையம்
13, பிராட்வே சென்னை-1

முதற் பதிப்பு —செப்டம்பர் 1968

விலை 1-00

தயாரிப்பு :

K. R. நாராயணன்,

ராயன் அச்சகம் சென்னை-1.

முன்னுரை

தென்னகத்தின் விடுதலைக்கு வழி வகுத்த பொன்னகத்தின் புது நிலவு பேரறிஞா அண்ணுவின் அரசு ஆற்றுகின்ற செயல் வீரத்தினை இங்கே செப்பிடுகின்றேன். குறுகிய காலத்தே பெருகிய வாழ்வு தனைக் கண்டு விட்டோம். பெற்றவரும் மற்றவரும் ஆட்சியின் மாட்சிதனை போற்றிடாத நாளில்லை. இலட்சியத்தின் வடிவமாக இருதயத்தின் கீதமாக இலக்கியத்தின் இருப்பிடமாய் அமைந்து விட்ட நிகழ்ச்சி கண்டு பூச்சிரிப்புக் காட்டிடாத உள்ளமில்லை.

மகிழ்ந்து - மகிழ்ந்து மனமுவந்து வாழ்த்தி என் பணி துவக்குகின்றேன்.

தூண்டா மணிவிளக்கின் ஒளிதுப்பும் ஒப்பற்ற காட்சியினில் கலந்தே நமதரசின் முன்னேற்ற முரசொலிக்கும் காவியத்தைப் படித்திடுவீர்......பலருமறியச் சொல்லிடுவீர்.

மா. தங்கவேலர்.

அரசு கட்டில் அமர்ந்திருப்போர்

மாண்புமிகு பேரறிஞர் அண்ணா, அவர்கள்

,, கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

,, நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்

,, ஏ. கோவிந்தசாமி அவர்கள்

,, கே. ஏ. மதியழகன் அவர்கள்

,, அ. சத்தியவாணிமுத்து அம்மையார்

,, செ. மாதவன் அவர்கள்

,, மா. முத்துச்சாமி அவர்கள்

,, எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள்

அன்றைவின் அரசு

அறுபத்தேழு தேர்தலுக்கு முன்னதாக இலங்கை சென்றிருந்த நான் அன்புள்ளங்கொண்ட கழகத்தோழர்களால் ரத்மலானை விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டேன். அங்கே படையெடுத்த பத்திரிகை நிருபர்களிடம் பேசிய போது எதிர் நோக்குகின்ற பொதுத்தேர்தலில் கழகம் நிச்சயமாக ஆட்சியைக் கைப்பற்றும். இந்த எனது கருத்தில் எந்த வித சந்தேகமுமிருக்க நியாயமில்லை. என்ற கருத்தினை எடுத்தியம்பினேன். பின்னர் தொடர்பாக நடந்த பயணத்தின் போது, இலங்கை தினசரி ஏடுகளிலெல்லாம் கழகம் ஆட்சிதனைக் கைப்பற்றிடும்' என்ற மாட்சி பற்றியே சேதிதனை வெளியிட்டு வந்ததையும், தென்னவர் பரம்பரையினர் தேன் தமிழின் சொந்தக்காரர்கள் தேனருவிச் சேதிதனைக் கண்டறிந்து, களி மிகுந்த உள்ளத்தோடும் ஒளி நிறைந்த விழிகளோடும் வலம் வந்ததைக் கண்ட போது இதயமெங்கும் இன்பவீணையின் நாதம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அந்த இன்பம் ... கிடைக்கப்போகின்ற வெற்றி பற்றிய சுவையான நினைவை எண்ணிப் பார்த்திட்ட போது, இதயம் மகிழ்ந்திடத்தான் செய்தது. ஈழத் தமிழர்களைப் போலவே இங்கிருக்கக் கூடிய நம்மவர்களும் வர இருக்கின் வெற்றி பவனி குறித்து - வீரக் காதைபற்றி - இதயமெங்கும் தேன் குடத்தைச் சாய்த்து நின்றனர். அந்த சுவையான நினைவு-இலட்சியக்கனவு - நடை முறைத்திட்டங்களாக உருப்பெற்று திறம் பெற்றபோது தான்... எத்தகைய வேலிகளைத் தாண்டி வேதனை அம்புகளைத் தாங்கிக் கொண்டு வெற்றிப் பாதையில் நடைபோட வேண்டிய சாதனை தெளிவாயிற்று

"அதோ! அந்த மாளிகையைப் பார்த்தாயா? அங்கே உள்ளே ஊருக்கே கொடி கட்டி ஆளும் குணாளிருக்கிறார் புரிகிறதா, அவரது கடைக்கண் ஜாடைகண்டு இங்கிருப்போர் கைகட்டி வாய் புதைந்து பின் நடப்பர். அந்தக் குரலி ருக்கிறதே அது சிங்கத்தின் கர்ஜனையைப் போன்றது. குரலைக் கேட்டு, அதிலும் உரத்தகுரலைக் கேட்டு விட்டால் நடு நடுங்காதோர் இந்த வட்டாரத்திலேயே இருக்க முடியாது. அவருக்கிருக்கும் நிலவளம் பற்றி சொல்லியா புரிய வேண்டும்? ஊருக்கென்ன இந்த உலகத் துக்கே படி அளந்து விடுவார். அவர் தம் மோகனப் புன் னகையின் சிறப்புத்தானென்ன...அந்த அரும்புச் சிரிப்புக் காகவே கரும்புமொழிக் கட்டழகிகள்...அதிலே மயில் நடை யினர், மானின் சாயல் பெற்றோர் என்ற வகையினர் தொகை தொகையாக இருந்திடக் கண்டதில்லையா நாம். இவ்வளவு போதாதா அவர் தம் குல நலம் விளக்கிட அணிமணி பூண்டு பனி மலர்க் காட்டில் அடிவைத்து நடை போட்டிடும் அந்த பூபதி நமது பக்கமல்லவா?

என்ற எக்காள மொழியுடனே பேசிட்ட தேசீயத் திரு வாளர்களின் அணிவகுப்பிலே மிட்டா மிராசுகளிருந்தனர்! குட்டி ஜமீன்தார்களிருந்தனர்; சிருங்கார வல்லவர்களான சிற்றரசர்களிருந்தனர். சித்த உனக்கும் மேலாக எதையுமே இலகுவிலே முடித்துத் தந்திடும் எடுபிடிகளோ ... ஏராளம் ஏராளம். மாட மாளிகைகளைப் பெற்றிருந்த கூடகோபுர வாசிகளைத்தான் அங்கே நிழலுக்காகக் கூட நின்றறியாத கூட்டத்தினர் நேருக்கு நேர் சந்திக்கத் தயாராகினர். ஆண்டு அனுபவித்து வந்த ஆற்றல் படைத்தோர் அப்போது பார்த்த பார்வையிருக்கிறதே அந்த பார்வைக்கு மட்டும் சுட்டு சாம்பலாக்கிடும் வல்லமையிருந்தால் எப்பொழுதோ ஏழை களுக்காக குரல் கொடுக்க வந்தோர் சுடு சாம்லுக்குள்ளே புதையுண்டு போயிருப்பர். பரிதாபத்திற்குரியவர்கள் தப்பிக் கொண்டார்கள். கனலைக் கக்குவது காரியத்திற்குதவாது

என்று கண்டதும், கனிவு தரும் மொழியிலே பாகு கலந்து பேசினர்.

',உனக்கேன் ஊர்வம்பு?, யாராண்டாலென்ன. வேண்டியதை இதமாகக் கேள். ஊரை மாற்றிவிட உங்களில் ஒரு சிலரால் முடியுமா என்ன! பெரிய மனிதர்களின் கோப தாபத்துக்கு ஆளாவது ஆகாத போக்கு விட்டு விடு விருதுநகர்க் காரர்களின் தொடர்பை. அகிலமே புகழும் எங்களது அணி வகுப்பிலே வந்து சேர்ந்து ஆனந்தப் பள்ளுப்பாடு" என்பவை போன்ற பாச மொழிகள் வெற்றிபுரி நோக்கி நடைபோட இருந்தோருக்கு மகிழ்வைத் தரவில்லை. அருமைமிகு தேசியத்தார் வகை வகையான முறைகளிலெல்லாம் வருக வருக வென்று அழைத்துப் பார்த்தனர். முடிவாகத் தங்களது வலையிலே அந்த மான் கூட்டம் நிச்சயமாக விழாது என்ற நிலை பிறந்தது, ஏளனத்தால் ஏழையர் தம் இதய முரசைத் தூளாக்கிடும் நிலை பெற்றனர்.

"கழகத்தாரே' கழகத்தாரே! இந்த முறை ஜூர்பதிலே ஐந்தாவது தங்குமா இல்லை அதுவும் நாலறுந்த பட்டமாகி திசை தப்பி விடுமா? அல்லது சீ...சீ இந்தப் பழம் புளிக்கு மென்ற குள்ள நரியின் சித்தாந்தத்தைச் சொல்லி விட்டு ஓடி ஒதுங்கிப் பதுங்கி விடுவீர்களா? கடந்த காலங்களிலே உங்களது அரும் பெரும் சாதனை தான் என்ன? மாநகராட்சியிலே உங்களது ஆட்சிதனைத் துவக்கிவைத்தீர்களே! மக்கள் கண்ட தென்ன? ஒரே ஊழல் மயம், இந்த அவல நிலையில் நீங்கள் ஆட்சி பீட மேற நினைத்திடுவது எத்தகைய கேலிக் கூத்தானது?, தங்களுக்கே உரிய கிண்டல் மொழியிலே பேசித் தீர்த்தனர். இப்படி ஏசிப் பேசுவதன் மூலமாகவே அரசியல் வரலாற்றிலே புத்தம் புதிய அத்தியாயத்தைத் துவக்கியதாக பெருமை கொண்டனர். தேசியத்தார். எந்த ஒரு ஜனநாயக நாடுகளிலேயும் நடைபெற முடியாத அநாகரீகத்தைத் தேர்தல் திருப்பமாகக் கையாள முயற்சித்தனர். இதைவிட

அப்பட்டமான வேடிக்கை என்னவென்றால், 'சமரசத்தின் தூதுவன் ஜனநாயகத்தின் வழி காட்டி என்ற டாம்பீகமான சொல்லை வாயளவிலே டமார மடித்துக் கொண்டிருந்த திருக் கூட்டத்தார் இதை முன்நின்று முயற்சியோடு செய்தது தான்! ஏனைய நாடுகளிலே தேர்தல் வந்துற்ற போது எத்தத்த நேச பாவத்தோடு உலவி, பண்பு கலந்த உரையாடல்களிலே மக்களை சிக்கித் தவிக்க வைத்து பவனி வரும் சேதிதனை ஏடுகளிலே படித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நாடுகளுக்கெல்லாம் அடிக்கடி நிலாச் சோறு உண்ணுவது போலச் சென்று வந்துகொண்டிருந்த தேசபக்தி மிகுந்த தலைவர்களைக் கொண்டிருந்த தேசீய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் நம்மவர் திகைப்பிற்கும் நாட்டவர் நகைப்பிற்கும் ஆளாகிடும் முறையிலே தேர்தல் பிரசாரந் தன்னை தேச மெங்கும் துவக்கி வைத்தனர்.

புண்ணிய பூமியென்றும், பண்டைய பெருமை பெற்ற பாரத மென்றும் புகழாரம் சூட்டிக் கொண்ட நாட்டிலே தான் மகரிஷிகள் தோன்றினர், மகான்கள் தோன்றினர்; ஆசையே, சகல' துன்பங்களுக்கும் காரணமென்ற அரும் பெருந் தத்துவத்தை போதி மரத்தடியிலே புத்தனுக்கு உருவகப் படுத்திக் தந்தது இந்த ஜீவ பூமி என்று பெருமை பேசப் பட்ட நாட்டிலேதான் கண்டவர், கேட்டவர் வெட்கப்படும் அளவுக்கு தேர்தலை முன்வைத்து பிரசாரம் துவக்கப்பட்டது. பிறந்த பொன்னாட்டிற்கு இழிவைப் பூசுகிறோமே யென்பதை மறந்து அப்படிப்பட்ட அநாகரிக முறைகளிலே அடிவைத்து நடந்தனர். பெற்ற தாயின் மானத்தைக் காப்பாற்றுவதிலே அவர்கள் கவலை எடுத்துக் கொள்ளவில்லை. இங்கே நமது மண் மாதாவின் மடியிலே சோதரர்களின் இரத்தத் துளிகளை வடிக்கின்றோமே யென்று வேதனைப் படவில்லை. நமது மண்ணைக் காத்திடுவதற்காக ஆதிக்க நினைவு கொண்டோரிடம் போரிட்டு சிந்தப்பட வேண்டிய இரத்தத் துளிகள் இங்கே வீணடிக்கப் படுகிறதே யென்பதை அவர்கள் துளிகூட எண்ணிப்பார்க்க வில்லை.

ஆட்சி தங்களிடமிருக்கிறதென்ற தெம்பிலும். என்றுமே இனி ஆளப்போவது நாம்தானென்ற மமதையிலும் ஆகாத காரியங்களுக்கெல்லாம் திட்டமிட்டு வழி வகுத்தனர். கழகத்தின் காளையர் கண்ணெனக்கருதிடும் கலைஞரை பாளைச்சிறைக் கோட்டம் நோக்கி அனுப்பிவைத்தனர். எந்த நேரம் பார்த்து ...தேர்தல் அருகிருக்கும் வேளையில் பாதுகாப்புச் சட்டத்தைக் காரணங்காட்டி கலைஞருக்கு உடல் நலிவுற்றிருந்துங்கூட பாளையங் கோட்டைக்கு இரவோடு இரவாக அழைத்துச் சென்றனர். எவ்வித வசதிகளு மற்ற போலீஸ் வானிலே. யாருக்குப் பாதுகாப்புப் போடவேண்டுமோ அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு இந்தக் கோல மயிலைச் சிறை பிடித்தனர். தேளும், பாம்பும் நெளிந்திடும் அக்ரமக் கோட்டந்தனில் அந்தத் தேனருவி சிந்துபாடும் கழகக் காவலரை அடைத்தனர். கள்ளச் சந்தை வணிகளையும்; கொள்ளையடித்திடும் மோசக் காரர்களையும், கள்ள நோட்டுகளை அடித்துநீட்டிக் கொண்டிருந்தவர்களையும், தேசத்துரோகிகளையும் நோக்கி திறக்கப்படாத சிறைக் கதவுகளும், பவனிவர முடியாத பாதுகாப்புச்சட்டமும் விடுதலை வீரர்களை மட்டுமே தொடரமுடிந்திருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமைநிலையத்திலேயே பகையைக் கக்கிய பாகிஸ்தானின் ஒற்றன் உலவியிருக்கிறான். அதைக்கண்டு பிடிக்க முடியாத தேசியத்தார்- அங்கேயெல்லாம் பாது காப்புச் சட்டத்தின் வலையை வீசமுடியாது திறனியற்றுப்போனவர்கள் இங்கே அந்நிய ஆதிக்கத்தை-அத்துமீறி நுழையும் வேற்று நாட்டவரை தூள்தூளாக்கு வேனென்று சூளுரைத்து நிற்கும் வீர மறக்குல மாணிக்கத்தை அல்லலுக்கு ஆளாக்கினர் கேவலம் ஒரு தேர்தல் சபலத்தை முன் வைத்தது.

இங்கே நடந்திடும் நடவடிக்கைகளை கவனிக்கும் முறையிலே தலைமை முகாமில் ஒற்றன் ஒருவன் உலவிக் கொண்டிருக்கும் போது... அதைத் தெரிந்து கொள்ளக் கூட முடியவில்லை யென்றால் பின்னுமேன் இங்கிருக்கும் பெரியவர்களுக்கு

அங்கே தலைமை ஏன் ? செய்தி அம்பலமான பிறகு குறை பாடு நிறைந்த-நமது தலைமையால் பெரிய பதவி களங்கமடைய வேண்டாமென்று பதவியிலிருந்து இறங்கியிருக்க வேண்டாமா ? அதையெல்லாம் செய்திட முடியவில்லை அவர்களால் அங்கே...ஆனால் இங்கே ஏது மறியாத குணக் குன்றுகளை சூது மதியாளர்கள் பாதுகாப் பென்ற முத்திரையைக் குத்தி விட்டு, சிறைபிடித்தனர்.

வரப்போகின்ற தேர்தலில் தேசீயத்தார் ராஜநடை போட்டு வருவதற்காக எதிர்ப்பில்லாத அளவிலே இப்படியெல்லாம் ஒரு ஏற்பாட்டை செய்து மகிழ்ந்தனர். திருவிடத்தின் ஒளிவிளக்கு பேரறிஞர் அண்ணா உடுமலைப் பகுதியிலே சுற்றுலா நடத்தியபோது காலிகள் பலர் சூழ்ந்து காரைமடக்கி தீர்த்துக் கட்டிட திட்டமிட்டிருந்தனர். தோழர்களின் தீவிர முயற்சியால் இந்த வேதனை தரும்நிலை தவிர்க்கப்பட்டது இப்படிப்பட்ட இழி நிலையின் கடைசிக் கட்டத்துக் கெல்லாம் சென்று நின்றுபார்த்தனர். நமது ஊனோடு உடலோடு உயிரோடு கலந்த அண்ணனைத் தீர்த்துக் கட்ட நினைத்தது போலத்தான், தேர்தல் நெருங்கிய நேரத்தில் அருமைமிகு கலைஞரை சிங்காரச் சென்னையின் அருகிலே வழிமறித்து வஞ்சகத்தை முடித்திட நினைத்தனர். கலைஞரின் சாதுரியத்தால் குடிசை வாழ்வோரின் கருணையால் அன்று அவர் தப்பிப் பிழைக்க முடிந்த தென்றால் எத்தகைய அரசாங்கப் போக்கிற்கு அவர்கள் வந்து தீர்த்திருந்தார்களென்பது தெளிவாகும். பரிதாபத்திற்குறியவர்கள், வரலாறு அறிய முடியாதவர்களாக இருளகற்ற முடியாத இதயத்தைக் கொண்டிருப்பவர்களாக இருந்திட்ட காரணத் தால்தான் இத்தகு பயங்கரப் பாதையில் பயணத்தைத் துவக்கியிருந்தனர். ஜனநாயகம் வேண்டப்படுகின்ற நாட்டிலே ஏற்றப்படுகின்ற ஒளியை எந்த ஒரு பயங்கர சூறாவளியோ, கால அரக்கனோ அணைத்து விட முடியாதென்பதை அகிலமே கண்ட தத்துவ விளக்கமாகும். இதைப் புரிந்து கொள்ள முடியாத மனவளம் பெற்றிருந்த காரணத்தால்

தான் தேசியத்தார் நிலைதடுமாறித் திரிந்தனர். ஆதிக்க போதை கண்களை மயக்கிட ஆணவம் நிறைந்த போக்கிலே நடந்து கொண்டனர். அவர்களது தடுமாற்றமும், 'விட்டேஜுபார்' என்ற ஜப்ர்தஸ்துப் பேச்சும் ஒருவழிக்கு நல்லதாகத் தானிருந்தது. காரணம்...அவர்களைப் பற்றி அதிகம் அறியாதோர் புரிந்துகொள்ள அந்தத் தத்தளிப்பு உதவியது.

ஆதிக்கத்தின் இரும்புக் கரங்களிலிருந்து மங்களை விடுவிக்கத் துடித்த மக்களின் தலைவர்களுக்கே இத்தனை பேராசை வலையை விரித்தன ரென்றால், மிக மிகச் சாதாரணமான மூகத்தின் கண்மணிகள் எத்தனை இடர்பாடுகளை ... கொண்டு இலட்சியப் பணியாற்றியிருக்க முடியும் என்பதை உணர்ந்து பார்ப்பதே ஒரு புதிய வரலாறாகும்.

அந்தப் புதிய வரலாறு—பொற்கரங்களால் பழுதி முடிக்கப்பெற்ற பொன்னேடுகளுக்குப் பின்னே பல தியாகக் காவியங்களை உள்ளடக்கிடும் சிறப்புப் பெற்று, எழில் கொஞ்சிட தென்னகத்தை நோக்கி மென்னகை செய்தது. அந்த நகை ஒலி கேட்டு நடுங்கிச் சாய்ந்தனர் பகைப்புலத்தினர். சொல் மொழியால் கிண்டல் நடையால் எக்காளச்சிரிப்போடு எதையுமே அதிரச் செய்திடும் ஆற்றல் பெற்றோர் இப்போது புதிய வரலாற்றின் புன்னகையைக் கண்டு முக்காடிட்டு மூலையிலே பதுங்கினர். 'அடடா இவரது சிறப்பு என்ன? கீர்த்தி கீர்த்தாப்பு என்ன? ஊருக்குத் தன்னை அறிமுகம் செய்து கொண்ட பாங்கென்ன - படாடோபப் போக்கென்ன? இருந்தும் மிகவும் எளிமை நிறைந்த இலட்சியத் தொண்டரிடம் பல ஆயிரக் காணக்கான வாக்கு வித்தியாசத்திலல்லவா தோற்றோடும் நிலை பிறந்திருக்கிறது.

இன்று நாடு நகரமும், பட்டி தொட்டியும் திகைப்படைந்து கூறுகின்ற அளவுக்கு வேக வேகமாகச் சாயந்தனர். ஆதிபத்தியத்தின் சூத்ரதாரிகளும், ஆளும் பீடத்தின் சூட்சமக் கயிற்றை இழுத்துப் பிடித்திருந்தவர்களும் பரிதாபத்

திற்குரிய முறையிலே கீழே தள்ளப் பட்டனர். கொட்டு முழக்கத்தோடு தங்களது கோலாகல வாழ்வைத் துவக்கி யிருந்த அந்த இரண்டு பத்தாண்டுகள் அவர்களது நினை வின் முன்னே நிழலாடியது.

"அதோ வந்து போகின்றாரே அவர் இந்த மாநிலத் தின் மிகப் பெரிய ஆலை அரசர்; இதோ வனப்புக் குறை யாத பளபளப்புமிகுந்த காரிலிருந்து இறங்கிக் கொண்டி ருக்கின்றாரே அவர்தான் இந்தியாவின் கோடீஸ்வரர்களிலேயே குறிப்பிடத் தக்கவர்; இங்கே வரவேற்பறையிலே வரிசை யாகக் காத்துக்கிடக்கின்றார்களே இவர்களிலே பலர் சீரும் சிறப்பும் பெற்ற சீமான்கள் இன்னும் இவர்களிலே சிலர் ஐஸ்வரிய சுகமுண்டு." என்று பாரம் பரியப் பெருமை பேசிய ஜம்பத்துக்காரர்கள் சகித்திட முடியாத வீழ்ச்சி தனைச் சந்தித்துத் தலை சாய்ந்து நின்றனர். எத்தகைய கொடிகட்டி, மற்றவர் அடிதொழ வாழ்ந்தோம். கூப் பிடாமலே கட்டளைக்காக கை கட்டி வாய் புதைந்து நின் றோர் எத்தனை பேர்? பாதையிலே நடந்தால் பாதம் நோகுமே என்று மலர் தூவிக் குவித்து வாழ்த்தி வணங்கிய கூட்டம் எங்கே! இன்று எல்லாம் ஏமாற்றம் தானா! சொகுசு நிறைந்த சுந்தரமும் வாழ்க்கை எங்கே? எல்லாம் கனவு தானா? மாடமாளிகையிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மர்மம் தான் என்ன? ..நேற்று வரை கொடி தூக்கி வந்தவர்கள்; சாமரம் வீசியோர்கள் கண்களிலே கனிவைக் காணுவதற்காக கடும் உழைப்பை நல்கியவர்கள் இன்றைய தினம் புயலாகத் தீயாக தேளாக மாறி மாறி வாட்டு வானேன்."

வீழ்ச்சியின் வேகம் அந்தப் பரிதாபத்திற்குரியவர்களைப் புலம்பித் துடிக்க வைத்து அந்த அதிர்ச்சியால் உண்மை யின் உருவம் அவர்களது கண்களுக்குத் தெரியவில்லை. ஏன் தங்களது கையாளாகாத போக்கிற்கு மக்கள் சாவு மணி அடித்தனரென்பதை உணராமலேயே ஏதோ சபலத்தில் மக்கள் இந்த முடிவைத் தேடிவிட்டனரென்று கற்பனை செய்து

கொண்டு பேசத் துவங்கினர். செயற்கரிய சாகசங்கள் செய்திடுவோர், மதியூகம் நிறைந்த அதியற்புத மந்திரி களென்றெல்லாம் விளம்பரப் படுத்தப் பட்டிருந்த அருமை மிகு கனம், களெல்லாம் தேர்தல் காற்றிலே பறக்கத் துவங்கினர் 'அந்த 'கனம்' அவர்களைக் காப்பாற்றி விடவில்லை கண்ணிய மும், கடமையும். கட்டுப்பாடும் நிறைந்த கழகக் கண்மணி களிடம் அந்த கனம்களின் அணிவகுப்பு மூக்கறு பட்ட நிலையிலே சிந்துகின்ற ரத்தத் துளிகளைத் துடைத்துக் கொண்டே ஓடிப்பதுங்கிற்று! ஆதிக்க ஆசை கொண்ட கனம்களை மட்டுமல்ல...அகில இந்திய மட்டத்துக்கு மேம் படுத்தப்பட்ட ஆளுகின்ற திறமை — வார்சு பாத்தியதை- தங்களுக்குத் தானென்று ஆணவத்துடன் பல்லாண்டுகளாக முழக்கமிட்டு வந்த ஒரு அகில இந்தியக் கட்சியின் தலை வரையே தேர்தல் களத்திலே நேருக்கு நேர் சந்தித்து கீழே சாயத்திடும் தகுதியை ஜனநாயகக் குரலுக்கு மதிப்பளித்தோர் பெற்றிருந்தனர்.

கட்சித் தலைமையின் தோல்வி அந்தக் கட்சியும் கட்சிப் பெரியவர்களுமே எதிர் பார்த்திடாத அதிர்ச்சி தந்த முடி வாகும். ஆளுங்கட்சியின் தகுதி - திறமை - யோக்யதையை இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மேதைகள் மட்டு மல்லாது, வெளிநாட்டு அரசியல் வல்லுநர்களும் எடை போட்டு மதிப்பிட்டுக் கொள்ள அந்த நிகழ்ச்சி சரியான சந்தர்ப்பமாக அமைந்தது.

சோவியத்ருஷியாவினுல் வருந்தி வருந்தி அழைக்கப்பட்ட வர்; ஜெர்மனியால் அழைப்பு விடப்பட்டவர்; அமெரிக்கா விலே இவரது உள்ளக் கருத்தை எதிர் நோக்கிக் கொண்டி ருப்பதாக விளம்பரப் படுத்தப் பட்டவர்; ஒரு ராஜ்ஜியத்தையே நீண்ட நெடுநாட்களாகப் பரிபாலனம் செய்து அலுத்துப் போனவர்; அன்றைய நேருவுக்கு வலது கரம், இன்றைய இந்திராவுக்கு இடது கரம், என்றெல்லாம் கட்சியின்

தொண்டரடிப் பெரியாழ்வார்களால் வர்ணிக்கப்பட்ட காங்கிரஸ் தலைவருக்கு இத்தகைய பரிதாபகரமான தீர்ப்பை ஜனநாயக முரசொலித்த மக்களின் கரம் எழுதித் தீருகிற தென்றால் அந்த முடிவு-தீர்ப்பு நல்ல தீர்ப்பாகத்தானே இருக்க முடியும்?

கனம்களும், காங்கிரஸ் தலைமையும் வீழ்ச்சியடைந்தது மட்டுமல்ல எந்த மோட்டார் மன்னர்களையும், கோடீஸ்வரர்களையும் நம்பினால் தான் அறுபத்தேழில் நமது கொடி பறக்குமென்று நப்பாசை கொண்டிருந்தார்களோ அதே மோட்டார் மன்னர்களும், கோடீஸ்வர சீமான்களும் விரட்டியடிக்கப்பட்டது வரலாற்றுச் சிறப்பிலே குறுப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளிக்கொட்டி இந்தப் பெருந் தோல்வியைத் தேடிக்கொண்டனர். மக்களின் ஜனநாயக அரசியலைப் பணப் பட்டியலுக்குள்ளே கோட்டு அடைத்துவிட முயற்சித்தனர் பாவம் அந்தப் பணத் திமிங்கிலங்கள் ஜனநாயகத்தின் தீர்ப்பபைப்பற்றி எங்கே அறிந்திருக்கப் போகிறார்கள்! வரலாற்றிலேயே புதிய அத்தியாயமாக ஏழை எளியவர்களை நம்பாமல், அன்றாடங் காய்ச்சிகளை நினைத்துப்பார்க்காமல், வறுமைப் புலியுடன் நாளெல்லாம் போராடிக்கொண்டிருக்கும் ஒழுக்க சீலர்களை எண்ணிப்பார்க்காமல் மிட்டா மிராசுகளை, ஜமீன் வாரிசுகளை ஆலைச்சீமான்களை முழுக்க முழுக்க நம்பி அவர்கள் கண் அசைத்தால் போதும் கரமசைத்தால் போதும் அதுவே பேரின்பம் தரக் கூடியது, அவர்கள் இசைவே வெற்றிக் கொடியின் அசைவிற்கு மூலகாரணமாகுமென்று நம்பி, கோமான்களின் கடைக்கண் வீச்சிற்கு தவமிருந்தனர். யாருக்குச் சுதந்திரம்' என்று முன்னரெல்லாம் பாருக்கு அறிவித்தவர்கள், அந்தச் சுதந்திரம் சுகவாசி களுக்குத்தான் இன்று என்று கூறிடுவது போல அமைத்துக் கொண்டனர். காயும் வயிற்றுடன் அலைபவனை, கஞ்சிக் கலயத்தை சாய்த்துப் பார்ப்பவனை அந்த மேட்டுக்குடி வாசிகள் மறந்தனர். பணநாதன் அருளால்

வெற்றியடைந்து விடுவோமென்ற மமதையால், பண மூட்டைகளின் பாதத்தில் வீழ்ந்து கிடந்தனர், ஆட்சியைத் திசை தவறி விடாமல், ஆட்டங் கொடுக்காத முறையில் ஆதரவைத் தரும் கரங்கள் ஏழை எளியவர்களின் திருக்கரங் கள்; அவர்கள் அள்ளித் தரும் நல்வாக்குகள் எந்த வெள்ளிக் காசுக்கும் சமமாகாது...என்பதை ஜனநாயக நாடுகளின் வர லாறுகள் தெளிவு படுத்தியுங் கூட இந்தப் பரிதாபத்திற்குரிய வர்கள்—பாவக்கரங்களை நம்பியிருந்தனர். பேரறிஞர் அண்ணா பொதுத் தேர்தலுக்கும் முன்னதாகவே தமது பொன்னை போன்ற கருத்துரையைக் கூறியிருந்தார். பணமூட்டைகள் அள்ளித் தருகின்ற வெள்ளிப்பணம் குஷ்டரோகியின் கையி லிருந்து வாங்குகின்ற வெண்ணைக்குச் சமமானது என்று தெளி வாக்கியிருந்தார், மக்கள் குரலே மகேசன் குரலென்று நம்பிக்கை தெரிவிக்கும் மக்கள் தலைவர்களிடமிருந்து மட்டும் தானே இப்படிப்பட்ட முழக்கம் கிளம்பிட முடிகிறது. எனவே மக்களை மதிக்க முடியாதவர்கள் தேர்தல் காலங்களிலே மட்டும் அவர்களின் அருகிலே வந்து: உருக்கமுடன், கரும்பினுமினிய கனிமொழியால் ஏதேதோ கூறிடும் வார்த்தை ஜாலங்கள் அத்தனையும்; வான வேடிக்கையைப் போன்றதாகி விடுகின்றது

சின்னஞ்சிறு சிற்றரசுகளிலிருந்து பெரிய பெரிய பேரரசு கள் வரை மண் மூடிப்போயிருக்கிறது மக்களின் கோபக்கனை லால் அவர்களது இதயத்திலே மூட்டப்படுகின்ற சிறு தீ பெரு நெருப்பாகி எத்தனையோ எழில் நிறைந்த சாம்ராஜ்ஜியங் களை சுட்டெரித்திருக்கிறதென்பதை வரலாறு எச்சரித்துக் கொண்டேயிருந்துங் கூட 'கனம்' தந்த மண்டை கனத்தால் மதோன் மத்தர்களாகி விட்ட மகானுபாவர்களுக்குப் புரியக் மலே இருந்து விட்டது.

"ஏங்குகின்ற புதியபாரதத் துக்காக சுதந்திர முழக்கத்தை கிளப்புவோம்; தூங்குகின்ற இளைய பாரதமே எழுந்து வா

,,என்ற வீரப் பண் இசைத்தவர்கள்; 'வரப்போகிறது சுதந்திரம்' என்று அறிவிப்பதை தந்து கொண்டே 'வந்து விட்டது சுதந்திரம், என்று அறிமுகப் படுத்திய போது திக்குமுக்காடிப் போனவர்கள் உள்ளங் குளிர்ந்து போயினர். அதைவிடக் குளிரவைத்தனர் ஆட்சிக் கோலேந்தியோர் "அதோ பளபளக்கும் பாராளு மன்ற அரசு கட்டிலிலே... எந்த வெள்ளைப் பிடாரிகள் அமர்ந்து கொக்கரித்துக் கொண்டிருந்தார்களோ அங்கே உங்களது பிரதிநிதிகளாக நாங்கள் அமருகின்றோம்: முடியாட்சி தந்த முள்வேலியை விலக்கிவிட்டு குடியாட்சியின் சுவையை சுகத்தை அனுபவித்திட அறை கூவி அழைக்கின்றோம், வெள்ளைக் கால்களின் பூட்சுகளுக்கும் கீழே அழுத்தப்பட்டுக் கிடந்து, தொல்லையைத் தாங்கிக் கொண்ட இருண்ட சகாப்தம் முடிந்தது: இனி உங்களுக்காகவே இந்த அரசு! உங்களுக்காகவே நாங்கள் ஆளுகின்றோம்.

இதோ பரங்கியர் மூட்டை முடுச்சுகளைக் கட்டிக் கொண்டு கிளம்பிவிட்டனர். அவர்களை ஏற்றிச் செல்ல பிரிட்டானியக் கப்பல் ஆடி அசைந்து வந்து நின்று கொண்டிருக்கிறது. கப்பல் நமது கண்களை விட்டு மறைந்ததும், நமது கொடி நாட்டவர் என்றென்றும் ஏற்றிப் போற்றிய மூவண்ணக் கொடி—இடையே ஒரு மாற்றத்தோடு தர்மசக்ரத்தைத் தாங்கி... பட்டொளி வீசப் பறந்திடும் நமது கோட்டை கொத்தளங்களின் மீது! நீதியை போதிக்க அவதரித்த புத்த பெருமானின் கொள்கை கோட்பாடுகளை இந்தியா இதயத்திலே என்றென்றும் தாங்கியிருக்கும் என்பதை எடுத்துச் சொல்வதுபோல தர்மசக்கரத்தைக் கொடியிலே பதித்திருக்கிறோம். பழம் பெரும் கண்காட்சியிலே பதுங்கியிருந்த அசோகர் ஸ்தூபியையும் அரசுகட்டிலின் அமைதிச் சின்னமாக ஆக்கியிருக்கிறோம். அநீதியின் நிழல் இங்கே இனி படமுடியாது, அக்ரமத்தின் சாயலை எங்கே தேடினும் கண்டிட முடியாது"

... இப்படிப்பட்ட வார்த்தை ஜாலங்களின் அஸ்திவாரத்தால் உருவாக்கப்பட்ட ஏகபாரதத்தின் ஏகச் சக்ராதிபதிகளாக நடமாடத் துவங்கினர். பொது நலம் பேசிய புண்ணியவான்களின் போக்கு பற்றி கடந்த இரண்டு பத்தாண்டுகளாகவே பொது மக்கள் மிகமிக கவனமாகவே அலசி ஆராய்ந்து வந்தனர். பதவியிலமர்ந்த இரண்டொரு ஆண்டுகளுக்குள்ளேயே மக்கள் 'சுயராஜ்ஜியம் என்னவாயிற்று சுகம் தரவில்லையே ..சோறு போடவில்லையே' என்று அவசரப்பட்டு கேட்டுவிடவில்லை எங்கே அவசரப் பட்டு கேட்டுவிடுவார்களோ என்றபயம் அரசுகட்டிலிலேறியவர்களுக்கு மட்டும் தானிருந்து வதந்து, அதன் காரணமாகவே திட்டங்களை மக்கள் மன்றத்தின் முன்னே விரித்து வைப்பதும், பிறகு அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் பற்றி தேனொழுகப் பேசி வாய்ப்பந்தல் போடுவதுமாக இருந்து வந்தனர். முழுமையாக மூன்று தேர்தல் நடந்து முடிந்த பிறகுதான், எந்த மாநிலத்திலும் அவர்களே பெருவாரியாக வெற்றி பெற்று அரசபீடமேறிய பின்னர்தான் ... 'அய்யா' கருணையுள்ளம் படைத்தவர்களே! காந்தியடிகளின் மறு பதிப்புகளே! ஆண்டுகளோடு ஆண்டுகளாக நீங்களுந்தான் போட்டி போட்டுக் கொண்டு ஆண்டு கொண்டிருக்கிறீர்கள்...இங்கே புண்ணிய பூமியிலே அவலம் தீர்ந்ததா, ஓலம் ஓய்ந்ததா ?' என்று ஏக்கப் பெருமூச்சைக் கலந்து கேட்கத்துவங்கினர். வேதனையைத் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டு இனியும் வேதனையை அனுபவிக்க முடியாதென்று இரங்கத்தக்க நிலை ஏற்பட்ட போதுதான் வளைந்து போயிருந்த முதுகை நிமிர்த்தி நெஞ்சுயர்த்திக் கேட்டான்.

'விலைவாசி உயர்வு செந்தேளெனத் தொடர்ந்து கொட்டிக் கொண்டிருக்கிறது. அணையாத் துடித்துக் கொண்டிருக்கும் எங்களது வாழ்வுப் போராட்டத்தைப் பாருங்கள்— உங்களது முடிவென்ன விரைவிலே கூறுங்கள்.''

பசி கொண்ட வயிறு படைத்தோர் பதிலுக்காகக் காத்திருந்தனர். அவர்களை ஆளவந்திருந்தவர்களோ இந்த பயங்கரமான விலைவாசி உயர்வுக்குக் காரணம் பதுக்கல் காரர்கள் தானென்பதை மிகுந்த சிரமப் பட்டு கண்டுபிடித்து விட்டோம் ஆனாலும் அந்த வஞ்சகர்களைக் கண்டு பிடிப்பதிலே தான் சிரமமிருக்கிறது. இதோ. மீண்டும் ஒரு ஐந்தாண்டு திட்டம் போடுகிறோம். இதன் மூலமாக இந்தியா நிச்சயமாக சுபிட்சமடையும் என்று நம்புகிறோம்'[1] என்ற ஆறுதலைத் தந்துகொண்டிருந்தனர்.

"ஐயா! ஆளவந்தவர்களே! பதுக்கல் பேர்வழிகளைத் தூக்கிலே போடவேண்டுமென்று மதிப்புமிகு நேரு அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்களே இப்போது அந்த இலட்சிய முழக்கம் என்னவாயிற்று சிரமப் பட்டு கண்டு பிடித்தவர்களைப் பற்றிய விளக்கமிருக்கட்டும் இது வரை மக்கள் மன்றத்தின் பார்வைக்கு வந்து விட்ட வஞ்சகக் கழுகுகளைப் பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறீர்கள். அவர்களோ பார் உல்லாச வாழ்க்கை, சல்லாப புரிவாசம் நடத்தி வருகிறார்கள். நாங்களோ வெளியிலே சொல்ல முடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டு இருண்ட வாழ்க்கையைக் கண்டு வருகிறோம். இப்படிப் பட்ட வாழ்வு முறைகளைத் தீட்டித் தருபவர்களாகத் தான் நீங்கள் பீடமேறியிருக்கிறீர்கள். திட்டங்கள் பல போட்டாயிற்று ஆயினும் நாங்கள் பசி பட்டினியிலிருந்து மாற்றமடைந்து விடவில்லை. பல கோடிக் கணக்கான ரூபாய்கள் பாழாகிவிட்டன என்றாலும் ...நாங்கள் நாளுக்கு நாள் பின்னோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். அரும்பு நிலையிலேயே கசங்கி விடும் எங்களது மலர்க் கொடிகளைக் காணுங்கள்! தத்தளித்துக் கொண்டிருக்கும் ஜீவனைத் தாங்கிப் பிடிக்கக் கூட முடியாத நிலையிலே அணைந்து போகும் குலவிளக்குகளைப் பாருங்கள்! ஐயகோ, கண்ணீர்க் கடலிலே நாங்கள் மிதந்துகொண்

டிருக்கிறோம், பன்னீர்க் குளத்திலே உல்லாச பவனிவரும் சீமான் வீட்டுப் பிள்ளைகளுக்காக நாளுக்கொரு திட்டம் தீட்டிவருகிறீர்கள்.

"எங்களது அவலக் குரல்— உங்களது காதுகளிலே கேட்கவில்லையா? சீமான் தனது நாய்க் குட்டிகளுக்குத் தரும் சுகம் கூட எங்களுக்குக் கிடையாதே! சுடும் குளிருக்கும், விடாத பெருமழைக்கும் நாங்கள் ஒண்டியிருக்கும் குடில்களைப் பாருங்கள். தெடபமாகக் காட்சியளிக்கும் அங்கே தான் பிரசவித்த அரும்பு மலரை அருகிலே கிடத்திக் கொண்டு அந்த அபாக்கியவதி படுத்திருக்கிருள். ஏழைகளின் சிரிப்பிலேதான் சொர்க்க மிருக்கிறதென்று காந்தி மகான் கூறிச் சென்ருரே! அவர் வழி வந்ததாகக் கூறி அரசு கட்டிலை அலங்கரிக்கும் அருமை மிகுந்தவர்களே...இருக்கலாமா இந்தப்போக்கு?—உங்களது ஆட்சியிலே! இரண்டு பத்தாண்டுகளாக உங்களது விரல் காட்டும் திக்கிலே தான் ஆட்சி சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் எங்களது நல்வாழ்வுக்கானதை செய்ய முடியவில்லை. யென்ருல்—அந்தத் தகுதி, யோக்யதை திறமை உங்களுக்கில்லை...அது வேறு யாருக்கோ இருந்து தீருகிறது என்பது தானே அர்த்தமாக முடியும். எனவே நாங்கள் — வாழ வேண்டிய சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள், நீங்கள் சிலர் —நாங்கள் பலர் என்பதைத் தெரிந்து கொண்டான பிறகு ...புதிய முடிவெடுத்து விட்டோம்!",

அந்த முடிவை எழுதிடத் தயாராக இருந்த போது தான், காரணமாயிரங் காட்டி, நப்பாசை பல ஊட்டிட நினைத்தனர் நச்சு எண்ணங் கொண்டோர். தேனினு மினிய ஆசை வார்த்தைகளைக் கொட்டிக் காட்டுவதன் மூலமாகவே மக்களின் புதிய கண்ணோட்டத்திலிருந்து திருப்பிவிட நினைத்தனர். இந்த ஒரேஒரு முறை மட்டும் எங்களை நம்புங்கள் என்று கூத்தாடிப் பார்த்தனர். 'இந்த ஒரு முறை நாங்கள் விழித்

துக் கொள்ளா விட்டால் சூதுக்காரர்களே சுடுகாடு போய் விடும் எங்களது வாழ்வு. வஞ்சகக் கழுகுகளே மீண்டும் ஒரு முறை உங்களது பவனிக்கு அனுமதி தரமாட்டோம் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறி அணிவகுத்தனர். இலட்சிய முழக்கமிட்டோர். நீண்ட நெடுநாட்களாகவே அவர்கள் எண்ணிப் பார்த்து எண்ணிப் பார்த்து, தங்களது கண்ணீருக்கு முடிவுதேடிக்கொள்ள விடிவெள்ளியை எதிர் நோக்கி நின்றனர். அந்த அழகு விடிவெள்ளி தென்னகத்தின் ஒரு மூலையிலே பளிச்சிட்டு தலைதூக்கிய போதுதான் தங்களுக்கு கதிமோட்ச மளிக்கக் கூடிய கதை உருவாகி வருவதை அவர்களால் உணரமுடிந்தது. உணர்ந்த நேரத்திலேதான் இத்தனை ஆண்டுகளாக இருளிலே பயணம் துவக்கியது மட்டுமல்லாமல், நாசகாலர்களை நம்பி அவர்களைத் துணையாக் கிக் கொண்டு வழி நடந்தோமே என்று மிகுதியும் வருந்திடத் துவங்கினர்; வருந்தியது மட்டுமல்லாமல் கடந்த காலத்திய தவறுகளுக்காக இரட்டிப்பு ஆதரவைத் திரட்டுகின்ற முறையிலே அன்புரிமை கொண்டு நடந்து கொண்டனர்.

மக்களின் இத்தகைய வியத்தகு மாற்றங்கண்டு, தோழமைக் கட்சியைச் சேர்ந்த அன்பர்களும் தங்களுக்குள்ளிருந்த சிறு சிறு பேதங்களையும் மறந்து கழகம் நீட்டிய நேசக்கரத்திற்கு மதிப்பளித்தனர். ஜனநாகத்தின் குரலுக்கு மதிப்பளிக்கும் மனவள மற்றோர் இந்தப் புதுமை அணியினைக் கண்டு வழக்கம் போலவே கேலி மொழியால் சாடினர். இது குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் கவனர் உரைமீது நடந்த விவாதத்தின் போது சற்று தெளிவுபடவே விளக்கிச் சொன்னார்கள்.

கண்ணியமாக - பண்புடன் இருந்து வந்த தமிழ் நாட்டு அரசியலை 20- ஆண்டுகாலத்தில் காங்கிரஸ் இழி நிலைக்குக் கொண்டு வந்து விட்டது' இன்றையதினம் இந்த ஆட்சிக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள் இந்த அன்பை, ஒத்துழைப்பை, தேர்தல் நேரத்தில்

பாசத்திற்காக—நேசத்திற்காக வேனும் காங்கிரஸ் நண்பர்கள் வெளியிட்டார்களா ? இல்லை எத்தனை இழிமொழிகளையும், பழிச் சொற்களையும் காங்கிரஸ் மேடையில் சொன்னார்கள்.

இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை என்று நான் பேசியதற்கு காங்கிரஸ் மேடையில் பதிலளித்த ஒருவர்... அண்ணாதுரைக்கு கலியாணமாகி 20 ஆண்டுகளாகியும் குழந்தை பிறக்கவில்லை, ஆகவே அண்ணாதுரையின் மனைவி ராணி வேறு கணவனைத் தேடலாமா...என்று அந்த காங்கிரஸ் பிரசாரகர் பேசினாரே! தடுத்தீர்களா ? சகித்துக்கொண்டீர்களே, கல்லால் அடிக்க வேண்டும் என்று கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் பேசிய எங்கள் கழக அமைப்புச் செயலாளரை மூன்று லட்சம் மக்கள் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் மன்னிப்புக் கேட்கச் சொன்னேன். இது எங்கள் கழகப் பண்பாடு ஆனால், காங்கிரஸ் மேடையில் நான் மேலே சொன்னது போல தரக்குறைவான பேச்சுக்கள் பேசப்பட்டபோது என்னால் மதிக்கப்படுகிற காங்கிரஸ் தலைவர்கள் பக்கத்தில் தான் இருந்தார்கள். ஆனால் தடுக்கவில்லை. சகித்துக் கொண்டார்கள் அரசியலில் வரம்பு மீறிய பேச்சை எங்கள் மேடையில் தடுத்திருக்கிறோம்.

'ராஜாஜியை எவ்வளவு தரக்குறைவாகத் தாக்கினீர்கள்? எவ்வளவு இழிவாகப் பேசினீர்கள் ? அவன்—இவன்—என்றெல்லாம் சொல்லவில்லையா ? அவர் தியாகத்திற்கு என்ன குறைவு ? சிறை சென்றவர், தியாகம் செய்தவர் உங்களுடன் இருந்தவர் அவரையாவது தரக் குறைவாகத் தாக்காமல் விட்டு வைத்தீர்களா ? "கூட்டணியில் சேர்ந்த எங்களுடன் ஒத்துழைத்த ம. பொ. சிவஞானம் தேசத்திற்கு செய்த சேவை குறைவா ? உங்களுடனிருந்து சுதந்தரப் போராட்டத்தில் சிறை சென்று, தியாகம் பலபுரிந்து, காங்கிரசில்

பொறுப்பு வைத்தவர்தானே ! எங்களோடு சேர்ந்ததற்காக சிவஞானத்தை 'கட்டபொம்மன் எட்டப்பனாகலாமா ? என்று நோட்டீஸ் அடித்து ஒட்டினீர்களே இது தான் பண்பா ? முறையா ?

"கூட்டணித் தலைவர்களை கழுதை மேல் உட்கார வைத்துப் படம் போட்டு ஊரெல்லாம் ஒட்டினீர்களே அதை கண்டித்து ஒரு முனுமுனுப்பு ஒரு வார்த்தை சொன்னீர்களா ? காங்கிரஸை ஒழிக்க தி. மு. க வை வானர சேனைபோலப் பயன் படுத்துவேன் என்று ராஜாஜி சொன்ன போது, 'வானர சேனை என்று சொல்லி தி. மு. க. வை கேவலப்படுத்தக் கூடாது, என்று ஏதோ இந்தக் கழகத்தின் மீது பாச முள்ளது போல கண்டித்த காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியவில்லை கழுதை மீது கூட்டணித் தலைவர்களை உட்கார வைத்து படம் போடுவது தரக் குறைவு என்று "நாங்கள் ஏறியது கழுதையோ. குதிரையோ அது ஆட்சி பீடம் வரை வந்து விட்டது. இனியாவது சற்று பண்புடன் பேசும் படி, உங்கள் கட்சிக காரர்களுக்கு சொல்லிவையுங்கள் உங்களால் முடிந்தால்—உங்களது பேச்சை அவர்கள் கேட்பார்கள் என்றிருந்தால்"

இதுபோன்று அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே இரும்பு நெஞ்சங்களும் இளகிடும் முறையிலே குறிப்பிட்ட போது காங்கிரசின் திரு உருவங்களாக அங்கே அலங்கரித்தோர் தலைசாய்ந்து அமர்ந்திருந்தனர். வேதனையோடு அண்ணா அவர்கள் வெளியிட்ட சேதியை தேர்தல் நேரத்தில் காது கொடுத்த போது தென்னகம் குமுறித்துடித்தது. ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழன்னை தவமிருந்து பெற்ற செல்வத்தை; ஈடு இணையற்ற தென்னகத் தலைவனை' தாழ்ந்த சமுதாயத்தின் தலை நிமிரச் செய்த தளபதியை; மண் அடிமை தீர்க்க வந்த மங்காத மணி விளக்கை; கற்றவரெல்லாம் களிநிறைந்த உள்ளத்தோடு ஒளி மிகுந்த கண்களோடு மேலைநாட்டுப் பெரு மேதைகளான இப்சனுக்கு, ஷெல்லிக்கும், இங்கர்சாலுக்

கும் பேரறிஞர் பெர்னாட்ஷாவுக்கும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களையும் மிஞ்சுகின்ற ஆற்றல் படைத்தவர் நமது அண்ணா என்று முடிவுகட்டியிருந்த ஆற்றலரசரை விலாசம் தெரியாதவர்கள் வெளிச்சம் போட்டுக்காட்ட காங்கிரஸ் கூடாரத்திலிருந்து துதி பாடுவதை எண்ணியபோது தூயவரின் உள்ளமெல்லாம் நடு நடுங்கிப் போனது! அவ்வளவு கேடு கெட்ட முறையிலே அமைத்திருக்கின்ற அவர்களது பிரசார முறையை சாதித்த சாதனைகளை இனியும் சாதிக்க வேண்டியன பற்றைக் கூறிட வேண்டியவர்கள், அரசியல் அநாகரிகத்தைக் கற்று வந்தவர்களைப் போன்று பேசித் திரி[illegible]னர் தியாக சீலம்பற்றியும், அந்தந்த நாடுகளிலே அமைக்கப் பட்ட ராஜபாட்டை குறித்தும் விளக்கிட வேண்டிய நேரத்தை ஆ[illegible] கூறிட, அன்[illegible] செய்திட [illegible]வனியம் பற்றி விலாசிட ஒதுக்கித் திரிந்தனர். அகில உலக அரசியலின் மேம்பட்ட மட்டத்திலிருப்போர், குறிப்பாக அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடு கள் இந்த ஏழை இந்தியாவை எப்படி மதித்து நடத்து கின்றனர். அவர்கள் கொட்டிக் கொடுத்த கடனுக் கெல்லாம் திருப்பித் தருகின்ற முறையிலே என்னென்ன வழி முறைகளைக் கண்டிருக்கிறோம் என்பது பற்றியெல்லாம் விபரமாக இல்லாவிட்டாலும் சற்று மனமாறமாகவாவது எடுத்தியம்பியிருந்தால் அவர்களது பிரசார முறை பாராட்டுக் குரியதாக இருந்திருக்க முடியும். அரசியல் நாகரிகம் வளர்ந்த தாகக் கூறப்படுகின்ற மற்ற மற்ற மேலை நாடுகளில் தேர்தல் காலத்திய பிரசாரம் இதுபோன்ற கண்ணோட்டத்துடனிருந் ததைத்தான் நாமெல்லாம் கண்டதுண்டு.

குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் பயணம் செய்த மேலை நாடுகளின் தேர்தல் பிரசார முறையை அங்கே நான் கேட்டறிந்தபோது கட்சியின் திட்டங்களுக்கும், அறிக்கை களுக்கும் எத்தகைய முதலிடம் தந்து பிரசார முறையை நடத்துகின்றனரென்பதைத் தெளிய முடிந்தது. மலேசியாவில் நான் ஓரிடத்திலே கேள்விப்பட்டேன் நண்பர் மூர்த்தி சொல்

விட அங்கே செல்வாக்குப் பெற்ற எதிர்க் கட்சியைச் சார்ந்த பிரசார பலம் மிகுதியும் பெற்ற கட்சித் தலைவர் தேர்தல் காலத்திய நமது ஆவேச உரை ஆற்றுகின்ற போது, மேடையிலிருக்கும் மேசை மீது கைத்துப்பாக்கியை முன்வைத்துவிட்டுப் பேசுவாராம். முன்னே கைத்துப்பாக்கியின் துணையிருந்தும் எந்த வரம்போடு பேச வேண்டுமோ நாகரீகப் பண்போடு நடந்து கொள்ள வேண்டுமோ அந்த முறையிலிருந்து கொஞ்சமும் நழுவிவிடாமல் பார்த்துக் கொள்வார்கள். எந்த அளவுக்கு திட்டங்களை சாடிப் பேசிட முடியுமோ அந்த அளவுக்கு பிரசாரத்திலே வேகத்தைக் காட்டுவர். தேர்தல் பிரசார முறையிலே இது சற்று வேகமானதாக இருந்துங்கூட அங்கு அநாகரீகம் தலை நீட்டுவதில்லை யென்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் இந்த விந்தைதரும் பிரசார முறைகளையெல்லாம் கதிகலங்கவைத்திடும் முறையிலே நமது தேசீயத்தார் நடத்திட வேண்டுமென்று நினைத்தோ என்னவோ இங்கே அதிர்ச்சிதரும் முறையைத் தேடிப்பிடித்தனர். அகில இந்திய மட்டத்துக்கு உயர்த்தப்பட்ட பெரிய தலைவரே 'ஆளுகின்ற மூஞ்சியைப் பாரு...மூஞ்சியை' என்று வர்ணித்துப் பேசினார். தனது சுய புத்தியைக் காட்டுகின்ற நேரத்திலே எத்தகைய அகில இந்தியப் பதவி பீடத்திலமர்ந்திருக்கிறோ மென்பதை மறந்தே போனார். மன்மதக்குஞ்சுகளாகவிருந்தால்தான் அரசு கட்டிலேற வேண்டுமென்ற நியதி இருக்க வேண்டுமென்று அந்தப் பெரியவர் பேசி விட்டாரோ என்னவோ ?

தலைவரின் திருவாசகமே இப்படி யென்றால் மற்றவர்களைப் பற்றி சொல்லுவானேன் ? தரவேண்டிய கருத்து—விளக்கத்தைத் தந்து பெறவேண்டிய நல்வாக்குகளைப் பெற்றிடுவதற்கு மாறாக நடைமுறையை வகுத்த காரணத்தால் இரண்டு பத்தாண்டுகளாக தங்களது புகழ்க் கொடியைப் பறக்க விட்ட காங்கிரஸ் தமிழகத்திலே தலை தாழ்ந்த நிலையிலே தங்களது கொடி இறக்கம் நடத்துகின்ற முடிவேற்பட்டுத் தீர்ந்தது.

● ● ●

138 இடங்களில் கழகம் வெற்றி வாகை சூடி நின்றது. அரசியலிலே எவ்வளவோ ஜாம்பவான் வேலைகளைச் செய்து பார்த்தும் முடிவாக அய்ம்பதைத் தான் எட்டிப் பிடிக்க முடிந்தது காங்கிரஸ் குணாளர்களால், தென்னக மக்கள் காட்டாட்சியின் கொடூரத்தை முழுமூச்சுடன் விரட்டியடித்த மகிழ்ச்சியில் மிதந்தனர். அறுந்துவிழும் நிலையிலிருந்த நரம்புகளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டே கடைசி நேரம் வரை பாடுபட்ட கழகத்தின் இருதயமாக இருந்து காத்திட்ட கண்மணிகளையும், தோழமைக் கட்சியினரின் சலியாத உழைப்பையும் தென்னகம் நினைத்துப் பார்த்து அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தது. ஆண்டாண்டு காலமாக மண் மாதாவின் மடிமீது ரத்தத் துளிகளைச் சிந்திக் கொண்டிருந்த அக்கிரமத்துக்கு அஸ்தமனம் ஏற்பட்டுத் தீர்ந்தது.

கொடுமையும், நடு நடுங்கும் கோரமும் பெற்ற இருளுக்குப் பின்னே உதயத்தின் ஒளி மிகுந்த எழிலைக் கண்டு ஏற்ற மிகக் கொண்டனர், எழுச்சி கண்டோர். தென்னகம் முழுவதுமே ஏகோபித்த பரவசப் பள்ளுப் பாடிக் கொண்டிருந்த நேரத்திலே திருவிடத்தின் பெருந்தலைவர் அண்ணா இருக்குமிடத்திலிருந்தே தொலை பேசி மூலமாகவும், வானொலி வாயிலாகவும் வெற்றிச் சேதிதனை அறிந்திட்டபோது உடனிருந்த நண்பர்கள் பெரிதும் மகிழ்ந்து போய்க் கொண்டிருந்தனர். வெற்றி பெற்ற வீரமறவர்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டிய போது ஏக்கப் பெருமூச்சோடு அருகிருந்த நண்பர்களை உற்று நோக்கினார். மேலும் தொடர்ந்து வந்து வெற்றிச் சேதிகள் நண்பர்களைத் திக்குமுக்காட வைத்துக் கொண்டிருந்தது. ஆனால், பேரறிஞரோ அடக்கமே உருக்கொண்டு வருங்காலத்தின் பெருஞ் சுமை குறித்து கவலை கொண்டவராகக் காணப்பட்டார். நமது பெருமதிப்பிற்குரிய அருமை மிகு நண்பரும், அமைப்புச் செயலாளருமான என். வி. என் அவர்கள் இக்காட்சியினை சுவைபட விளக்கியுள்ளார். நண்பர்களின் கூட்டத்திலிருந்த அவரும் மற்றவர்களும் எத்தகைய மகிழ்ச்சியடைந்தனரென்றும் அதே போது-

அறிஞர் அண்ணா எத்தகைய மனப்போராட்டத்தோடு உலவிக் கொண்டிருந்தாரென்பதையும் தெளிவாக்கியபோது பொற்கரங்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பூமாலைக்கு அவர் தலையை நீட்டிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை யென்பது புரியும்.

மக்கள் அளிக்கக் காத்திருந்த வைரமுடிதனை ஏற்றிடுவதற்குத் தயங்கிக் கொண்டிருந்தார். மற்ற மற்ற எதிர் முகாமிலிருக்கும் தலைமையினர் இதே நிலையில் தாங்கள் சிக்கியிருந்தால் எத்தகை ஐபாதஸ்துகளுக்கும் கித்தாப்புகளுக்கும் இடமளித்திருப்பரென்பதை எண்ணிக் கூடப் பார்த்திட முடியாது. இந்த அரும் பெரும் கீர்த்தி கிட்டியபோதும் அடக்கமிகக் கொண்டு அமைதியுடன் நடந்து கொண்ட போக்கு அண்ணாவின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும். வரலாற்றிலே நாம் இப்படி ஒரு குணநலம் பெற்ற தலைவனைச் சந்தித்திருக்கவே முடியாது. சாதாரணமான சின்னஞ்சிறு பதவிகளுக்கே சிண்டு பிடித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக ஒரு மாநிலத்தையே பரிபாலணம் செய்யக் கூடிய பெருவாய்ப்புக் கிட்டுகின்ற போது எத்தகைய புயல் உருவாகியிருக்க வேண்டும்?

நேரு பெருமகனார் இருந்த போது மூத்த மந்திரிகளை வீட்டுக் அனுப்பிவைத்திடும் திட்ட மொன்றைத் தீட்டிய போது மொரார்ஜி போன்ற பெருந்தலைகள் என்ன பாடு பட்டனரென்பதை நாடறிந்த ரகசியமாகும். அன்றைய தினம் ஊராரின் கண்களுக்குப் பத்தினித் தனத்தைக் காட்டிக் கொண்டவர்கள் இன்றைய தினம் எந்த நிலையில் காட்சியளித்து வருகிறார்களென்பதையும் நாட்டவர் தெளிவான முறையிலே அறிந்து கொண்டிருக்கின்றனர். அகில இந்திய கட்சித் தலைவர் காமராஜரின் பெயரை இணைத்துக் கொண்டு காட்சியளித்த அந்தத் திட்டம் என்னவாயிற்று? ஏதோ பிரளயம் ஏற்பட்டுவிட்டது போல ஏக பிரசாரம் புரிந்தனர்

காமராசரின் திட்டம் பற்றி. K-PLAN என்று அழகுபட ஆங்கிலத்திலும் அறிமுகம் தந்து கொண்டனர். ஆனால் இன்றைய தினம் செயலற்ற முறையிலே காமராசர் மட்டும் தானிருக்கிறார் அந்தத் திட்டமோ செத்துச் சவமாகி, புதை குழியில் தனது புகழை நிலைநாட்டிக் கொண்டது. எந்த மொரார்ஜிகளை வீட்டுக்கு அனுப்பிடத் திட்டம் தீட்டி, அனுப்பியும் வைத்தார்களோ அதே மொரார்ஜியினர் செங்கோட்டையிலே சிங்கநாதம புரிந்து வருகின்றனர் பதவி சுகம் அல்ல வென்ற ஞானமார்க்கத்தைப் போதித்த அவை இந்தியத் தலைமை கூட தமது பதவியைக் காத்திட கோடிமனப்பான்மை கொண்டு அலைந்து வந்ததை நாம் கண்டறியாதவர்களல்லவே! நாட்டின் பிரமுகருக்கும் கட்சித் தலைமைக்குமே இது குறித்து மனக்கசப்பு இருந்து வந்ததை நாளேடுகளெல்லாம் பிரபலமாக்கி வந்தனவே! ஆண்டு பலவாக ஆட்சிபீடத்தில் ஒட்டிக் கொண்டு இருந்து விட்டு அலுத்துப் போய் வெளியேற வேண்டிய பருவத்திலிருப்பவர்களே பிடித்துத் தள்ளுவார் போகமாட்டேனென்று பிடிவாதம் செய்திட விரும்பிடும் போது கட்சியின் சுவையை —சுகத்தை அறிந்திடாத பால பருவத்திலிருந்து வரும் கழகத்தை ஆட்சிப் பிடிப்பில் ஈடுபடுத்த பேரறிஞர் அண்ணா தயக்கம் காட்டிய நிகழ்ச்சி எத்தகைய அதிசயிக்கத் தக்குரிய சேதி என்பதை அவனியோர் எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ந்து போகின்றனர்.

அறுந்து விழும் நட்சத்திரத் தலைவர்களும், வானவில் போல போன்று தங்களது வடிவை மாற்றிக் கொள்ளும் போக்கினரும்; போலிப் பொலிவினரும் வலம் வருகின்ற இந்நேரத்தில் உண்மையின் ஏகப் பிரதிநிதியாக நின்று உருவகம் தந்த ஆற்றலரசனை விந்தையுடன் சிந்தையிலே குடியேற்றினர். பகட்டையோ படாடோபத்தையோ நம்பிப் பின் தொடர்ந்திடாமல், துதி பாடுவோரின் தூப தீபங்களுக்கு மயங்கிடாமல், அன்புக்கும் பண்புக்கு முதலிடமளித்து

ஆளப்பிறந்த சமுதாயத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்திட்ட அவரது பொது நலப் போக்கு எந்தப் புதுமைத் தலைமைக்கும் இனிகவர்ந்திட முடியாத கலையாகும்.

தன்னைப் பற்றியும் தம்பிமார்களைப் பற்றியும் எத்தகைய உருவான பிரசாரத்தைக் காங்கிரஸ் கூடாரத்திலிருந்த அரை வேக்காடுகள் நடத்தி வருகின்றனரென்பதை அறிந்திருந்தும் மக்கட்கடலைச் சந்திக்கின்றபோது, அவர்களையுமறியாமலே பிழை செய்து வருகிறார்கள் — மன்னியுங்கள், என்று அண்ணா அவர்கள் வேண்டிக் கொண்ட பெருந்தன்மை பாவிகளுக்காக நான் சிலுவையிலே அடிபடுகிறேன்' என்ற ஏசு பெருமானின் அன்பு மொழிகளைத் தான் நமக்கெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. நமது கலைஞர் அவர்கள் இது பற்றி கல்நெஞ்சமும். உருகிடும் அளவிலே ...''என்னைப் பற்றி தரக் குறைவாகப் பேசுங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவரென்று உலகம் ஒப்பிய எனது அண்ணனை இகழ்ந்து பேசுங்கள் ; உடன் பிறவாத சகோதரர்களாக யிருந்துவரும் லட்சோப லட்சம் கழகத்தின் கண்மணிகளைக் கண்டபடி ஏசுங்கள் ஆனால் ஒன்று கூறிக் கொள்வேன் பரிதாபத்திற்குரிய எங்களைக் கட்டிக் கொண்டார்களே யென்ற தவறைத் தவிர வேறு எதையுமே அறிந்திடாத குடும்ப விளக்குகளை; அண்ணிமார்களை ஏசிப் பேசாதீர்கள், என்ற கருத்துப்பட பேசிய முறை நச்சு நினைவு கொண்டவர்களைத் திருத்திடவில்லை யென்றாலும், நல்லமனம் படைத்தவர்களின் உள்ளத்தைத் தொடாமல் போகவில்லை.

கழகக் கண்மணிகளின் மீது கசப்புணர்வைப் பொது மக்களுக்கு ஏற்படுத்திட வேண்டுமென்ற பேராசையுடன் பொய்யர்கள் வலை வீசித் திரிந்தபோது தான், துணை மேயர் கிருஷ்ணமூர்த்தியின் மீது அவதூறு நிறைந்த பிரசுரத்தை வெளியிட்டனர். தமது பெண்மைக்கு வந்து சேரும் களங்கத்தைக் கூட எண்ணிப் பாராமல் எப்படியும் கழகத்தின் துணை மேயரின் மீது பரபரப்பு மிகுந்த குற்றச் சாட்டை

சுமத்திட வேண்டுமென்ற தீய 'நோக்கத்தில் அம்மையார் ஒருவரால் வெளியிடப்பட்ட தீனக்குரலுக்கு காங்கிரஸ் பிரசார பீரங்கிகள் அதிக முக்கியத்துவம் கொடுத்து மகிழ்ந்தன. தேர்தல் பிரசாரம் உச்சகட்டத்திலிருந்தபோது பொது மக்களின் கவனமெல்லாம் தேர்தல் களத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவர்களின் தகுதி திறமைகளை, ஆக்கப்பணிகளை ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில்... இப்படி ஒரு பிரசுரத்தை வெளியிட்டனர்! தமிழகப் பெருங்குடி வாக்காளர்களே ...இப்படிப் பட்டவர்களுக்கா உங்களது வாக்கு... பெண்மையைச் சீரழித்திடும் பேயர்களை நம்பி ஏமாந்து விடாதீர்கள்...என்று எச்சரிக்கை தருவது போல 'அபயம்' தெரிவித்து வந்தனர். 'துணைமேயரின் மீது சாட்டப்பட்ட குற்றம் கற்பனை மிகுந்த ஜோடிப்பாகும். தேர்தலிலே இப்படியும் ஒரு இழிவான பிரசாரத்தை நடத்திட முடியுமென்பதை மெய்ப்பித்திட முயற்சிக்கின்றனர்'' என்று கருத்துப்பட பொது மேடைகளிலே மறுப்புரை தந்து வந்ததோடல்லாமல் நீதிமன்றத்திலே உண்மையின் சொரூபம் ஊருக்குத் தெரிகின்ற முறையிலே வழக்கும் தொடரப் பட்டது. சம்பந்தப் பட்ட நண்பர்களால்.

ஆண்டாண்டுகாலமாக ஆளுகையின் சுவையை — சுகத்தை அனுபவித்து வந்தவர்கள் இப்போது பதவிப் பீடம் கைநழுவி விடுமோ வென்ற அச்சத்தில் இல்லாதன கூறி தாங்கள் பெரும் சத்திய சீலர்களென்பதைக் காட்டிக் கொள்ள முயன்றனர். ஆயினும் நீதியின் கண்களுக்குத் திரையிட்டு மறைத்திட முடியாமல் திண்டாடித் தெருவழியில் வந்து நின்றனர். 'அடடா' இவ்வளவுதானா உங்களது யோக்யதையின் தெளிவு? ஒழுக்க சீலம் பற்றி தம்பட்டமடித்தீர்களே?· இதுதானா அந்த முழக்கத்தின் இலட்சணம்? 'என்று மக்கள் மன்றத்திலே குரல் கிளம்பியபோது பொய்யுரையால் புகழ் பெற்றிட நினைத்தோர் முக்காடிட்டு மூலை

யிலே பதுங்கினர். பொறுப்பு மிகு பதவியிலிருந்தவரின் மீது பொய்யுரைத்த குற்றத்துக்காக அந்த அம்மையாருக்கு நீதி மன்றம் தண்டனையைத்தரத் தவறவில்லை. நீதியின் தீர்ப்பு எப்படியிருந்தாலும் சரி, தம்மீது தாமே வேண்டுமென்றே தீட்டிக்கொண்ட களங்கம் எத்தகைய விபரீதத்துக்குரியதா இருந்தாலும் சரி...தேர்தல் நேரத்திலே அவர்களை நன்ருக ஏசித் தீர்த்து விட்டோமென்ற நினைவோடு திருப்தியடைய முயன்றனர்.

இது போன்ற சிறு முயற்சிகளின் விளைவாகத் தான் படு பாதாளத்திலே தள்ளப்பட்டனர். தேர்தல் முடிவுகள் வெளியாகித் தீர்ந்ததும் முன்னாள் கனம் பக்தவத்சலம் அவர்கள் தமது அதிர்ச்சி தரும் தோல்வியைக் குறித்து வருந்தாதவர் போல பெருந்தன்மையுடன் கூறுவதாக நினைத்து...'விஷக் கிருமிகள் பரவி விட்டன' என்று அதியற்புத கண்டு பிடிப்பை எடுத்துக் காட்டினர். அப்படியானல் அவரது அருமை மொழிப்படி கடந்த இரண்டு பத்தாண்டுகளாக விஷக்கிருமிகளை பரவ வைத்திடும் பணியைத்தானு ஆட்சி பீடத்தை அலங்கரித்தவர்கள் செய்து வந்தார்கள். வளர்ந்து விட்ட புதிய ஜனநாயக சக்திகளுக்கு வணங்கி விடை பெற்றுச் செல்ல வேண்டியவர், அதை மதித்திடாதது மட்டு மல்ல மிக மட்டமான முறையிலே தாக்கிடவும், துணிந்த தானது கொஞ்சநஞ்சம் மக்கள் மன்றத்திலே அவர் பெற்றி ருந்த தனி மதிப்பிலிருந்தும் வீழ்ச்சியடைச் செய்தது.

சங்கடமான அரசியலை விட்டு சங்கீதம் கேட்டிடப் போகின்றேன், நூல்கள் படித்திடப் போகின்றேன், நல்ல வேளை தமிழக மக்கள் இப்போதாவது விட்டார்களே ஓய் வினைத் தந்தார்களே என்று கூறிடும் முறையிலே தமது பாதையில் ஒரு மாற்றத்தைத் தேடிக் கொண்டதைப் போல பேசியவர், தமது சுய உருவத்தைக் காட்டிட நாட்கள் அதிக மாகிடவில்லை. 'தி. மு. கழகத்தினரை ஆட்சி பீடத்தில்

உட்கார அனுமதித்துவிட நானென்ன பைத்தியமா என்ன? என்று குட்டி இட்லரின் பாணியிலே பேசிய அகில இந்தியக் கட்சித்தலைவரின் இதயக்குரலுக்கு எதிரொலி கிளப்புவதைப் போல நடந்து பார்க்க முயற்சிகளின் துணையைத் தேடினார். துவக்க இருக்கும் தி. மு. கழக ஆட்சிக்கு வாழ்த்துக் கூறு வதில் ஆரம்பித்து, வசைபாடி நிறுத்துவதில் முடித்தனர்.

முன் அனுபவம் பெற்ற முதியவர்களே இத்தகைய சலபங் களுக்கு ஆளாகித் தீர்ந்ததால் தான் மிகப் பெருப்பான்மை வெற்றி பெற்ற கழகத்தால் தவறு நேர்ந்திடாத கச்சிதமான கணக்கை எழுதி முடிக்க முடிந்தது. செல்வாக்குப் பெற்ற வர்களென்றும், மந்திரிமார்களென்றும், ராஜதந்திரிகளென் றும், மிட்டா மிராசுகளென்றும் அலங்கரிக்கப் பட்ட பீடத் தின் மீது தூக்கிவைக்கப்பட்ட பதுமைகளெல்லாம் சட சடவெனச் சரிந்து வீழ்ந்தன.

62—தேர்தலில் பேரறிஞர் அண்ணாவை வெற்றியடைய விடாமல தடுத்திட வேண்டுமென்பதற்காக மோட்டார் மன்னர்களை வலம் வரச்செய்து; ஊரையே கூட்டி துவம்சம் செய்து விடுவதைப் போல ஆர்ப்பரித்து: பதுங்கிக் கிடந்த பணக்கட்டுகளை யெல்லாம் பறக்க விட்டு கொட்டமடித்த காஞ்சித் தொகுதியில் இந்த 67—ல் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் 33716, வாக்குகளை மட்டுமே தான் பெறமுடிந்தது. ஆனால், கழக வேட்பாளர் கிருட்டினனே 45266 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ஆர்ப்பரிப்பு முறை அறுபத்தி இரண்டோடு சரி... ஜனநாயகத்தின் கழுத்தை அழுத்தும் அந்த அராஜக முறைக்கு 67 ல் சாவு மணியடிக்கப்பட்டது.

குறிப்பாக காங்கிரஸ் வெற்றி பெற்ற இடங்களைப் பார்க் கின்ற போது ஐநூறு, ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இடங்கள் தான் பெரும்பகுதி இருந்திடும்.

பொது மக்கள் இன்னும் சற்று கண் திறந்திருப்பார்களானால் அவர்களது சகாப்தம் என்றோ முடிந்து போயிருக்கும்.

உளுந்தூர் பேட்டையில் காங்கிரஸ் 26796 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தது. அங்கே கழக வேட்பாளர் பெற்ற வாக்குகளோ 25236 ஓராயிரம் ஓட்டுகளுக்கும் கொஞ்சம் அதிகமான வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற முடிந்திருக்கிறது அதே போது சுயேட்சை வேட்பாளர் மட்டும் அங்கே 4707 வாக்குகள் பெற்று காங்கிரசுக்கு எதிரான வாக்குச் சக்தியைப் பிரித்திருக்கிறார். எதிர்ப்பு சக்தி இணைந்திருந்தால் உளுந்தூர்ப் பேட்டையிலும் உருட்டித் தள்ளியிருப்பார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தண்டரம்பத்தூரில் காங்கிரஸ் வேட்பாளர் பெற்ற வாக்குகள் 29524; கழக வேட்பாளரோ 28185 வாக்குகள் பெற்று வெற்றி வாய்ப்பினை இழந்திருக்கிறார்.

தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் காங்கிரஸ் வேட்பாளர் 34106 வாக்குகளும், கழக வேட்பாளர் தங்கவேலு 32008 வாக்குகளும் பெற்றிருப்பது கவனத்திற்குரியதாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதியில் காங்கிரஸ் திப்பையா 29709 வாக்குகளும்--கழகத்தின் தூயமணி 26736 வாக்களும் பெற்றிருக்கின்றனர்.

ஆளுங்கட்சிக்கு சரியான எதிர்கட்சியில்லை; தரமான எதிர்க்கட்சி அமையவில்லை யென்று குறைபட்டுக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு தென்னகத்திலே அந்த அரும் பெரும் பாக்கியம் இந்த 67 ல் கிடைத்தது. எதிர்கட்சியாக இன்றைய சட்ட மன்றத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரசுக்கு அதன் கண்ணியத்தைக் காப்பாற்றுவதாக அவர்கள் நம்பிக் கொண்டிருக்கும் தமிழக சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் தோழர் கருத்திருமன் சத்தியமங்கலம் தொகுதியில் பெற்ற

வாக்குகள் 25484 இடது சாரிகம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் மாரப்பன் பெற்ற வாக்குகள் 24278 அதே தொகுதியில் குடியரசு கட்சியைச் சேர்ந்த தோழர் ராஜ மாணிக்கம் 2011 வாக்குகள் பெற்றுள்ளார். ஆகவே, எதிர்க் கட்சித் தலைவரே மரண அடியில் தான் தப்பித்திருக்கிறார்.

நன்னிலம் தொகுதியில் அருமைமிகு பொதுவுடைமைத் தோழர்கள் வலது, இடது என்று பிரிந்து போட்டி போட்ட தால் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் அப்பாசாமி 10568 வாக்குகளும், இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் ராமச்சந்திரன் 19571—வாக்கு களைப் பெற்றிருந்தும் 26054 வாக்குகள் பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் தோழர் ஜெயராஜ் வெற்றிபெற்றார். முப்பதாயிரத் துக்கும் அதிகமான வாக்குகள் காங்கிரஸ் எதிர்ப்பு சக்தி களுக்குக் கிடைத்திருந்தும் வாக்குகள்பிரிந்துவிட்ட காரணத் தால் ஜெயராஜ் வெற்றிக்கனிநடப் புரிய முடிந்தது.

மன்னார் குடியிலே காங்கிரஸ் வேட்பாளர் 32481 வாக்குகளும், தி,மு. கழக வேட்பாளர் 31559 வாக்குகளும் பெற்றனர். இங்கே சுயேட்சை797 வாக்குகளைப் பெற்றி ருக்கிறார்.

கந்தர்வ கோட்டையிலும் இது போன்றே சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் காங்கிரஸ் வேட்பாளர் வாகை சூடியிருக்கிறார்.

தென்காசியில் தி.மு. கழக வேட்பாளர் 33818 வாக்கு களும் காங்கிரஸ் வேட்பாளர் 34561 வாக்குகளும் பெற்றிருக் கின்றனர்

ராதா புரத்தில் காங்கிரஸ் 31588-ம் திமு கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளர் 31040-ம் வாக்குகளாகப் பெற்ற னர்.

குளச்சலில் சுதந்திரா வேட்பாளருக்கும் காங்கிரஸ் வேட் பாளருக்கு மிடையே இருந்த வித்தியாசம் சில ஆயிரங்களே இதுபோன்ற சிறுபான்மை வாக்கு வித்தியாசத்திலே தான்

பெருமூச்சுவிட்டு சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியை எட்டிப் பிடித்திருக்கிறது காங்கிரஸ்.

தாராபுரம் (ரிஷர்வ்) தொகுதியிலே போட்டியிட்ட தோழியர் பழனியம்மாள் கழகத்துக்குப் புதியவராக இருந்தும் கூட மக்களுக்காகத் தொண்டாற்றிட வருகிருர் களென்ற பேரார்வத்தில் 42433 வாக்குகளை அளித்து பெரு வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றனர் தாராபுரம் தொகுதி மக்கள் அங்கே காங்கிரஸ் வேட்பாளராக அம்மையாரை எதிர்த்து நின்ற தோழர் வேலுச்சாமி 21800 வாக்குகளைத் தான் பெற்றிட முடிந்தது.

முறையே 1957 -- 1962 ஆக இரண்டு தேர்தல்களிலும் வெற்றிக் கொடி நாட்டிய குறிப்பிடத் தக்க காங்கிரஸ் வேட்பாளர்கள் இந்த 1967 ல் பரிதாபகரமான முறையிலே வீழ்த்தப்பட்டிருக்கிருர்கள். தோழர்கள் மாயாண்டி நாடார் ஹாஜா ஷெரிப், பக்தவத்சலம், மகாலிங்கம், குழந்தையம்மாள்., வை. சங்கரன், சின்னக் கருப்பத் தேவர், கக்கன், சேனுபதி கவுண்டர், காமராசர், கிருஷ்ணசாமி நாயுடு, தோழியர் அனந்தநாயகி ஆகியோர் இரண்டு தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடியிருந்தும் இந்தத் தேர்தலில் அசகாய சூரத்தனம் செய்தும் வெற்றி பெற்றிட முடியவில்லை. பத்தாண்டுகளாகத் தொடர்ந்து சட்டமன்றத்திலே கொட்டு முழக்கத்துடன் வலம் வந்தவர்கள் இப்போது வீட்டுக்கு வேக வேகமாக அனுப்பி வைக்கப் பட்டிருக்கிருர்களென்ருல் அதிலே பெரும் பங்கு அவர்களே தேர்ந்தெடுத்துக் கொண்ட முறையற்ற பிரசாரத்தையே சாரும் அவர்களது ஆணவப் போக்கால் ஏற்பட்ட கேடுபாடுகளை மக்கள் அனுபவித்து வரும் நேரத்தில் கேடு போக்கிட நாடு வாழ்ந்திட வீட்டுக்கும் - நாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத அளவிலே இரவென்றும் பகலென்றும் பாராது; குளிரென்றும் கொட்டும் மழையென்றும் அறியாது பாடுபட்டு வரும் மாணிக்கத் தொண்டர்களை வைரநெஞ்சு படைத்தத் தலைவர்களை வாய் கூசாது இழித்தும் பழித்தும்

கூறப்பட்ட அடாத அக்ரமத்துக்கு பொது மக்களின் பொற் கரங்கள் சரியான தீர்ப்பை எழுதி விட்டன.

இந்தத் தேர்தலில் கழகம் பாரராளு மன்றத்துக்கு நிறுத்திய வேட்பாளர்கள் 25 பேரும் ஒரு சேர வெற்றி பெற்றது அரசி யல் வரலாற்றிலேயே புதிய திருப்பமாகும். இந்தச் சாதனை யைப் பாராளு மன்றத் தேர்தலிலே கழகம் தான் சாதித்துக் காட்டியுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் களத்தில் தலை நீட்டிய தோழர்கள் அழகேசன், சுப்ரமண்யம், பட்டாபி ராமன், வெங்கட்ராமன், ராதாகிருஷ்ணன், மகாலிங்கம் ஆகியோர் அவர்களே அதிசயிக்கத் தக்க முறையிலே தோல்வி யடைந்தனர். கோடீஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் சவுந்திரம் ராமச்சந்திரன் அம்மையாரும் கழக வேட் பாளர் அன்புச் செழியனால் திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியில், பரிதாபத்திற்குரிய முறையிலே வீழ்த்தப்பட்ட தானது மோட்டார் மன்னர்களை நம்பியிருக்கும் காங்கிரசின் நப்பாசைக்கு முடிவுரை எழுதியதாகியது.

"ஆளும் பீடத்தை அலங்கரித்திட வந்தவர்களே நீங்கள் சீமான்களையும், கோடீஸ்வரக் கோமான்களையும் ஆதரித்துக் கொஞ்சுங்கள் ...நாங்கள் ஏழையின் புன்னகைக்காக இருதயத்தைத் தட விடும் நல்லவர்களை நம்புகிறோம். பட்டு பீதாம்பரங்களைத் தொட்டுக் குலவி நீங்கள் வலம் வாருங்கள், கட்டிய கந்தல் துணிகளோடு அலைந்திடும் ஏழைகளின் தோழர்களை அவர்களின் நலம் விரும்பிடும் காளைகளை நம்பிப் பின் செல்லுகிறோம்." என்று கூறிடுகின்ற முறையிலே தான் தென்னகப் பெருமக்களின் ஏகோபித்த எழுச்சிக் குரல் அமைய முடிந்தது.

காந்தியடிகள் பிர்லா போன்ற கோடீஸ்வர சீமான்களின் மாளிகைகளிலே தங்கியிருந்தாலும், பெரிய பெரிய ஆலை அதி பர்கள் அவரது சீட கோடிகளாக இருந்தாலும் அவரது

இதயம்மட்டும் எப்பொழுதும் ஏழைகளுக்காகவே துடிதுடித்துக் கொண்டிருக்கும் அந்த அரும் பெரும் தியாக சீலரான காந்தியடிகளின் பெயர் கூறி வளர்த்திடும் காங்கிரஸ் கூடாரத்தை இன்றைய தினம் முழுக்க முழுக்க ஊரை அடித்து உலையிலே போடும் உல்லாசச் சீமானின் கையிலே அடிமைச் சாசனம் போன்று எழுதித் தந்து ஒப்படைத்து விட்டனர் தேசீயத் திருக் கூட்டத்தார்.

நாசக்கரமெது நேசக்கரமெது என்று புரிந்திடாத வகையில் சின்னஞ்சிறு மழலையின் வெள்ளை உள்ளத்தோடு உலாவிய காந்தியடிகள் கும்பிடும் கரங்களுக்குள்ளே உயிரைக் குடித்திடும் கோட்சேக்களின் கைத் துப்பாக்கிகளிருப்பதைக் கூட அறிந்திடாமல் பணியாற்றிய தூயவர். அவரது ராம பஜனைக்கு வழியமைத்துத் தந்த பிர்லா கூட்டத்தினர் புன்னகை புரிந்திடும் புலியுள்ளம் படைத்தோர் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. சுதேசியம் பேசுவதன் மூலமாகவே முதலாளித்துவ முகாமுக்கு அவர்கள் வேலி அமைத்ததை காலப்போக்கிலேதான் அவர் உணர முடிந்தது.

தேசீயப் போர்வையிலே வளர்ந்த முதலாளித்துவத்துக்கு லாலி பாடிக்கொண்டிருந்தனர். அரசு கட்டிலேறியவர்கள். மத்தியப் பேரரசு இயங்கி வந்த டில்லிப் பட்டணத்திலேயே நுழைந்து கொண்டு நிர்வாகப் போக்குகளிலே குறுக்கிடும் அளவிற்கு அவர்கள் வளர்ந்தனர். பணம் படைத்த பெரும் சீமான்கள் தங்களின் தூதுவர்களாகப் பலரை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள். திட்டங்களைத் தங்களது சாதக பாதகங்களுக் கேற்பவே உருவகப்படுத்திக் கொள்ள முடிந்தது.

பண்டித நேரு இருந்த காலத்தில் தேசீயத் திட்டக் 'மிட்டியின் முன்னோடியாக இருந்த பேராசிரியர் K. T. ஷா... If you do not open your eyes, there will be revolu

tion in a form which none of us might desire dut none of us would be able to rcsist" என்று கூறி எச்சரித்தார். 1948 ம் ஆண்டிலேயே அவர் எச்சரித்திருந்தும் பழைய கண்மூடிப் போக்குகளிலேயே ஆளும் வர்க்கத்தினர் இருந்த காரணத்தினால் தான் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்திடும் போக்கு மலர முடிந்தது.

கடந்த ஆண்டில் கூட திட்டக் கமிஷன் அங்கத்தினராக யிருந்த டாக்டர் V. K. R. V. ராவ் 'MAIN STREAM' என்ற இதழில் எழுதிய அவரது கட்டுரையில் "காலத்தை உணர்ந்து திட்டமிட்டுச் செயலாற்ற முடியாது போனால் ஜனநாயக சோஷலிசத் திட்டம் நடைமுறைக்கு வராமலே போய்விடும்" என்று அழகுபடக் குறிப்பிட்டுக் காட்டியிருந்தார்.

ஜனநாயக சோஷலிசத் திட்டத்தை மனதிலே கற்பனை செய்து கொண்ட தேசியத் திருவாளர்கள் 1948 ல் ஜெய்பூர் காங்கிரசிலேயே ஒரு சில தனிப்பட்ட முதலாளிகளின் கை ஓங்கியிருப்பதைத் தடுத்து நிறுத்தி தொழில் துறையிலே குறிப்பிடத்தக்க குட்டி அரசர்களின் நிலையிலே வளர்ந்து வரும் ஆதிபத்தியத்தை ஒழித்திட வேண்டுமென்ற நினைப்பில் ஜெய்ப்பூரில் 1948 லேயே தீர்மானங்கள் உருவெடுத்தன. ஆனால் நல்லவர்களின் இதயத்திலே அரும்பெடுத்த இந்தத் திட்டம் 1954 ஆவடி காங்கிரஸில் ஜீவனற்றதாக ஆக்கப்பட்டுவிட்டது. மாதிரி சோஷலிசம் என்ற மேல் பூச்சைத் தந்து முற்போக்கின் வேகத்தைத் தடுத்து நிறுத்தினர். 1963 ல் நடந்த ஜெய்பூர் காங்கிரசிலும், 1964ல் நடந்த புவனேஸ்வர் காங்கிரசிலும் உருவகப் படுத்தப்பட்ட திட்டங்களின் சுவை ஏட்டளவில் எழிலைத் தரத்தான் பயன் பட்டன.

அந்தத் திட்டங்களின் குறை நோக்கமாகப் பிரசவிக்கப் பட்ட உருவகத்தைக் கொண்டே ஆட்சிச் சக்கரத்தைச்

சுழலவிட்டனர். வாழ்வை எதிர்நோக்கியிருந்த கோடான கோடி மக்கள் வாழ்வின் பிரச்சினைகளோடு போராடிடும் நிலை பிறந்தது. குறிப்பிட்டு விரல் விட்டு எண்ணிவிடும் அளவிலிருந்த ஒரு சில கோடீஸ்வரர்கள் மட்டுமே ஆளுகையின் தரக் குறைவால் மேம்பாடடைந்திட முடிந்தது. இந்தியத் துணைக்கண்டத்தின் பொருளாதார வளமே அவர்களது இரும்புக் கரங்களுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. சுமார் 20 குரூப்பைச் சேர்ந்த பண முதலைகள் 1951 ல் 983 கம்பெனிகளை நிர்வகித்து வந்தனர். அடுத்த ஏழுவருடங்களுக்குப் பிறகு அதாவது 1958 ல் 1073—கம்பெனிகளை அதே குழுவினர் நிர்வகித்தனர். அந்த மூலதனமும் 236 கோடியிலிருந்து 352 கோடிக்கு உயர்த்தப் பட்டது. இந்த 352 கோடியிலும் இருபது கம்பெனியில் குறிப்பிட்ட மேம்பாடுடைய பத்து கம்பெனிகளுக்கு மட்டும் 297 கோடி ரூபாய் மூலதனம் சொந்தமாகிறது. குறிப்பாக டாட்டாவுக்கு 417 கோடி ரூபாய் மூலதனம் கடந்த காலங்களில் உயர்த்தப் பட்டிருக்கிறது. பிர்லா 212 கோடி ரூபாய்க்கு உயர்த்தப் பட்டிருக்கிறார்.

இந்தியாவிலிருக்கக் கூடிய 75 கோடீஸ்வரக் குடும்பங்களின் சுகபோக வாழ்வுக்காக பல கோடிக்கணக்கான ஏழை இதயங்களின் வாழ்வு கசக்கப் பட்டு வருவதைப் பொருளாதார நிபுணர்கள் அவ்வப்போது சரியான புள்ளிவிபரங்களைக் காட்டி எச்சரித்திருந்தும், ஆளவந்த திருவாளர்கள் அந்த மாட மாளிகை வாசிகள் வாழ்ந்தால் போதும், கூட கோபுர வாசிகளின் குபேரப் பட்டிணம் வளமாக இருந்தால்- சரி என்ற போக்கிலேயேதான் நடந்து வந்தனர்.

“ கோடீஸ்வரர்களே ! கோடீஸ்வரர்களே ! இந்தியாவின் இருளகற்ற வந்த பூமான்களே ! ஆசியாவின் ஜோதிப் பிரளயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிடும் சீமான்களே

நீங்கள் வாழ்க...வளர்க!!" என்று வாழ்த்துப் பண்ணிசைத்துக் கொண்டிருந்த காரணத்தால் தனிப்பட்ட ஆலை அரசர்கள், பணமாளிகைகளின் சொந்தக் காரர்கள் இங்கே பெருகிட முடிந்தது. அவர்களிலே முக்கியத்துவம் பெற்றவர்கள் தான் அந்த இருபதுபேரும்.

டாட்டா, பிர்லா, மார்டின் பர்ன், டால்மியா, பேர்ட் ஹெல்கர், ஆண்ட்ரூ, பாங்கர், தாபர், ஜே. கே; ஸ்ரீராம், சரபுர்ஜி, கட்டாவ், வால் சந்த், மப்பட்லால், கஸ்தூரி பாய், சேஷசாயி, ராமகிருஷ்ணு, இந்திராசிங், மகேந்திரா, கிரிலோகர் ஆகிய இருபது கோடீஸ்வர பிரபுக்கள் இந்தியப் பொருளாதாரத் துறையைத் தமது ஏகபோக விளையாட்டுக் கூடமாக்கிக் கொண்டு ஆடிக்களித்து வருகின்றனர்.

டாட்டா நிர்வாகத்தினர் 53 கம்பெனிகளை நிர்வகிக்கின்றனர். மொத்த மூலதனம் 417 கோடியே 72 லட்ச ரூபாய். இதுபோக நிர்வாக ஏஜென்ஸிகளாயிருந்து 19—கம்பெனிகளையும் நிர்வகித்து வருகின்றனர்— Tatas Sons Private Limited என்ற ஸ்தாபனத்தையும், Indian Standard Metal Company நிர்வாகத்தையும் டாட்டா ஏஜென்ஸியினரே இயக்கி வருகின்றனர். கோடீஸ்வர டாட்டாவின் அருமைக் குமாரர்கள் கோலாகலமாக வாழ்ந்திடுவதற்காக Tatas Sons Private Limited தனது பங்கை நிறைவேற்றிவருகின்றனர். இங்கே குப்பை மேட்டிலே வாழும் சுப்பனின் மகன் அங்கே மூலையிலே முடங்கிப் படுத்திருக்கும் நாயோடு நாயாக பதுங்கிக் கிடக்கின்ருன். அங்கே பணமாளிகையின் சொந்தக்காரர்கள், சொர்க்க புரியிடம் பந்த பாசம் கொண்டவர்கள் தங்களது வளரும் பாம்பரைக்கு ஆக்கத்தைத் தேடித் தருகின்ற முறையிலே 'டிரஸ்ட்'டுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

பிர்லாவை எடுத்துக் கொண்டால் 151—கம்பெனிகளை 292 கோடியே 72 லட்ச ரூபாய் வரவுசெலவு நடத்தும்

நூலகம்

முறையில் இயக்கிவருகிறார்கள். அதுபோக 22 கம்பெனிகளின் மானேஜிங் ஏஜென்ஸி முறையையும், 77 கம்பெனிகளின் நிர்வாக ஆதிக்கப் பொறுப்பையும் பிர்லா ஸ்தாபனத்தினர் பங்கேற்று நடத்துகின்றனர்.

இதுபோன்றே மார்டின் பர்ன் ஸ்தாபனத்தினர் 21 கம்பெனிகளை 149 கோடியே 61 லட்ச ரூபாய் வரவுசெலவில் இயக்கி வருகின்றனர்.

பணமூட்டைகளின் சொந்தக் காரர்களாக இருந்து கொண்டு ராஜபோகம் நடத்தும் இவர்களுக்கு கோடி கோடியாக கொட்டித்தர ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் (LIC) இண்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்பரேஷன் (IFC) நேஷனல் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் —(NIDC) போன்ற பெரிய பெரிய ஸ்தாபனங்கள் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு முன் வருகின்றன. ஒருபக்கத்திலே கோடிகோடியாக வருமானம் வந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே மேலும் அவர்களது நப்பாசையைப் பெருக்கிக் கொள்வதற்காக ரத்தவெறிபிடித்த ஓநாய்களின் வேட்கை தணிவதற்காக பக்கத்துணை போல நாங்களிருக்கிறோமென்று கூறுவது போல LIC, IFC, NIDC, போன்ற நிர்வாகங்கள் நடந்து கொள்ளுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடுவதைவிட இந்தக் கொள்ளைலாப நோக்கங்கொண்டவர்களுக்கு, இந்தியப் பொருளாதாரத்தைக் கபளீகரம் செய்யும் கழுகுகளுக்குத் துணையிருப்பதிலேதான் அவர்கள் மிகுதியும் மகிழ்ந்திருக்கின்றனர்.

மகாலானோபி கமிட்டி அறிக்கையின்படி 1963 ஜூன் 30ல் IFC 127 கோடியே 7 லட்சத்துக்கு கடன் தொகை வழங்கியிருக்கிறது. கம்பெனி ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் சுமார் 143 கம்பெனிகளுக்கு கடனளித்திருக்கிறது. இது போன்ற மற்றும் 101 கம்பெனிகளுக்கு கொஞ்சம் கூட்டியும் குறைத்துமாக விரும்பிய அளவில்

தந்துள்ளது. மேலும் தலைக்கு ஒரு கோடி ரூபாய் வீதமாக 22-கம்பெனிகளுக்கு கடனுதவியளித்துள்ளது. பத்து லட்சத்துக்குக் குறைவான கடன்துகையை 32 கம்பெனிகளுக்கு வழங்கியிருக்கிறது. மார்ச் மாதத்துக்குமேலே (1963) NIDC மட்டும் 3 கோடிக்குமேல் பெரிய கம்பெனிகளுக்குத் தந்துதவியிருக்கிறது.

1959 டிசம்பர் 12-ம் நாள்முடிய 81 கோடிரூபாய் LIC கடனுதவியாகத் தந்துள்ளது. மகாலானோபி கமிட்டியின் ஏழு வருடத்துக்கு முந்திய கணக்குகளே இவ்வளவு கடன் துகைகளைப் பற்றிய பட்டியலை விளக்கியிருக்கிறதென்றால் இப்போதைய நடப்புக் கணக்கைப் பார்த்தால் பல நூறு மடங்கு பெருகியிருப்பதைக் காணலாம். நாட்டின் பொருளாதார நிபுணர்கள் இதுபற்றிய குறிப்புகளை அவ்வப்போது எடுத்துக் காட்டி எச்சரித்து வந்துள்ளனர். சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞரான R. K. கார்க் போன்ற மேதைகள் இந்தியப் பொருளாதாரத் துறையிலே குறிப்பிடத்தக்க சில பெரிய புள்ளிகள் ஆக்ரமித்துக் கொண்டு தனிப்பட்ட முதலாளித்துவ சாம்ராஜ்ஜியத்துக்கு வழிவகுத்து வருவதை எடுத்துக் காட்டிவந்திருக்கின்றனர்.

டாக்டர் K. R. ஹஜாரி 'Economic Weekly' இதழில் எழுதிய கட்டுரை வாயிலாகவும், டாக்டர் S. C. குப்தா 'Century' இதழில் எழுதிய கட்டுரையின் வாயிலாகவும் இந்த ஆக்கிரமிப்புத் தீமைகளைப் பற்றி விளக்கியிருக்கின்றனர். நிபுணர்களின் எச்சரிக்கை பற்றியோ, நாட்டின் முற்போக்குத் தலைவர்கள் குரல் கொடுத்து வந்தது பற்றியோ கவலை எடுத்துக் கொள்ளாமல் தமது எதேச்சதிகார நினைவோடு நடந்து கொண்ட காரணத்தால் தான் பொருளாதார வளத்தில் சில பிரபுக்களின் ஏற்ற இறக்கத்தை வைத்து மேம்பாட்டை மதிப்பிடும் நிலை பிறந்தது. இன்சூரன்ஸ் கம்பெனிகளும், பெரிய பெரிய வட்டி வேந்தர்கள் நடத்திய வங்கி

களும்; அரசினர்வங்கியும் கட்டுக்கடங்காத தொகைகளை அள்ளிக்கொடுத்த காரணத்தால் தான் தனவந்தர்கள் அங்கே தனிக்கொடியை நாட்டிக் கொள்ள முடிந்தது. உலக வங்கியைச் சேர்ந்த நண்பருடன் நான் உரையாடிக் கொண்டிருந்த போது, இந்தியப் பொருளாதார நிலையின் நோய்பிடித்த தன்மையை நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. வங்கிகள் தேசிய உடமையாகிவிடக் கூடாதென்ற காரணத்தால் வட்டிக்கடை வேந்தர்கள் இன்றைய மத்தியப் பேரரசின் எண்ணத்தை எப்படியெல்லாம் மாற்றிடவேண்டுமோ அப்படி மாற்றிவருகின்றனர். சமூகக்கட்டுப்பாடு என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு சமுதாயத்தைச் சீரழிக்கும் வழிகளைக் கண்டுவருகின்றனர்.

இந்திய நாணயமதிப்புக் குறைந்ததன் மூலமாக பொருளாதாரவளம் படுபாதாளத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அப்போது நாணயமதிப்புக் குறைப்பு வந்தபோது சற்று முணு முணுத்துப் பார்த்தது. உள்ளே இருப்பதை வெளியே சொல்ல முடியாத ஒரு வேதனையான நிலை தலைவருக்கு. தலைவரைக் கலந்து பிரதமர் முடிவிற்கு வரவில்லை என்பது நாட்டுக்குத் தெரிந்தால் மகா கேவலமாகுமென்பதை உணர்ந்து சிலநாள் வாய் மூடிப் பார்த்தார் தலைவர். ஆனாலும் ஊர் என்ன சொல்லுகிறதென்பதைத் தெரிந்தானபிறகு அரசு பீடத்தை நோக்கி சற்று முணு முணுப்புக் காட்டுவதைப் போன்று பட்டும் படாமலும் ரோஜா மலரின் மீது இரண்டொரு சொட்டு நீர்த்துளிகளைத் தெளிப்பதைப் போன்று வார்த்தைகளைக் கொட்டினார். K-Plan புதைக்குழிக்குப் போய் விட்டபிறகு இந்திய அரசு பீடத்தை துணைப் பிரதமர் நிலையிலிருந்து அலங்கரித்த மொரார்ஜி தேசாய், பல ஆயிரக் கணக்கான பொற்கொல்லர்களின் வாழ்வைப் பொசுங்கும்படி செய்த நாஜி ஈச்மெனின் மறு பிறவி அரசு கட்டிலேறும் போதெல்லாம், நாணய மதிப்புக் குறைப்பிற்கு

'ஆமாம்—சாமி' போட்டுக் கொண்டிருந்து விட்டு, லண்டன் மாநகரின் விமானநிலையத்தில் நிருபர்களுக்களித்த பதிலின் போது இந்திய நாணய மதிப்பின் குறைப்பை சாடிப் பேசியிருக்கிருர். தான் ஆட்சிபுரிகின்ற அரசின் அதிகாரபூர்வமான திட்டங்களை அவரே தாக்கிப் பேசிடும் ஒரு சூழ்நிலை உருவெடுத்ததைக் கண்ட அரசியல் வல்லுநர்கள் இந்திய அரசின் குழப்ப நிலையை யூகித்து அறிந்து கொள்ள முடிந்தது.

நாணய மதிப்பின் குறைப்பு தேவையற்றது. ஏகாதிபத்திய ஏவலர்களின் கட்டளைக்கு அடிபணிந்து இந்த வேதனைக் குரிய முறையைப் புகுத்திடுகின்றனரென்று பொருளாதார மேதைகள் குறிப்பிட்ட போது, பதிலடி கொடுத்து வந்த தேசீயக் கூட்டத்தார் நல்லறிஞர்கள் கூறியதைச் செவி மடுக்காத காரணத்தால் ஏற்பட்ட வீழ்ச்சியை இப்போது அனுபவித்து வருகின்றனர்.

ஏற்றுமதி பெருகிடுவதன் மூலமாக பொருளாதாரம் சீரடையு மென்று நம்பினர். விளைவோ நேர் எதிராக அமைந்தது. ஏற்றுமதி 700 கோடிக்குமேல் இப்போது குறைந்து விட்டது. அதே நேரத்தில் இங்குள்ள வளத்தை வகைப்படுத்துகின்ற முறையில் தொழிற் கூடங்களுக்கான மேலைநாட்டு கருவிகளை இறக்குமதி செய்கின்றபோது அவற்றின் மதிப்பு பயங்கரமான முறையில் ஏற்றமடைந்து விட்டது. 386 · 87 கோடியிலிருந்து 460 · 95 கோடியாக இறக்குமதிப் பொருட்களின் விலை உயரும் நிலை வந்தது. இந்திய அரசினருக்கு ஆலோசனை கூறியவர்கள் 75% நாணய மதிப்பைக் குறைக்கும்படி கூறினர். இப்போது அரசு குறைத்திருப்பதோ 57 · 5% குறைத்துள்ளனர். இப்போதே இந்தத் தடுமாற்ற மென்ருல் அந்த ஆலோசனை முழுவதையும் ஏற்றிருந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டிருக்குமோ ?

பொருளாதார நிலை இத்தகைய சீர் கேட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறது. அதனது வேகமான அழிவைத் தடுத்து நிறுத்துகின்ற முறையிலே வங்கிகளின் மீது சமூகக் கட்டுப் பாடு என்ற மாய் மால நாடகத்தை ஆடாமல் வங்கிகளைத் தேசிய உடமையாக்குங்கள் இல்லையேல் அங்கே எடுப்பதற்கு எதுவுமே இல்லாமல் கஜானாக்களைத் திவலாக்கிவிடுவார்க ளென்று முற்போக்குத் தலைவர்கள் எச்சரித்து வருகின்றனர். இங்கே இருக்கக் கூடிய ஐந்து வங்கிகள் மட்டும் 32% மூலதனம் போட்டிருக்கின்றன. அதாவது 36·52 கோடியே 58 லட்சம் ரூபாய் போட்டுள்ளனர். இந்த வங்கிகள் 572 பெருமுதலைகளுக்கு 1400 கோடிவரை கடன் தந்து உதவி யிருக்கின்றனர். 503 தொழிலதிபர்களுக்கு 1660 கோடி வரை தந்துதவியுள்ளனர். 30 அதிபர்களுக்கு 194 கோடி வரை தந்திருக்கின்றனர் எனவேதான் ஒரு சில கோடீஸ் வரர்களுக்கு மட்டும் வசதியளிக்கும் திட்டங்களை ஏற்படுத்தித் தரும் இந்த வங்கிமுறையை நாட்டுடமையாக்கினால் பசி பட் டினியால் வாடிக் கொண்டிருக்கின்ற பாட்டாளிப் பெருமக் களுக்கு வாழ்வளிக்கும் முறைகளைப் புகுத்திட முடியும். ஆளப்படுகின்ற மக்களுக்காகத் தான் அரசு என்பதை சட்ட பூர்வமாக ஒப்புக்கொண்டிருப்பவர்கள் விரல்விட்டு எண்ணி விடக் கூடிய திமிங்கலங்களுக்கு ஆதரவளித்திடும் முறை ஜனநாயகத்தின் கழுத்திலே கை வைத்து அழுத்துவதாகத் தான் அமைய முடியும். பட்டுப் பீதாம்பரங்களையல்ல அரை மேனியையாவது மறைத்துக் கொள்ள கட்டத் துணியிருந்தால் போதுமென்று கூவியழுது கொண்டிருக்கும் ஏழையரின் வாழ் வினை உயர்த்திட வேண்டியவர்கள் சூதுக் கோட்டையின் வாசல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டிருந்த சுந்தரர் களுக்கு வழிவகை செய்து கொண்டிருந்தார்கள்.

"'மருத்துவ மனையிலே மரண மூச்சு விட்டுக் கொண்டி ருக்கிறாள் எனது மனைவி. இதோ வாழ முடியாத சமுதாயத்

திலே வந்து பிறந்து விட்ட எனது செல்வங்கள் சாகத் துடித்துக் கொண்டிருக்கும் ஜீவனின் காலருகே நின்று கதறிக் கொண்டிருக்கின்றன. விலை மதிக்க முடியாத அவளது வாழ்வின் சொத்தாக மதித்திருந்த இதோ இந்தத் தாலியை அதோ அந்த பாங்கியை நோக்கி எடுத்துச் செல்லுகிறேன், அதை அடமானமாக்கி பணம் பெற்றுச் சென்று அவளை அந்த நல்லவளை வாழவைத்திடத் துடிக்கிறேன். என்று ஓட்டமும் நடையுமாகக் கூறிக்கொண்டே செல்கிருனே அவன் வங்கியிலே பொருளுக்குரிய துகையைப் பெற்றிட முடிகிறதா ? அவனைப்போன்ற ஆயிரமாயிரம் வாழ முடியாது வாழ்வு ஒடிக்கப்பட்டுள்ள நிலையிலே இருந்திடுவோர், முகத்திலே புன்னகையை இழந்த நிலையிலே பொன் நகையைக் கொட்டித் தருவோர் உரிய தேவைப்பட்ட கடனைப் பெற்றிட முடிவதில்லை. இதே நேரத்தில் ஆலை அரசர்களும்; மோட்டார் மன்னர்களும், மிட்டா மிராசுகளும் பேனவினால் இழுக்கப் பட்ட கையெழுத்தின் மைகாய்ந்து போவதற்குள் ... லட்சக் கணக்கான ரூபாய்களைக் கடனாகப் பெற்று விடுகின்றனர். எந்த வங்கிக்குச் செல்வதற்காக கை அழுத்து கால் அழுத்து நீண்ட பெரிய வாசல் படிக்கட்டுகளில் பெரு மூச்சோடு ஏறி இறங்குகிருனே அதே வங்கியின் முன்னே பளபளப்புக் குறையாத காரிலிருந்து இறங்கிடும் சீமான் பெரிய பண மூட்டையோடு திரும்புகிருன். இதைக் காணுகின்ற போது தான் ஏழையின் இதயத்தில் எரிமலை கனலெடுக்கின்றது. அவனது கண்களிலே புத்தொளி பிறக்கின்றது. அதே போது ஆள வந்தவர்களைப்பற்றிய சந்தேகமும் சஞ்சலமாக உரு வெடுக்கின்றது. புள்ளி மானுக்கு வலைவிரிக்கும் அந்த வஞ்சகப் புரட்டர்கள் வரட்டும் வரட்டும் என்றுவது நமது திருப் பார்வையிலிருந்து தப்பிவிட முடியாதல்லவா ? அப்போது வட்டியும் முதலுமாகச் சேர்த்து கணக்கை முடித்து விடுவோம் என்றெல்லாம் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் கூத்தாட காத்திருந்து...காத்திருந்து புதுக்கணக்குப் போட்டு

விட்டனர். மேட்டுக் குடியினரின் புன்னகையும், சமய சந்தர்ப்பத்திற்கேற்ற உபசாரப் பேச்சும் வாஞ்சையும் அவர்களைக் காப்பாற்றிட வில்லை. நாட்டின் நலம் விரும்பிய நாயகர்களே எதிர்பார்த்திடாத அளவில் புரட்சி கரமான மாற்றம் ஏற்பட்டுத் தீர்ந்தது. பலமான அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்பட்ட தென்று பாரெங்கும் தம்பட்ட மடிக்கப்பட்ட ஆதிபத்திய மாளிகை தூண் வேறு நிலை வேருக ஆடி ஆட்டங் கொடுத்து வீழ்ந்தது.

"இது எப்படிப்பட்ட கவர்ச்சி பதிந்த மாளிகை தெரியுமா ? இந்தக் கவர்ச்சிக்காக எத்தனை தியாக சீலர்கள் தங்களது அரும் பெரும் உயிரைப் பணயம் வைத்திக்கிருர்களென்பது புரியுமா ? லாலா லஜபதி ராயென்ன ! பால கங்காதர திலகரென்ன ! மோகன்தாஸ் காந்தியென்ன ! மோதிலால் நேரென்ன !...இவர்களைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தேசபக்த திலகங்களின் அரும் பெரும் உழைப்பால் உருவாக்கப்பட்ட எழிலும் ஏற்றமும் நிறைந்த மாளிகையாகும். இது ஆட்டங்கண்டு விடுமென்று பேசி வரப்படுகின்ற பேச்சானது கற்பனை வளம் மிகுத்த பேச்சாகத்தானிருக்க முடியும். வான் முட்டுகின்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ள இந்த மணி மாளிகையைக் கண்டு, மாடத்தையும் இதன் சிறப்பு மிகு கூடத்தையும் கண்டு எரிச்சல் மனம் கொண்டோர் மட்டுமே அதன் கீர்த்திதனைக் குறைத்து மதித்திட முடியும். இதன் பலமான தன்மையும, கீர்த்தி குவிந்த நேர்த்தியும் எதிரிகளுக்குப் புரிந்திருப்பதால் ஆகாதன கூறி ஆதரவைத் திரட்டிட முயலுகின்றனர். ' என்றெல்லாம் தூக்கி வைத்துத் துதிபாடப்பட்ட எதேச் சதிகார மாளிகையைத் தான் ஏழை எளிய உருவங்களின் திருக்கரங்கள் இடித்து உடைத்துத் தரைமட்டமாக்கித் தீர்த்தன. முடியுமா ?' என்று சவால் தந்தவர்கள் மூலையிலே பதுங்குகின்ற அளவிற்கு நிலைமை வளர்ந்தது.

யாருக்காக உழைப்பினை நல்கிட வேண்டுமோ அவர்களுக்காக உழைத்திடாமல் யாருடைய நன்மைகளுக்காகத் திட்டங்கள் தீட்டிட வேண்டுமோ அவற்றைச் செய்திடாமல் படுபாதகமான விளைவுகளை ஏற்படுத்தி தந்த அரசு பீடத்தினர் தேர்தல் காலங்களிலே மட்டும் முழுக்க முழுக்க உழைப்பின் உருவங்களை நம்பினர். நடைபாதையிலே குடும்பம் நடத்திய அந்த நாதியற்றவர்களை அப்போதுதான் கண் கொண்டு பார்த்திட முடிந்தது அவர்களால், பெரிய புள்ளிகளின் பக்கமே அதுவரை திருப்பப் பட்டிருந்த அவர்களின் திரு முகங்களெல்லாம் அவசர அவசரமாக அப்போதுதான் திருப்பப்படும். பெரும் நிலச் சுவான்தார்களுக்கும் ஆலை அதிபர்களுக்கும் என்னென்ன குறைபாடுகளிருந்து வருகின்றன. வங்கியிலிருந்து வட்டிக்குப் பணம் தட்டாமல் வந்து சேருகின்றதா என்றெல்லாம் ஒழுங்கு பட கவனித்து வருவோர், கேள்வி கேட்பாரற்று நடைப்பிணங்களாக நாட்களைத் தேய்த்த நாட்டின் நாயகர்களை எண்ணிக் கூடப்பார்க்கவில்லை. பிரபுக்களின் பாரம்பரியம் சீர்கேடு அடைந்து விடாமல் பார்த்துக் கொள்வதிலே தான் மிகுதியும் விருப்பங் காட்டி வந்தனர். பிர்லா போன்ற பணம் படைத்த சீமான்களின் கோபக் கனல் எங்கே தங்களது ஏகபோக சாம்ராஜ்ஜியத்தை சுட்டெரித்து விடுமோ வென்ற கலக்கத்தோடுதான் அவர்களின் கடைக் கண் வீச்சுக்கு பயந்தனர், நீட்டிக் காட்டிய சுட்டு விரலின் பக்கம் பாய்ந்தனர்.

பிர்லாவின் கம்பெனிகளுக்கு 375 லைசென்சுகளை வெளிநாட்டு இறக்கு மதிக்காக அளித்தனர். 384 கோடி மதிப்புள்ள ... Viscose Yarn; Nylon; Raoyn Aluminium போன்ற பொருட்களை வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்துகொள்வதற்காக அந்த லைசன்சுகளை வழங்கினர். தனிப்பட்ட முதலாளிகளின் கை ஓங்குவதைத் தடுத்து நிறுத்துவோமென்று தீர்மானம் போட்டு நாட்டுக்கு விளக்கிக் கூறியவர்கள் தனிப்பட்ட பண முதலையான பிர்லாவின் இரும்புக்

கரங்களை பலப்படுத்தும் முறையிலே காரிய மாற்றிடத் துணிந்தனர். 384 கோடி மதிப்புள்ள வெளிநாட்டு சரக்குகளை இறக்குமதி செய்து கொண்டு அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய கோடிக் கணக்கான ரூபாய் லாபத்தைத் தனிப்பட்ட முதலாளிகள் அடைவது எந்த விதத்திலே ஜன நாயகத்தை வளர்த்திட உதவிடு மென்று நாமறியவில்லை. சிறு சிறு பணம் படைத்தவர்கள் தொழில் துறையிலே முன்னேற்றங்காட்ட வேண்டு மென்ற நோக்கத்தில் ஒரே ஒரு லைசென்சுக்காக ஏற்றுமதி இறக்குமதி அலுவலகங்களைச் சுற்றி சுற்றி வலம் வந்தாலும் கிடைத்திடாத சூழ்நிலை இருந்திடும்போது இந்த பிர்லாவின் கூட்டாளிகளுக்கு மட்டும் மிகமிகப் பெரிய தொகைக்கு, எண்ணிக்கையில் அதிகமான லைசென்சும் கிடைக்கிறதென்றால் அவர்களது ஆளுகையின் கீழ்தான் அரசுபீடமே பம்பரமாகச் சுழன்றுகொண்டு வருவதை உணர முடியும். இந்தப் பக்க பலத்தை அவர்கள் நம்பியிருக்கும் போது ஏழையர் இதயம் இவர்களைப் பற்றி ஏன் சிந்திக்கப் போகிறது. அதன் விளைவாகத்தான் இவர்கள் என்றுமே மீளமுடியாத படுபாதாளத்திலே வீழ்ந்தனர்.

தேர்தல் காலங்களிலே தேனொழுகப் பேசிவரும் இவர்கள் அவர்களது கொள்கைகளால்—நடைமுறைத் திட்டங்களால் குட்டி சாம்ராஜ்ஜியவாதிகள் பெருகிவந்ததைக் கட்டுப் படுத்த நினைத்ததே இல்லை. தேர்தல் களத்திலே காங்கிரஸ் கட்சி குதிக்கத்தயாராகியதும் அதனது நடுநடுங்கும் கால்களை பலப்படுத்துபவர்கள் இந்தப் பணப் பெரும் முதலைகள் தான். முதன் முதலாகப் பண நாதன் அருளியிருப்பதாகக் காட்டிக்கொள்வார்கள். பெருநிதியை அள்ளி அள்ளிக் கொடுத்து அசந்து போகச் செய்துவிடுவார்கள். பாராளுமன்றத்திலே மத்திய அமைச்சரவர்கள் உறுப்பினரொருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது பெருநிதியளித்த

வர்களின் பட்டியலை ஓரளவிற்கு வெளியிட்டார். ஆளும் பீடத்திலே இருந்த காங்கிரஸ் கட்சி ஆலை அரசர்களிடமும், சீமான்களிடமும் இரண்டு கைகளையும் நீட்டி நீட்டி வாங்கிய கதையை அமைச்சர் கூச்சத்தினிடையே வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அமைச்சர் கூறிய விபரத்தில் பெரும்பகுதி வெளிச்சம் போட்டுக் காட்டப்படாவிட்டாலும் அவருக்குக் கிடைத்த வரை கணக்காகக் குறிப்பிட்டுச் சொன்னார்.

Century Spinning & Weaving Company
Rs 8 லட்சத்து 75 ஆயிரம்
Hindustan Aluminium Corporation Ltd
= 2 லட்சத்து 15 ஆயிரம்
Bombay Dyeing & Manufacturimg Co Ltd
= 1 லட்சத்து 75 ஆயிரம்
Madurai Mills Ltd = 1 லட்சத்து 10 ஆயிரம்
Dalmia Cement (P) Ltd = 75,000
Escorts Ltd = 70,100
Buckingham & Carnatic Mills Ltd and
Shri Amb-ica Mills Ltd (Each) = 50,000
Anil Starcih products 35,000
Aruna Mills, RaiPur Mfg Co And Ashoka Mills (Each) 30,000
Saraspur Mills = 25,000
Straw Products 25,000
Aditya Mills = 24,000
Krishna Mills = 21,000

அமைச்சரவர்களின் திரு வாயின் மூலமாகப் பாராளுமன்றத்திலே ஓரளவு தான் பட்டியல் தரப்பட்டிருந்தாலும் உண்மையின் சொருபத்தைப் புரிந்து கொள்ளாத நிலையிலில்லை மக்கள். எத்தனை எத்தனை கோடிப்பணம் காங்கிரஸ் தேவதை

யின் பாதங்களில் கொட்டப்பட்ட தென்பதை அவர்கள் அறியாதவர்களல்ல தொழில் துறையிலே ஈடுபாடு கொண்டுள்ள சீமான்களின் பணநோட்டுகளை வைத்தே அன்றாட வாழ்வுக்காக வதைபடும் இநயங்களை விலைபேசி விடலாமென்ற முடிவில் தான் தேசீயத் திருவாளர்கள் இருந்தனர். அதன் காரணமாகவே தான் இவைபோன்ற பெருநிதிகளை முதலாளித்துவக் கோட்டைக்கு விரைந்து சென்று பெற்றனர். இப்படி நம்மிடம் வலிய வலிய வணங்கி வந்து போகும், திருக்கூட்டத்தார் அரசுபீடத்தை அலங்கரித்தால் தான் நமது ஆதிபத்தியத்துக்கு ஆபத்து சூழ்ந்திடாத நிலை ஏற்படும் என்ற நினைப்பில் கோடீஸ்வர சீமான்கள் ஒன்று கேட்டால் பத்தாக அள்ளித்தர முன்வந்தனர்.

இந்தத் துணிவை முன்வைத்துத்தான் அரசுபீடத்தையே பணம் படைத்த சீமான்கள் ஆட்டிப் படைத்து வந்தனர். சட்டத்திற்கு உட்பட்ட, வெளிப்பட்ட சலுகைகளைப் பெறுவதிலே முதன்மையாக நின்றனர். வேண்டுமென்றே புரிகின்ற தவறுகளுக்கு நிச்சயமாக தண்டனை கிடைத்திடாதென்ற தெம்பும் அவர்களுக்கு இருந்து வந்தது. நமது வாசல் கதவுகளைத் தட்டி வெள்ளிக் காசுகளுக்காக பல் இளித்து நிற்பவர்கள்தானே என்ற நினைப்பில் அவர்களது போக்கு அமைந்தது.

பிர்லா போன்றவர்களுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய் மதிப்பில் லைசென்சுகளை வழங்குகிறார்களென்றால், தேர்தலுக்குப் பணநோட்டுகளைக் கட்டித் தரும் சீரிய செயலைக் காரணமாகக் கொண்டுதான் அது முடித்து வைக்கப்படுகிறது. 'கோடி கோடியாக எனக்கு லாபம் வந்து குவிந்தால் தானே உங்களுக்கு அள்ளி அள்ளித் தர முடியும்' என்று அவன் அலட்சியத்தோடு கேட்பதால் தான் ஒன்று இரண்டோடு நின்று விடாமல் நூற்றுக் கணக்கான லைசென்சுகளை அவன் பெற்றிட முடிகிறது. டால்மியா

விடமும், பக்கிங்ஹாம் கர்னுடிக் நிர்வாகிகளிடமும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெருநிதியாகப் பெறுகிறார்க ளென்றால் அந்த ஆலைச் சீமான்களெல்லாம் இரத்த வேட்கை கொண்ட ஓநாய்களைப் போல அலைந்து திரிகின்றனர். எந்த எந்தப் பெர்மிட்டைவைத்து எப்படி யெப்படியெல்லாம் லாபம் குவித்திடலாமென்ற ஆசை அலைமோதி அலைபவர்கள் சில லட்சத்தைத் தந்து விட்டுப் பல லட்சத்தை ஆதாய மாகப் பெற்றிட அவர்கள் துடிதுடித்து நிற்பதால் தான் அவர்கள் விரும்பியது முடித்துத் தர முன்கர மெடுக்கின்றனர்.

இந்திய கோடீஸ்வரர்களின் வரிசையில் அங்கம் வகித் திடும் பிர்லா ஒருவர் மட்டும் தமது நிர்வாகத்தின் கீழ் பல பங்குதாரர்களைக் கண் துடைப்புக்காக சேர்த்துக் கொண்டு தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு தமது தொழில் துறை களின் மூலமாக உதவி நிவதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு வருவதை மத்திய அரசு பீடம் அறியாததல்ல.

Arun Textile Mills
Arya Prakash (P) Ltd
Bengal Rubber
Burlap Dealers
Central India Industries
Dholpur Industrial And Mercantile Corporation
Ganesh investment
Gobind Sugar
Gwalior commercial
Gwalior industrial Bank
Himalayam products
Hindustan cellulose and paper mills
Indore Exporting & Importing
Indore Products (P) Ltd

Industrial Trust
Jamna Investors (P)
Kuver Investment
Motor Trading
Merchandise and stores
Pilani Investment corp.
Punjab Ginning and Pressing
Punjab produce and Trading
Rajasthan Industries
Saurashtra chemicals
Sitaram Bhandar
Svtlej Cotton Mills
Ujain General Trading

பிர்லா சம்பந்தப்பட்ட பங்குதாரர்களைப் போட்டுக் கொண்டு நடத்தப்படுகின்ற மேலேயுள்ள நிர்வாகங்கள் தனிப் பட்ட பணம் படைத்தவர்கள் பகட்டோடு வாழ்வதற்குத்தான் வழிவகைகளைத் தேடித்தருகின்றது; இந்தியத் தொழில் துறைக்கு ஒத்துழைப்புத் தருகிறேனென்று கூறுவதன் மூல மாக லைசென்சுகளை வேறு யாருக்கும் சுலபத்திலே போய்ச் சேராத அளவிற்கு தாங்களே கைப்பற்றிக் கொள்வதற்காகத் தான் அந்தத் தேசியத் திரையைப் பயன் படுத்திக் கொள்ளு கிறார்கள். தமக்கு வேண்டப்பட்டவர்களைப் பங்குதாரர் களாகப் போட்டு நிர்வாகத்தின் வருமானத்தையும் பங்கிட்டுக் காட்டி வருமான வரி அதிகாரிகளின் கண்களிலே மண்ணைத் தூவுவதற்காகத்தான் அத்தனை கம்பெனிகளையும் பங்கு முறை யிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு முறைதான் அப்படியே தவிர உண்மையில் ஆராய்ந்து பார்க்கின்ற போது பங்குதாரர்கள் பற்றிய விபரம் கூடச் சரிவர அதிகாரிகளுக்கு கிடைப்பதில்லை. திடீரென சோதனையிடும் அதிகாரிகள் அந்தத் தில்லுமல்லுகளை

உணர முடிகின்றது. ஆனுல் பரிதாபத்திற்குரிய அவர்களும் வாய் பேசாத ஊமைகளாக்கப் படுகின்றனர். பணம் படைத்த ஆலேச்சீமான்கள் தேசியத் திருவாளர்களின் பெரு நிதிக்கு எந்த வகையில் உதவினுர்களோ, அதே போன்று ங்களது பணபலத்தின் அஸ்திவாரத்தின் துணையைக் காண்டு பலரை பாராளுமன்றத்தினுள்ளே தங்களது ஏகப் பிற தி நிதிகளாக அனுப்பியிருப்பதை தங்களுக்கொரு வரப்பிர சாதமாகவே கருதி காரியமாற்றினர். எந்த ஒரு ஆலேயிலோ அல்லது கிடங்கிலோ சோதனே போடப் படுவதற்கு முன்னதாகவே அந்த ரகசிய சேதி நிர்வாகிகளுக்குப் புரிந்து தப்பித்துக் கொள்வதற்காக வழி வகைகளேத் தேடி விடுகின் றனர் 'ஆமாம்' சாமிகளாகத் தலேயாட்டிக் கொண்டிருக்கும் அவர்களது ஏகப் பிரதி நிதிகள் இந்த நிகழ்ச்சியில் சூடு பிடித்தது போல பரபரப்புக் காட்டி விடுகின்றனர். பண நாயகர்கள் பலவழிகளிலும் தங்களுக்குப் பக்கத் துணேயாகப் பாது காவலர்களே ஏற்பாடு செய்து வைத்திருப்பதால் தப்பி விட ஏது வாகிறது.

அதிலும் குறிப்பாக தேசீய முலாம் பூசப்பட்ட பாணியில் தமது நடவடிக்கைகளே ஏற்படுத்திக் கொள்வதால், கண் காணிப்பு செய்யும் யாருமே சற்று நேரம் மயங்கி விடும் சூழ் நிலேயும் பிறப்பதுண்டு! 'பிர்லா, பஜாஜ், டாடா, டால்மியா போன்றவர்கள் தேசிய எழுச்சி முழக்கம் ஒலித்தபோது ஒன்று சேர்ந்து உருவகப் படுத்தியவர்களிலே பங்கேற்றவர்கள் காந்தியடிகள் கை நீட்டிக் காட்டிய அறவழிப்பாதையில் நடப்பவர்களென்று விளம்பரப் படுத்தப்பட்டவர்கள் இவர் களிடம் தப்பு நடந்து விடுமா என்ன? சொந்த சுகத்தை மட்டும் இவர்கள் பார்ப்பதில்லே தேர்தல் காலங்களிலே என்று மட்டு மில்லாமல் தேச நலனுக்குரிய வேளேயிலும் இரும்புப் பெட்டிகளே தாராள மனதுடன் திறந்தவர்கள். காந்தியடிக ளென்ன; நேரு குளுளரென்ன கண்டிப்புக் காட்டிடும் பட்டே

லென்ன எல்லோரும் இவர்களிடம் கைலாகு கொடுத்து மகிழ்ந் தவர்கள்; என்ற சபலத்துக்கு பலர் ஆளாகித்தான் தவருன மம்ப்பீட்டைப் போட்டனர்.

ஓரிசாவிலே ஒரு காலத்திலே கொடிகட்டி ஆண்ட பட்நாயக்கையும் இந்த முறையிலே தான் மதிப்பிட்டனர். நேரு வாழ்ந்த போது அவரது நிழல் போலத் தொடர்ந்த வராயிற்றே! அரசியல் சிக்கல் மேல் மட்டத்தில் ஏற்படு கின்ற போதெல்லாம் தமது அபார திறமையை வெளியிடு வதாக நினைத்துக் கொண்டு எதையாவது வெளிச்சம் போட் டுச் சொல்லும் தீர்க்க தரிசி ஆயிற்றே!... என்றுதான் அவனி மதித்தது. ஆனால் நடந்து முடிந்திருப்பதோ நாகரிக மான கேலிக்கூத்து! பநட்ாயக் சம்பந்தங் கொண்ட அத்தனை நிர் வாகங்களுமே பட்டை நாமத்தைச் சாத்த முயன்றிருக் கின்றன, வருமானவரி பாக்கிகளை பல ஆண்டுகளாகக் கட் டாமல் 'டிமிக்கி' கொடுத்ததோடு காலிங்கா டியூப் நிர்வாகத் தினர் சாதாரண பொதுமக்களுக்கு விற்கும் விலையைக் காட் டிலும் கூடுதலான விலைக்கு அரசு சார்புள்ள அலுவலகங் களுக்கு பேரம் பேசிச் செய்துள்ளனர். ஒரிசாவில் முதலமைச் சர் தகுதிக்கு உயர்த்தப்பட்டிருந்த பட்நாயக்கினுடைய 'காலிங்கா டியூப்' நிர்வாகமே பொதுமக்களினுடைய பணத் தில் கேள்வி கேட்பாடில்லாமல் கைவைத்த தென்ருல் மற்ற ஆதிபத்தியர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பானேன்? கலிங்கா ஏர் லைன்ஸ் போன்ற விமான சர்வீஸ்களை நடத்திய இந்த பட் நாயக் தனது வரவு செலவைப்பற்றி தனக்கே தெரியாது... வரிகட்ட முடியாத நிலையிலே தான் எனது நிர்வாகம் இருக் கிறது என்று கூறிய பட்நாயக்கின் பேச்சைக் கேட்ட பிறகு தான் பாராளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்கள் அபாயக் குரலை எழுப்பினுர்கள். 'வெளிநாட்டு வங்கிகளிலே பணத் தைப் போட்டு கணக்கு வைத்திருக்கும் பட்நாயக் தான் வாழுகின்ற இடத்திலிருக்கும் கம்பெனிகளின் வரவு செலவு

பற்றி தனக்குத் தெரியாது என்று சால்ஜாப்பு செய்கிறு ரென்றல் அரசினரை மோசடி செய்திட எண்ணுகிறார் என்று தானே அர்த்தம். வெளிநாடு செல்லும் அவரது பாஸ் போர்ட்டை பறி முதல் செய்யுங்கள். பட்நாயக் வெளி நாடு ஓடிவிடத் திட்டமிடுகிறார் என்று எதிர்க்கட்சி நண்பர்கள் எடுத்துக் கூறினர் தேசிய பாரம்பரையின் எடுத்துக் காட்டாக இருப்பவர், மலை குலைந்தாலும் நிலைகுலையாத கல் நெஞ்சர் என்றெல்லாம் தூக்கித் துதிபாடிப் பேசப்பட்ட தேசாய் போன்றவர்களே பட்நாயக்பற்றி வெளியிடப்பட்ட பயங்கர உண்மைகளைக் கேள்விப்பட்டும் கேளாக் காதினராகிவிட்டார். அவரது அசடுதட்டிய மென்மையால் உண்மையின் உரு வகத்தை ஜீரணித்து விட நினைத்தார்;

ஒன்று இரண்டா பகட்டால் மறைத்திடுவதற்கு. 26 கோடி ரூபாயை அரசாங்கப் பணத்தை ஏப்பம் விட்டுச் சென்றான். ஜெயந்தி கப்பல் கம்பெனியின் உரிமையாளன் தர்மதேஜா தர்மத்தின் பிறப்பிடம் என்று அவனை நம்பினர் அவனோ அரசு விழிப்பதற்குள் — அமெரிக்காவிலே புகலிடம் தேடிக் கொண்டான். அமெரிக்காவைத் தஞ்ச மடைந்த தேஜா தேசாய்க்கு மனமுருகிய மடல் ஒன்று எழுதினான். 'என்னால் இந்திய அரசு பெரும் நலன் பலவற்றைப் பெற்றிருக்கிறது' இந்த நன்றி விசுவாசத்தை மறக்காமல் என் மீதுள்ள வழக்கு களை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். நான் பாரதம் வருகி றேன்' என்ற பொருள்பட எழுதியிருக்கிறான். அடித்துச் சென்றது 26 கோடிதானே இன்னும் பல ஆயிரங்கோடி களை அடிக்காது போகட்டும் பிழைத்துப் போங்களென்று விட்டுச் சென்றேனே—என்று அவன் கூறாமல் கூறுகிறா னோ என்னவோ ? தேசாய்க்குத்தான் வெளிச்சம் !

குபேர நாட்டிலே இன்று வாழ்ந்து கொண்டு ஏழை பார தத்தை நோக்கி சீறுகின்றான் டேஜா. இந்தியப் பொருளா தாரத்தை மேம்பாட்டுக்குக் கொண்டுவர நினைத்து, பல

நாடுகளிலே கடன் தொகை பெற்று வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்ட முடியாத நிலையிலே கண்பிதுங்கிக் கொண்டிருக்கும் பாரதத்தை மேலும் மேலும் சோதனைக்கு ஆளாக்குவது போல பட்நாயக், டேஜா போன்ற புண்ணியவான்கள் திருத் தொண்டிலே ஈடுபட்டனர். இந்த ஆஷாடபூதிகளின் வெளிவேடத்தைக் கண்டு நம்பி, அவர்களது தலைகளுக் கேற்ருர் போல் அணிகின்ற குல்லாயின் கவர்ச்சியில் மயங்கி அவர்களை வாழவைத்து நாட்டைத் தாழவைத்தனர். புலியிடம் புன்னகையை எதிர்பார்த்தனர். இது புலியின் குற்றமல்லவே !

கயாவிலே வாழ்ந்த வியாபாரி ஒருவன் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரிபாக்கி யிருந்ததைக் கட்டாமல் பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டான். அவன் பதுங்கு வதற்கு முன்பு அவனைப் பிடித்திட முடியவில்லை வீரம் பேசிய சூரர்களால். குதிரை காத தூரம் போனபிறகு தான் லாயத்தைப் பூட்டினர். இப்படிப் பட்ட திறமைசாலிகள் ஏழை எளியவர், சிறு தொழில் செய்வோர் ஆகியோரிடமெல்லாம் தங்களது ஜபர்தஸ்துகளைக் காட்டத் தவறியதேயில்லை. நாளையோ மறு தினமோ கட்டி விடுகிறேன் என்று கெஞ்சிக் கூத்தாடுபவர்களிடம் 'ஜப்தி' வாரண்டுடன் காட்சி தரும் தர்ம சீலர்கள் கயாவியாபாரிகளைப் போன்ற பணம் படைத்தவர்களிடம் கோட்டை விட்டு விடுகின்றனர். ஏழையின் கண்ணீருக்குக் கருணை காட்டாதவர்கள், பண தேவதையின் காலடியில் சரணுகதி யடைந்து விடுகின்றனர்.

கெய்த்தான் பிரதர்ஸ் (Khai Than Bros) என்ற நிர்வாகத்தினர் 1961-வரை 26 லட்சம் ரூபாய் வருமான வரி பாக்கி கட்ட வேண்டியிருந்தது. அதிகாரிகளால் நயந்தும், பயந்தும் 18 நோட்டீஸுகள் அனுப்பப்பட்ட பிறகு கெய்த்தான் பிரதர்ஸிடமிருந்து மொத்தம் 2 லட்ச ரூபாய் தான் வசூல் செய்ய முடிந்தது. பாக்கி 24 லட்சத்தை வசூல்

செய்வதற்குள் கம்பெனி மூடு விழா செய்துவிட்டதாக அறி வித்து விட்டனர். ஆமை வேகத்திலே ஊழியர்களாக்கப் பட்ட அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் அரசு 24 லட்சத்தை இழந்தது. உரியநேரத்தில் உடனடியாக நட வடிக்கை எடுக்காத காரணத்தால் பொது மக்களின் பணம் கரியானது. இதே கெய்த்தான் சகோதரர்கள் பின்னர் பல பெயர்களில் கம்பெனிகளைத் துவக்கி 21 லட்சம் பாக்கி வைத்தனர் வரிகட்டாமல்.

Sri Gobal Khaithan
Sri Mathi Shandi Devi Khaithan
Asok Kumar Khaithan
Kajananda Khaithan
Dprohathy Khaithan
Lalitha Kumar Khaithan

என்ற பெயரில் கம்பெனியை நடத்தி முடிவாக 21 லட் சம் வரி பாக்கி கட்ட வேண்டிய அளவில் நின்றனர். வரி பாக்கி வைத்திருப்பவர்களிடம் உடனடியாக வசூல் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான ஆக்க முறைகள் எத்தனையோ இருந்தும் அவற்றை யெல்லாம் ஏனோ பிரயோகிக்க வில்லை: பணம் படைத்த சீமான்கள் கோபமிகக் கொண்டு விட்டால் குடிமுழுகி விடுமென்று நினைத்து விட்டார்கள் போலும்! நோட்டிஸ் மேல் நோட்டிஸ் அனுப்புவதும், கெஞ்சிக் கூத் தாடுவதுமாகத் தானிருந்தனரே யொழிய உடனடித் தீர்வுக்கு வழி காணவில்லை. மத்திய மந்திரியாக இருந்த டி. டி. கிருஷ் ணமாச்சாரி கூட இந்த பிரபுக் கூட்டத்தை நோக்கி, கோடிக் கணக்கிலே வருமானவரி பாக்கியாக வைத்திருந்த கோமான் களிடம் நெருங்கிச் சென்று தேனொழுகும் நடையிலே பேசி னார். 1963-ம் ஆண்டு 270 கோடியே 43 லட்சமாக இருந்த வருமான வரி பாக்கி 1965-ல், 322 கோடியே 72 லட்சமாகத் தான் உயர முடிந்ததே தவிர குறையவில்லை. ஆண்டுக்கு

ஆண்டு வசூலாகவேண்டிய பாக்கித் துகை அதிகரித்துக் கொண்டேதானிருந்தது. இது போதாதென்று அரசினர் அறிக்கைப்படி கருப்புப் பணம் 3400 கோடிக்கு மேல் இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. வணிகத் துறையிலே வஞ்சக கழுகுகளாக மாறி கள்ளச் சந்தை வாணிபத்தின் மூலமாக ஊரைக் கொள்ளையடித்து வந்த தேசத்துரோகக் கும்பலிடம் 3400 கோடிக்கு மேல் இருப்பதாக அரசு தரப்பில் விளக்கம் சொல்லப்பட்டது. குடிக்கக் கூழு மில்லையே என்று ஒட்டிய வயிற்றைத் தடவிக் கொண்டு நாட்டின் மிகப்பலர் வாடி வதங்கி அலைந்தபோது, குபேரபட்டணத்திலே இருக்கக் கூடிய சீமான்கள் இந்தியப் பொருளாதார வளத்தையே இருட்டிலே கொண்டு போய்ப் பதுக்கினர். இந்தப் பதுக்கல் பேர்வழிகள், ஏழைகளின் ரத்தத்தை ருசி பார்க்கும் ஓநாய்கள் எங்கெங்கிருக்கின்றனரென்று தெரிந்திருந்தும் மத்திய அரசு பீடத்திலே கோலோச்சியவர்கள் நடுங்கிச் சாய்ந்தனர்.

"பிரபுக்களே! சீமான்களே! நீங்கள் இருளிலே மறைத்திருக்கும் பணத்தை வெளியே கொண்டுவாருங்கள். இதைப் பற்றி எந்த அச்சமும் கொள்ள வேண்டாம். உங்களுக்குப் பாதுகாவலாக நானிருக்கிறேன். இருட்டிலே மறைத்த பணத்தை இப்போது தருகிறோமே என்ன நடக்குமோ எது நடக்குமோவென்று கவலை கொள்ள வேண்டாம். சட்டம் உங்களைக் கொட்டாது. அரசுத்தொல்லை தொடராது" என்று அபயமளித்த டி. டி. கே. கருப்புப் பணமாக வெளியே அறிவித்தால் அதிலே 60 பங்கு அரசுக்குத் தந்துவிட்டு மீதமுள்ள 40 பங்கை இருளிலே பதுங்கியவர்கள் சொந்தமாக வைத்துக் கொள்ளலாமென்று பகிரங்கமாகக் குறிப்பிட்டார். இந்த முறையிலே எத்தனை பதுக்கல் பேர்வழிகள் இருளைவிட்டு வெளிச்சத்திற்கு வந்தார்களோ யாமறியோம். மதி மிகு மந்திரியார் கெஞ்சிக் கூத்தாடிய விபரீத நாடகம் தான் பிரபலப் படுத்தப் பட்டது. கருப்புப் பணத்தைத் தானாக முன் வந்து கூறுதவர்

களின் மாளிகைகளிலே அரசு சார்புள்ளவர்கள் சோதனை யிட்டு கள்ளப் பணம் இருப்பதாகக் கண்டுபிடித்தால் அத் தனையும் அரசு உடமை ஆவதுடன், பதுக்கிய பேர்வழி தண்டனைக்கும் உள்ளிட நேரிடுமென்றுதான் அரசு ஆணை பிறப் பித்திருந்தது. ஆனால் அரசு பிறப்பித்த ஆணை... எத்தகைய மதிப்பைப் பெற்ற தென்பதை நாட்டவர் அறியா மலில்லை.

வட நாட்டுத் திரைத்தாரகையான மாலாசின்ஹாவின் மாளிகையின் குளிக்கும் அறையில் பதுக்கி வைக்கப்பட்டு அரசு சோதனையின் போது 20 லட்சம் ரூபாய் கருப்புப்பண மாக கைப்பற்றப்பட்டது. அரசின் ஆணைப்படி அந்த 20 லட்சமும் அரசுடமை யாக்கப்பட்டிருக்க வேண்டும். சோதனை யின் போது அதிகாரிகளின் கண்ணிலே பட்டுவிடக் கூடா தென்று தான் அந்த அம்மையார் குளியலறையிலே பதுக்கினார் கள். அரசினர் சோதனையிட்டபோது அவர்களாகவே முன் வந்து அந்த இருபது லட்சத்தையும் தந்து விடவில்லை. திறமையான சோதனைக்குப்பின்னர்தான் குளியலறை மர்மம் வெளிப்பட்டது. அப்போது அந்தப் பணத்திற்கு எத்தனையோ அம்மையாரால் விளக்கம் கூறப்பட்டது. குளியலறையிலே இருந்த அந்த இருபது இலட்சத்துக்கும் என்ன தான் விரும்பமுடியாத சலிப்பு ஏற்பட்டதோ என்னவோ சோதனை அதிகாரிகளின் கண்களுக்கு திடுமென காட்டிக் கொண்டது. இப்படிக் கைப்பற்றப் பட்ட பணத்தை அம்மையார் வலிய வந்து தராத பணத்தை டி.டி. கிருஷ்ணமாச்சாரியின் அதியற்புதக் கண்டு பிடிப்பான 60—40 என்ற விகிதத்தில் சரிக்கட்டியுள்ளனர். இது எந்த விதத்தில் நியாயமோ ?

சட்டம் விநோதமாகயிருந்தாலும்... டி. டி. கே... மயிலே மயிலே இறகு போடு...என்பது போன்ற திட்டத்தைத் தரு கிறாரே...அகிலத்தின் எந்தப் பகுதியிலும் காணக் கிடைக்காத முறையைச் சொல்லுகிறாரே என்றாலும் அதன் பலனைக் காத்

திருந்து பார்ப்போமென்று விழி திறந்திருந்த நாட்டு மக்களுக்குப் பெரிய ஏமாற்றம் தான் காத்திருந்தது. சினிமா சிங்காரியின் முன்னே சட்டமும் வளைந்து கொடுத்தது. தானே வலிய வந்து கொடுக்காத பணத்துக்கு 40 பகுதியை இவர்கள் கொடுத்தார்கள் வலியச் சென்று. சரித்திரம் காண முடியாத திருப்பத்தைச் செய்து முடிப்பதாகக் கூறிக் கொண்டு சட்டத்தின் சந்து பொந்துகளின் வழியாக சதிகாரர்கள் தப்பிவிட வழி செய்தனர். வஞ்சக வேடதாரிகள் நீதி மன்றத்துக்கு இழுத்துவரப்படுவார்கள், நீதியின் கரங்கள் அந்த நாசகாரர்களுக்கு நல்ல தீர்ப்பை எழுதி முடிக்குமென்று எதிர்பார்த்த நாட்டின் நாயகர்கள் இந்த வெட்டிப் பேச்சு வீரர்களைக் கண்டு தலை குனிந்தனர்.

'நமக்காக நல்லரசு நடத்துகிறார்கள்; மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் மக்களரசு நடத்துகிறார்கள். ...இங்கே புல்லர்களுக்குப் புகலிடம் கிடையாது. அநீதிக்கு ஆலவட்டம் சுற்ற மாட்டார்கள். தேசத்தைப் பட்டினி போட்டு தனது தசையை வளர்த்துக் கொள்ளும் பரசிசப் பேயர்களுக்கும், துரோகக் கும்பலுக்கும் இனி இடங் கிடையாது; என்ற மகிழ்ச்சியில் ஆனந்தப் பள்ளுப் பாடிக் கொண்டிருந்தோர் மத்திய அரசு எடுத்துக் கொண்ட ஆகாத நடவடிக்கைகளால் மனம் இடிந்து போய்த் தலை தாழ்த்தி நின்றனர்.

காடுதிருத்தி, நிலம் திருத்தி நாளெல்லாம் ரத்தத்துக்கும் வியர்வைக்கும் வித்தியாசம் தெரியாத வகையில் நாடு காத்திடப் பாடுபடுகின்ற பாட்டாளி சேற்றிலே வாழ்கின்றான். ஆனால், நகத்திலே அழுக்குப்படாமல் 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருக்கின்ற நவநாகரிகவாதிகள் ஒய்யார புரியிலே வாழ்கின்றனர். நாட்டின் கண்மணிகளாக இருக்கக் கூடியவர்களைக் கதிகலங்கச் செய்து விட்டு மேனா மினுக்கிகளுக்கு சுகவாழ்வு வாழ்ந்திட திட்டம் தீட்டும் இவர்களை ஒரேயடி

யாக தீர்த்துக் கட்ட வேண்டுமென்ற அசைக்க முடியாத எண்ணத்திற்கு நல்லவர்கள் வந்து தீர்ந்த காரணத்தால் தான் தேர்தலிலே பணக்கார பாதுஷாக்களின் பாதங்களிலே வீழ்ந்து கிடந்த தேசீயத்தாரைப் படு வீழ்ச்சியடையும் படி செய்தனர்.

தேசிய முகாமிலிருந்த ஒரு சில நல்லவர்களுக்கே காங்கிரஸ் கட்சியின் எதிர் காலம் இருண்ட சகாப்தத்தை உருவாக்குமென்ற சேதியைத் தெளியவைத்தது. காலஞ்சென்ற மதிப்புமிகு சாஸ்திரி போன்றவர்கள் பாசீசத்துக்கு முட்டுக் கொடுக்கும் பழமை வெறியர்களை வெளிப்படையாக கண்டிக்கவும் தவறியதில்லை, தாஷ்கண்ட் விஜயத்துக்குப் பிறகு புலி வேடம் போட்ட டி.டி. கே. போன்றவர்களின் முகமூடியைக் கிழித்தெறியத் திட்டமிட்டிருந்தார். நாட்டுக்கு துரதிருஷ்டமும் இந்த நாசகாலர்களுக்கு நல்ல காலமுமிருந்த காரணத்தால் தப்பிப் பிழைத்தனர். 60—40 திட்டத்தைத் தந்த டி.டி. கே ராஜிநாமா நாடகம் ஆடிப்பார்த்தார். இதைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. தாஷ்கண்டோடு சாஸ்திரியின் வாழ்வு மூச்சு அணையாதிருந்தால் டி.டி. கேயை வெறும் ராஜிநாமாவோடு விட்டிருக்க மாட்டார்.

நிதிமந்திரியாக இருந்த சசீன் சௌத்ரியின் காலத்திலே Bird & Co என்ற நிர்வாகத்தினர் அந்நியச் செலவாணி மோசடி செய்ததற்காக 1 கோடியே 65 லட்சம் ரூபாய் கட்டும்படி ஆணையிட்டிருந்தனர். சில பெரிய புள்ளிகளின் தலையீடு காரணமாக Bird & Co. 40 லட்சம் மட்டுமே கட்டியது. கோடிக்கும் அதிகமான மிகுதிப் பணம் பெரிய மனிதர்கள் ஊதிக்காட்டிய விஷக் காற்றிலே பறந்து போயே போய் விட்டது. 67 தேர்தலில் தலை குப்பற வீழ்ச்சியடைந்த மத்திய நிதி மந்திரி சௌத்ரியின் காலத்திலே தான் இப்படிப் பட்ட கொடுமை நிறைந்த அக்ரமங்கள் நடக்க முடிந்தது. மோசடியின் மூலபுருஷன் முந்தரா 5—கோடிவரை கட்ட

வில்லை. இந்த அக்ரமக்காரர்களையெல்லாம் யார் தட்டிக் கேட்டார்கள்? ஏன் அந்தந் துணிவு அவர்களுக்கெல்லாம் இல்லாமல் போயிற்று. வெள்ளை ஏகாதிபத்தியத்தையும், அவன் அடி தொழுது கிடந்த குட்டிசமஸ்தானாதி பதிகளையும், ஜமீன் வாரிசுகளையும் ஒழித்துக்கட்டி விட்டோம் நாம் யாருக்கும் அஞ்சோம் என்று விடுதலை கீதம் முழங்கத் தவறி விடாத வர்கள் இந்தக் கோடீஸ்வர சீமான்களிடம் மடங்கித் தயங்கு வானேன். இந்தியத் துணைக் கண்டத்தையே நாங்கள் நினைத் தால் விலைக்கு வாங்கி விடுவோமென்று கர்ஜனை புரிகிறார் களோ அந்த கர்ஜனைக்குப் பயந்து பதுங்குகிறார்களா? இல்லை அவர்கள் தயவு இருந்தால்தான் அந்த சீமான்களின் 'சபாஷ்' இருந்தால்தான் பதவியிலே அட்டைபோல ஒட்டிக் கொள்ள முடியுமென்று நம்புகிறார்களா? எது உண்மையான காரணம் என்பதைத் தேடித்தேடிப் பார்த்து நாட்டின் நாயகர்கள் முடிவாகவே தாங்களே நல்ல முடிவைத் தேடிக் கொண்டார்கள்.

ஊர்மெச்சப் பேசுகின்ற ஊதாரிகளை நம்பாமல், ஊருக்கு உழைத்திடக் கூடிய எதையுந் தாங்கும் இதயங் கொண்ட வர்களைத் தேர்ந்தெடுத்து அரசு கட்டிலுக்கு அனுப்பினால் நாடும் நாமும் வாழலாமென்ற நல்ல முடிவிற்கு வந்து தான் ஏமாந்த வேளையில் ஏற்றங் கொண்டவர்களை ஏணியில்லா மலே பிடித்து கீழே தள்ளினர். சகிக்க முடியாத சூழல்களைச் செய்த அவர்களை வேறு நாடுகளிலே அபாய அறிவிப்பாகக் கருதி எச்சரிக்கை தந்திருப்பார்கள். வந்தாருக்கும் வாழ்வளிக் கும் வகைபுரிந்த இந்த நாட்டிலே சொந்த நாட்டுக்காரனால் விளைந்த சோகத்தையுந் தாங்கிக் கொண்டு வாழ முயன்றனர்.

உத்திரப்பிரதேச கம்பெனி பொன்றிலே 1229 ரோட் ரோலருக்கு ஆர்டர்தந்து முதன் முதலாக 90 சத விகிதம் பணத்தையும் முன் பணமாகத் தந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு 417 ரோலர்கள் மட்டுமே பெற்றனர். பாக்கியுள்ள

"ரோலரும் வரவில்லை பணமும் பட்டுவாடா செய்யப்படவில்லை. இந்த வகையில் சுமார் இரண்டு கோடி ரூபாய் அரசுக்கு நட்ட மேற்பட்டது. யாரிடம் எப்படிப்பட்ட நாணய முறையில் வியாபாரம் செய்து சரக்குகளைப் பெறவேண்டு மென்ற சாதாரண விபரம் கூட தேசியப் போர்வைக் குள்ளிருந்து ஆட்சிபுரிந்த திருவாளர்களுக்குப் புரியவில்லை. கண்ணீரும் செந்நீரும் சேர்த்து பொது மக்கள் கொட்டித் தரும் பணத்தை இந்த மாதிரியான டம்பாச்சாரித் தனத்தால் மோசம் போக விடுகிறோமே யென்று ஒருவருக்காவது மனம் கலங்கவில்லை. கலங்காத கல் மனம் படைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தால்தான் அவர்களது களியாட்டத்திற்கு அரசியலைக் கூடமாக்க வேண்டாமென்று விநயமாகக் கூறி வீட்டிற்கு அனுப்பிவைத்து விட்டனர்.

மத்திய அரசு பீடத்தை அலங்கரித்த பெரிய தலையான பட்டீல் போன்றவர்கள் தேர்தல் களத்திலே யிருந்தபோது எவ்வளவு கும்மாளமிட்டனர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மக்கள் ஊழியர் ஜார்ஜ் பெர்ணன்டஸை எவ்வளவு மட்டமான முறையிலே பேசினார்களென்பதை நாடறியும். அரசியல் பெரிய மனிதர் பட்டீலே 'யார் இந்த பெர்ணன்டஸ்' என்று மமதையுடன் கேட்டார். அத்தகைய கேள்வியைக் கேட்டிடும் பக்கபலத்திலே இருந்தார் பட்டீல். பட்டீல் மத்திய மந்திரியாக இருந்தபோது தனது உடல் வளத்தை சோதித்துக்கொள்ள அடிக்கடி அமெரிக்கா செல்லும் வழக்கமுண்டு. இங்கேயுள்ள டாக்டர்களால் குணப்படுத்த முடியாத நோய் போலும்! பாவம்! அப்படி அமெரிக்காவுக்குப் பயணம் செய்யும் போதெல்லாம் அமெரிக்காவின் மிகப் பெரிய கோடீஸ்வரர்கள் தான் அன்புடன் உதவிசெய்து, தங்குமிடமும் இன்ன பிறவும் ஆற்றிட முன்வருவராம். அத்தகைய ஜபர்தஸ்துகள் அப்போது இப்போது போனால் கோடீஸ்வரன் வீட்டு 'போர்டிகோ' விலே கூட நிழலுக்கு நிற்கவிட மாட்டான். தோல்வியடைந்து மூலையிலே உட்கார்ந்ததும் அமெரிக்காவையே மறந்துவிட்

டார்......அந்த நோய்கூட எங்கு போயிற்றோ தெரியவில்லை. அவ்வளவு கித்தாப்புகள்; இப்படிப்பட்ட ஊதாரித்தனம் செய்துவந்த காரணத்தால்தான் இதயத்திலே குமுறிய எரிமலையை அடக்கி அடக்கி முடிவாக ஊதித் தள்ளிவிட்டார்கள்.

அமெரிக்கா இந்தியாவிற்கு 1967 ஆகஸ்டு 7 தேதி முடிய 5903 கோடி ரூபாய்க்கு கடனாகவும் பெருநிதியாகவும் உதவியதைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறது. மேற்கு ஜெர்மனியும் பல கோடிக் கணக்கில் மூலதனம் போட்டு இந்திய வளத்தைப் பெருக்க உதவிடுவதாகப் பெருமை யடித்துக் கொள்ளுகிறது.

LAND MARKS OF INDO — GERMAN CO-OPERATION என்ற தலைப்பில் இந்திய தேசப்படத்தை வெளியிட்டு மேற்கு ஜெர்மனி உதவி வரும் திட்டங்களைப் படம் போட்டுப் வருமையுடன் வெளியிடுகிறது.

204 Capital & Technical Assistance Projects
350 Joint Ventures and Collaborations.
7 Max Mueller Bhavans Cultural Centres.
3 Technical Training Institutes.
21 Lecturers at India.
92 Volunteers (German Volunteer Service)
3 Agricultural Projects.
Telivision Studio New Delhi.
German Academic Exchange Service.
Indian Institute of Technology Madras.

......இந்த முறையிலே தொகுத்து அதன் பட்டியிலை வெளியிடுகிறது மேற்கு ஜெர்மனி. யூகோ, ஜப்பான், ருஷியா, போன்ற நாடுகளும் அதனதன் கடனுதவிப் பட்டியலைப் பெருமளவில் வெளியிட்டு மகிழ்கின்றன. இத்தனைக் கோடிப் பணத்தையும் பெற்றிருக்கும் ஏழை இந்தியா எந்தக் காலத்தில் தான் இவற்றையெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்துக்

கட்டிக் கடனைத் தீர்த்துக்கொள்ளப் போகிறதோ? இங்கே கோடி கோடியாகக் கொட்டிக் குவித்து வைத்திருக்கும் கள்ள மனம் படைத்த கோடீஸ்வர சீமான்களின் இரும்புப் பெட்டிகளுக்குப் பாதுகாப்பைத் தந்துவிட்டு வெளிநாட்டுக் கடனுதவிக்காக கரம் நீட்டி அலைவதை நினைக்கும்போது வேதனையடைய வேண்டியதாகத் தானிருக்கிறது. கள்ளத் தங்கத்தைக் கடத்துவோர்; கருப்புச் சந்தையை வளர்த்திடுவோர், கொள்ளைலாப நோக்கத்தோடு பதுக்கல் தொழிலை நடத்துவோர்; மோசடி நினைவோடு கம்பெனிகளை அடிக்கடி திவலாக்கிடுவோர் இன்ன பிறநாட்டுக்குக் கேட்டை தந்திடும் துறைகளிலே ஈடுபாடு கொண்டிருப்பவர்களை யெல்லாம் சுக வாச நிலையில் விட்டு வைத்துவிட்டு தரித்திர நாராயணர்களைப் போல மற்ற நாடுகளிடம் மடி ஏந்திடும் போக்கைக் காணும் பொருளாதார பேரறிஞர்களெல்லாம் கைகொட்டி நகைத்திடாமலில்லை. கடனுதவி தருகின்ற சாக்கிலேயே இந்திய அரசின் வெளிநாட்டு உள்நாட்டுக் கொள்கை கோட்பாடுகளிலும் தலையிட்டு வி... கின்றன, வியட்நாம் பிரச்சினையில் அமெரிக்கா எந்தக் கருத்தைக்கொண்டு ஆக்கிரமிப்புச் செய்கிறதோ அதே க...த்தை நாமும் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். திரிசங்கு சொர்க்கம் போன்ற நடுநிலைக் கொள்கை உங்களுக்குத் தேவையில்லை, எந்த அணியின் பக்கமாவது சாய்ந்துவிடுங்களென்று அலறிக்கொண்டே யி...ங்கிறா...கள். அந்த ஏகாதிபத்தியக் கூப்பாட்டுக்கு நாம் இணங்கவில்லை என்று தெரிந்ததும் அமெரிக்கா மேலும் தர இருந்த கடனுதவியைக் குறைத்து விட்டது. Statesman செய்தியின்படி இந்தியாவிற்கு தர இருந்த உதவியில் அமெரிக்கா 107 - மில்லியன் டாலர் உதவியைக் குறைத்து விட்டது. கடனுதவி யளிப்பதும் அளிக்காததும் அந்தந்த நாட்டினுடைய இஷ்ட பூர்வமான விருப்பமாகும். ஆனால் அவர்களின் கட்டளைகளுக்கெல்லாம் பணிந்துபோக வேண்டுமென்பது நேச நாடுகளுக்குரிய நட்புரிமையாகாது. ஜனநாயகம் பற்றி உரத்த குரலிலே

பேசிடும் ஜனநாயக வாதிகளுக்கு இது ஏனோ புரியவில்லை. இல்லை புரிந்தும் உதவிதான் புரிகிறோமே உடன்பட்டு விடு வார்களென்ற சபலத்தில் அந்த ஆசைகொண்டு விட்டார் களோஎன்னவோ ?

அண்மையில் மொரார்ஜி தேசாய் மேற்கு ஜெர்மனி சென் றிருந்தபோது, 250 - மில்லியன் மார்க்குகள் கடனுதவி தந் தார்கள். ஒரு பக்கம் இந்திய ஏழ்மை நிலையை நினைத்து உத வுகின்ற நேரத்தில் மறுபக்கம் ருஷியக் கூட்டுறவில் நடைபெற் றிடும் நெய்வேலி நிலக்கரித் திட்டம்பற்றி பகிரங்கமாகச் சாடிப் பேசியுள்ளனர். அங்கேயுள்ள நிபுணர்கள் நெய்வேலித் திட் டம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றனர். அந்த ராட்சதத் தொழிற்சாலையை முடிப்பதில் 147 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. சுமார் 90 கோடி யிலேயே அந்ததிட்டத்தை முடித்திருக்கலாமென்று கேலிக் குரலில் எடுத்துச்சொல்லி இதுவரை 17 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்ட விபரத்தையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இப்படிப் பட்ட முறைகளிலே தமக்கு சம்பந்த மில்லாத வேலைகளி லெல்லாம் கடன் தருகிறோமென்ற சைலக்கின் மனப்பான் மையை வைத்துக் கொண்டு தலையிட்டு விடுகின்றனர். அதே போது நேச நாடுகளென்ற பாரம்பரியத்தை விளம்பரப்படுத் திக் கொள்வதிலே விருப்பங்கொண்ட அந்த நாடுகள் இந் தியாவின் மீது பகையைக் கக்கிடும் ஆக்கிரமிப்பு நாடுகளின் மீது எத்தகைய எண்ணத்தைக் கொண்டிருக்கின்றன வென் பதைக் காணும் போது வேதனையடையாமலிருக்க முடியாது நாம் மற்ற நாடுகளின் மீது கொண்டிருக்கின்ற சொந்தமும், நேச பாசமும் எத்தகையதென்பதைத் தெரிந்து கொண்டு அவர்கள் அந்த முறைகளிலே பழகிடுவதில்லை. இதே போன்று நமக்கொரு விதி நாமே செய்து கொண்டிருப் பதை அவர்கள் வர வேற்றிடாமலிருப்பது தான் விந்தையா கத் தெரிகிறது. நாடுகளுக்குள்ளே இருந்துவரும் மாச்சரி

யங்களை ஐ. நா. போன்ற பெரும் ஸ்தாபனங்களே தீர்த்து வைத்து விடுவதில்லை. இந்த நிலையில் கடனளிப்போர் தம் தம் அணியிலே அணிவகுத்திட அழைப்பது காலத்துக் கேற்ற கருத்தாக அமையாது. இப்படிப்பட்ட நேரங்களில் வெளிநாட்டுக் கொள்கையில் குழப்பத்தை ஏற்படுத்தி விடு கின்ற காரணத்தால் இந்திய அரசு பரிதாபத்திற்குரிய நிலை மைக்கு ஆளாகித் தவிப்பதுண்டு. உள் நாட்டிலே இருந்திடக் கூடிய பணப் பெரும் பிரபுக்களுக்கு இந்திய அரசினர் அஞ் சுவது போன்று தான் வெளிநாட்டு எஜமானர்களின் எடு பிடிகளாகிக் குழம்பித்தவிக்கின்றனர். அந்நிய நாடுகள் அக்ரம மான ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தபோது அரசு எடுத் துக் கொண்ட நட வடிக்கைகளால் அந்நியன் கால் பிடரி யில் அடிபட ஓடவில்லை... இங்கே புலியென எழுந்த மக் கள் சக்தியைக் கண்டுதான் ஆதிபத்திய நினைவு கொண் டோர் ஓடிப் பதுங்கினர். குறிப்பாகவும், சிறப்பாகவும் தென்னகமும் அதன் இருதயமான தி. மு. கழகமும் தமது முழு சக்தியையும் பிரயோகித்திட எழுந்தது ஆக்கிரமிப் பை எதிர்த்து.

கழகத்தின் பொதுச் செயலாளரான தென்னகத்தின் விடி வெள்ளிஅண்ணு அப்போது நாட்டு மக்களுக்கு அபயம் அளிப் பவராகக் காட்சியளித்தார். போர்ச் சூழ் நிலையின் போது பேரறிஞர் ஆற்றிய உணர்ச்சி மிகுந்த சேவையைக் கண்டு வடபுலத்துப் பெருந்தலைகளே அசந்தன.

''போர் சூழ்நிலையை முன்னிட்டு நமது கழகத் தோழர் கள் சிறப்பு நிகழ்ச்சிகள் பிறந்தநாள் விழாக்கள் ஆகிய வற்றினை நிறுத்திவைத்து போர் ஆதரவு முயற்சியில் சர்க் காருடன் ஒத்துழைத்து அதற்கான நிகழ்ச்சிகளில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து தில்லியிலிருந்த போதே செய்தி அனுப்பியிருந்தேன்.

"அதன் தொடர்பாக நான் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்த திருச்சி, மதுரை அருப்புக்கோட்டை, நாகர் கோயில் ஆகிய ஊர்களின் நிகழ்ச்சிகளை நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டின் பாதுகாப்பான முயற்சியில் முழுஅளவில் ஈடுபட்டு, சர்க்கார் மேற்கொள்ளும் முயற்சிகளில் பங்கேற்று அனைத்துக் கட்சியினர் அமைத்திடும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, நாடுகாத்திடும் நற்பணியாற்றிட வேண்டிய நமது கடமையினைச் செம்மையாகச் செய்திட வேண்டுகிறேன்.

பாதுகாப்பு நிதி திரட்டித் தருதல், படைவீரர்களின் குடும்பத்தாருக்கு உதவி நிதி திரட்டித் தருதல், இரத்த தானம் தருதல் போன்ற செயல்களில் உடனடியாகவும் ஆர்வத்துடனும் தீவிரமாகவும் ஈடுபட வேண்டுகிறேன். இது கட்சி அரசியல் நடத்தும் வேளை அல்ல. நாடு காத்திட வேண்டிய நேரம்.

வீரதீரப் போரில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதுடன், அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு மேலும் வலிவளிக்கும் வகையில் ஆதரவினைத் திரட்டித் தந்திடும் பணியில் ஈடுபட வேண்டுகிறேன். இந்த நோக்கத்துடனே, நான் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்த விழாக்கள், நிகழ்ச்சிகள், கழகக் கூட்டங்கள் ஆகியவற்றினை, நிறுத்தி வைத்திடக் கேட்டுக் கொளகிறேன். கழகத்தோழர்கள் இந்த எனது கருத்திற்கேற்ற முறையில் செயல்படக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

அண்ணாதுரை.

...அண்ணா அவர்களின் அறிக்கைதனைக் கண்டு பாரம் பரியப் பெருமை பேசிய தேசீயத் திலகங்களே வாயடைத்துப் போயின ! என்னே அண்ணாவின் சீர்மிகு தொண்டு!

கிடைத்ததை யெல்லாம் கட்சி நலனுக்கு ஜீரணித்துக் கொண் டிருந்தவர்கள் வலம் வந்த நேரத்தில், கட்சிப் பணிகளை ஒதுக்கிவைத்து விட்டுப் பேச்சும் மூச்சும் நாடு காத்திடப் பயன்பட வேண்டுமென்ற அறிவிப்பு அண்ணனிடமிருந்து வந்த போது, அந்தக் கட்டளையைத் தலை மேல் தாங்கினர். வெட்டி வாவென்றால் கட்டி வரக் கூடிய ஆற்றல் பெற்ற கழகக் கண்மணிகள் ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தோள் தூக் கினர்.

இந்திய வரலாற்றின் புதிய திருப்பம் இலட்சியம் மிகுந்த கழகக் காளையர்களால் ஏற்படுத்தப்பட்டது. இலட்சியக் காளையரைப் பற்றி இளையபாரதத்துக்கு விபரீத விளக்கம் செய்து, அவர்களது தேசபக்தத் திருக் கூட்டத்தினரே பதில் சொல்ல வேண்டியவர்களானார்கள். தென்னகம் விழித்து எழுந்திருக்கா விட்டால், அண்ணா காட்டிய பாதையில் வீரர் கள் வேக நடை போடாதிருந்தால் இந்தியத் துணைக் கண் டம் பற்றிய நினைவுகளெல்லாம் வெறும் கற்பனையாகப் போயி ருக்கும். அந்த அளவிற்குத் தான் எல்லைக் கோடுகளைக் காப்பாற்றிட முடியாத நிலையில் தென்னகத்தை பார்த்துப் பார்த்து கூவிக் கூவி அழைத்தனர். வடபுலத்தார் வெட வெடத்து நின்றபோது 'அஞ்சாமை' பற்றி விளக்கி பக்கத் துணையிருந்து படைபலத்தின் வெற்றிக்கு வழி கூட்டியவர் கள் திராவிட முன்னேற்றக் கழகத்தாரென்பதை நாட்டுப் பற்றுக்கு மதிப்புக் கொடுத்த நல்ல உள்ளங்களுக்குப் புரியும்.

அந்த மலர்ந்த உள்ளங்கள் அப்போதே முடிவெடுத் துக் கொண்டன வரு நாட்களில் இருளகற்றிய வாழ்வு வாழ வேண்டுமென்றால் கழகக் கண்மணிகளை அரசுபீடத்திலே அமர்த்தினால் தான் முடியுமென்ற திட நம்பிக்கைக்கு நல்ல வர் — நாட்டவர் வந்து சேர்ந்தனர். பாரத மாதாவின் வீரதீர ஜம்பப் பேச்சுகளால் பசிபட்டினியோடு அலைந்திடும் இந் தியத் துணைக் கண்டத்தை இனியும் காண அவர்கள்

விரும்பவில்லை. ஓலம் நிறைந்த வாழ்வுக்கு சாவுமணியடித்து மக்களுக்காக அரசு என்ற தத்துவத்துக்கு உண்மை உரு வம் கொடுக்க விழைந்தனர். வீதி நாயினும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்த நிலைமைக்கு ஒரு அபாய விளக்கைக் காட்டி விட்டு கோடிட்டுக் காட்டிய புதிய கோணத்துக்கு வரத்துடித்தனர்.

மக்களை ஆளுவதற்காகக் கோலேந்தியவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக—2078 தடவை துப்பாக்கி பிரயோகம் செய்து 1875 பேரை சாவுக்குழியிலே தள்ளியிருந்தனர். ஒரு நூறு வெள்ளைக்காரடயர்களை உவமை சொல்லுகின்ற அளவிற்கு அராஜகம் தலை விரித்தாட நடந்து கொண்ட வேதனை மிகுந்த போக்கிற்கு மக்கள் நல்ல தீர்ப்பளிக்கத் தயாராகி னர். காட்டிலே புகுந்திடும் வேட்டைக் காரர்களைப் போல நாட்டிலே வேட்டுச் சத்தத்தைக் கிளப்பி வேடிக்கை பார்க்க ஆளவந்தவர்கள் துணிந்திருந்த போது அந்த ஆணவத் திற்கு முடிவுகட்ட மக்கள் மன்றம் 67 தேர்தலை நம்பிக்கை யுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தது.

தொடர்கதை போல அனுபவித்த தொல்லைகளுக்கு விடிவு வேளை வந்து சேர்ந்தது. விடி வெள்ளியின் ஒய்யாரச் சிரிப் பிலே இரண்டு பத்தாண்டுகளாக ஆளாகிய கொடுமையை மறந்தனர். விடுபட்ட உள்ளங்களிலே உதய சூரியனின் கதகதப்புப் பட்டு உளமகிழ்வைத் தேக்கின.

பதுக்கள் பேர்வழிகளும், பணம் படைத்தவர்களும் பக்கத் துணையிருக்க உருண்ட ஆட்சிச் சக்கரம் திடுமென நின்று போய் விட்டது. ஆணவசகாப்தத்துக்கு முடிவு கூறப் பட் டது. கோடி கோடியாகக் கொள்ளையடித்துக் குவித்த கோடிஸ் வர பாரம் பரியம் ஆற்றுவார் தேற்றுவாரின்றி அநாதையாக விடப்பட்டது.

இந்திய துணைக்கண்டம் முழுவதுமே 27 கோடிமக்களை காங்கிரஸ் அல்லாத மந்திரிசபை ஆளத்துவங்கியது. 17

கோடி மக்களை காங்கிரஸ் மந்திரிகள் ஆளத்துவங்கினர். இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல ஒளிக் கவர்ச்சியுடன் காட்சியளித்தது பேரறிஞர் அண்ணாவின் தலைமையிலே இயங்கிய தமிழக அரசு,

○ ● ○

சந்திப்போம் சந்திப்போமென்று சங்கநாதம் எழுப்பியவர்களை சந்தித்தோம் சந்தித்தோமென்று கூறி எக்காளமிட்டு நின்றது இளைஞர்படை அண்ணாவின் படை ஆற்றல் மிகு மறவர்களின் பாசறை என்பதை அவனி அறிந்து மகிழ்ந்தது சூதுக்காரர்களையும் சுய நலவாதிகளையும் தூண்டி விட்டு தூபம் போட்டு களத்திலே வெற்றிக் கொடியை பறக்கவிட எண்ணியவர்களின் பேராசையிலே இடிவிழுந்தது. பட்நாயக்குகளுக்கும், பஜாஜ் பிர்லா போன்றவர்களுக்கும் பாதுகாவலர்களாக இருக்கும் தேசீயத் திருவாளர்களின் இணைப்புத் தேவையில்லை. கெய்த்தான், டேஜா மோசடிகளுக்கு வழி திறந்த ஆற்றலற்ற அரசு இனி தேவையில்லை என்ற ஏகோபித்த முடிவுக்கு தமிழகம் வந்து சேர்ந்த மக்களை நம்பியிருக்கக் கூடிய தலைவர்களை நம்பினார்கள் இரண்டு பத்தாண்டுகளாக நம்பக் கூடாதவர்களை நம்பிக் கெட்டது. போதும் இனியாகிலும் நாணயமானவர்களை நாட்டின் மானம் காத்திடக் கூடியவர்கள் வழி நடப்போம் வகை தேடுவோமென்று முயன்றனர்.

விழிப்புணர்ச்சி பெற்ற தென்னக மக்களின் ஓயாத உழைப்பால், சகோதரக் கட்சிகள் அளித்த அரும் பெரும் ஒத்துழைப்பால் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப்பெரிய வெற்றி கண்டு ஆதிக்கத்தை விரட்டியடித்தது.

பெருவாரியான இடங்களைப்பெற்று வெற்றிக் கொடி நாட்டிய கழகத்தை கவர்னர் அழைத்தார் கழகக் காவலரும்

சீர்மிகு தலைவருமான பேரறிஞர் அண்ணா கவர்னரது அழைப்பை ஏற்று அவரது மாளிகைக்குச் சென்றார். கட்சித் தலைவரை அரசு அமைக்கும்படி வேண்டிக் கொண்டார் கவர்னர். கவர்னர் உஜ்ஜல் சிங்கின் அன்பழைப்பிற்குப் பிறகு தென்னகம் என்றுமில்லாத பெரு ஆர்வத்துடன் தங்களைப் புதிது புதிதாக ஆளக்கிளம்பிடும் அமைச்சர்களைத் தெரிந்து கொள்ள அலைமோதிக் கிடந்தனர்.

தென்னகம் தவமிருந்து காத்திருந்த அந்த வரலாற்றுப் பொன்னாள் அண்ணா முதலமைச்சரான நன்னாள் வந்துற்ற போது, தேனருவி பாய்ந்திடுவது போன்ற மகிழ்ச்சிவெள்ளம் தெருவெங்கும் ஏற்பட்டதுண்மை. அவரது சகோதர அமைச்சர்களாக எதையுந் தாங்கிடும் கழக கூட்டி முனைகளான மாண்புமிகு நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன், கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மாதவன், சாதிக்பாட்சா முத்துச்சாமி ஆகியோர் பங்கேற்றனர். இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர்களாகப் பதவி ஏற்றிடச் செல்லும் இந்தச் செயல் வீரர்களை நாளும் நாளும் நாட்டவர் சந்திக்காமலிருந்த தில்லை. காடுமலையென்ன, பட்டிதொட்டியென்ன இங்கெல்லாம் அலைந்து திரிந்து, நல்ல உணவின்றி நல்ல உறக்கமின்றி மக்களுக்காக பாடு படுவதையே வாழ்வு மூச்சாகக் கொண்டு பணியாற்றிய கொள்கைத் தங்கங்களைத் தங்களை ஆளுகின்ற அமைச்சர்களாக ஏற்றுக் கொள்வதிலே களிமிகக் கொண்டனர். இப்போது தானா அவர்கள் ஆளுகிறார்கள்... எப்போதோ ஏழை எளியவரின் இந்த நாட்டுக்குடையவர்களின் இதயத்திலே சிம்மாசனத்தைப் போட்டு அமர்ந்து ஆளத்துவங்கியவர்களாயிற்றே! 'உன்னோடு உலவிடுவதிலே தான் இன்பம் நீ தருகின்ற கலயத்திலிருந்து நான் அருந்துகின்ற கஞ்சிதான் தேவ அமிர்தமென்ற தகுதியைப் பெற்றிடும்' என்று அன்புரிமையுடன் பேசி வழி நடந்த அருமைத் தோழர்களை ஆட்சியின் பாதுகாவலர்களாகக் கண்டபோது வான் முட்டும் மகிழ்ச்சி கொண்டனர்.

இது வரை இருந்தனரே... உருட்டு விழியும் முரட்டு நடையுங்கொண்டு ஜபர்தஸ்து வீரர்களாகப் பட்டாளம் துணை வர பவனி வந்தார்களே மந்திரிமார்கள் அவர்களின் அசகாய சூரத்தனங்களிலிருந்தெல்லாம் மாறுபட்டு கித்தாப்புக்கு இடமளிக்காத சாதாரண தொண்டரிலும் தொண்டராக எளிமைக் கவர்ச்சியோடு எல்லாம் தெரியும் ஏற்றத்தோடு வலம் வந்த கழகக் கண்மணிகளாக நம்மவர் காட்சியளித்தனர்.

கோடானு கோடி மக்களின் இதயத்தில் பீடம் அமைத்திருந்த அண்ணா முதலமைச்சராகியதும்; மாட மாளிகையையோ கூட கோபுரம் போன்ற பங்களாக்களையோ அமைத்துக் கொண்டு அங்கே குடிபோய் விட வில்லை. எந்த நுங்கம் பாக்கத்திலுள்ள தமது சிறு வீட்டில் ஏழை எளிய இதயங்களைச் சந்தித்து உறவாடினாரோ அதே சிறு வீட்டிலிருந்து கொண்டுதான் முதலமைச்சராக வலம் வந்தார். அரசு மக்களுக்காக நடை பெறல் வேண்டும் அரசுப் பணத்தை கடல் போன்ற பெரிய பெரிய பங்களாக்களை அமர்த்திக் கொள்வது போன்ற முறைகளில் விரயமிட்டு பொது மக்களின் பணத்தைக் கரியாக்கி விடக் கூடாதென்பதிலே கவலை மிகக் கொண்டுதான் தனது குடியிலேயே வாழத்திட்ட மிட்டார்கள். குறுகலான சிறிய ஏணியிலே ஏறுவது போன்று தான் சிரமத்துடன் ஏறி அவரிருக்கும் அந்த மாடிக்குச் செல்ல முடியும்' மாடியென்றால் அதிலே பாதி திறந்த வெளி பலத்த காற்றுடன் மழை பெய்தால் மாடியிலே பெரும் பகுதி தெப்பமாகிவிடும். இப்படிப்பட்ட இடத்திலேயே முதலமைச்சரான பிறகும் இருக்கிறாரென்றால் தனக் கென வாழாத பெருந் தன்மைதான் காரணமாக இருக்க முடியும். பாரம் பரியமாக ஆளுகைக்கு இடம் தேடி வந்த பங்களாவாசிகளைப் போன்று இவர் பக்குவப் பட்டுக் கொள்ள வில்லை என்பதோடு, பங்களா வாசத்திலிருந்தவர்களைத்தான் ஆலமரத்தடிக்கு அழைத்து வந்தவராயிற்றே!

அ-பி என்று அறிமுகமாகியிருந்த அசோசிடுயட்டட் பிரஸ், என்னும் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஆசிய நிருபராகப்

புது டில்லியில் தங்கியிருந்த செலிஸ் ஹாரிசன் என்பார் இங்கே இந்தியத் துணைக் கண்டத்து அரசியலை அலசி ஆராய்ந்து India the most dangerous decades என்ற நூலை வெளியிட்டர். அந்த அரிய அழகு வாய்ந்த நூலை ஆக்ஸ் போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ் பெருமையுடன் வெளியிட்டிருந் தது. அதில் தென்னக அரசியலைப் பற்றி விவரித்த ஹாரிசன் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்ற பொழுது... There is no doubt that this powerful orator is the single most popular massfigre in this region,'... இந்த சக்தி வாய்ந்த பேச்சாளர் தான் இந்தப் பிராந்தியத்தின் செல்வாக்குப் பெற்ற மக்கள் தலைவர் என்பதில் சந்தேகமில்லை ...என்று ஆட்சி பீடத்தை அண்ணா அலங்கரிக்கக் கூடிய இன்றல்ல ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னரேயே கழகத்தின் சீரிய நட வடிக்கைகளை உற்று ஆராய்ந்த தோழர் ஹாரிசன் குறிப்பிட்டார். ஹாரிசன் போன்ற வெளி நாட்டு அரசியல் மேதைகளின் பார்வையில் படுவதற்கு முன்னதாக தென்னகத் தில் ஏக தலைவராக வலம் வந்த அண்ணாவின் அரும் பெரும் ஆற்றலுக்கு முன்னே தேசீயத் திரையிட்டு மறைத்துப்பார்த் தார்கள் யார் யாரையோ மக்களுக்கும்—அவர்களுக்கும் நெடுந்தொலைவிலிருந்த தலைவர்களையெல்லாம் மக்களின் தலை வர்கள் என்று அறிமுகப்படுத்த முயன்ற நேரத்திலே தான் ஆசிய நிருபர் அவனிக்கு இதோ உண்மையான மக்கள் தலை வர், என்று அண்ணாவை அறிமுகப்படுத்தினர் போலி வேடம் போட்ட புலி வேஷத் தலைவர்களின் நிலை பரிதாபத்திற்குரிய தாகியது. உண்மையான திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதைக் கூடத்தடுத்து நிறுத்த முயன்றனர். இது மாதிரியான கேலிக் கூத்தான செயல்களின் மூலமாக மேலும் மேலும் விலகிப் போய்க் கொண்டிருந்தனர் மக்களிடமிருந்து.

பல . ஆண்டுகளுக்கு முன்னதாகவே எடைபோட்டு மதிப்பிட்டுக் கொண்ட ஹாரிசன் போன்ற நல்ல உள்ளம் படைத்தோர் பெறவேண்டிய வெற்றியைப் பெற்று தரவேண்

டிய தகுதியைத் தந்தனர், என்றுதான் அண்ணு அவர்கள் அரசு கட்டிலேறியதை வாழ்த்துக் கூறி வர வேற்றனர்,

● ○ ●

மான்புமிகு அமைச்சர்கள் அத்தனைபேரும் தமிழக சட்ட மன்றம் இதுவரை கண்டிராத புரட்சிகரமான அமைப்பில் தமிழில் உறுதிப்பாடு எடுத்துக் கொண்டனர். இந்த ஒரு நிகழ்சியே தென்னவர் கண்ணைப் போற்றிய கன்னித் தமிழ் மொழியை அரியாசனம் ஏற்றிய எழிற் பாங்கைக் கண்டே தமிழக மக்கள் மகிழ்ந்து மகிழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கக் காரணமாக அமைந்தது. கவர்னர் உரையின் மூலமாக கழக அரசின் திட்டங்களை வெளியிட்டபோது, புதிய அரசின் புரட்சிகரமான நடைமுறைத் திட்டங்கள் விளக்கத்திற்கு வந்தன.

* விவசாயிகளுக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் வகையிலும். சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களுக்கு நியாய விலைகளில் நல்ல அரிசி கிடைக்கச் செய்யும் வகையிலும் சிறந்ததோர் உணவுக் கொள்கை உருவாக்க வேண்டும்.

* கட்டுப்பாடான மாதங்களில் அரசாங்கத்திடம் போதிய அளவு உணவு தானியங்கள் இருப்பில் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாக வைத்து ஒரு தலைப்பக்கமாக இல்லாமலும். சிறு குடியானவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் உபரியைக் கொள்முதல் செய்யப்படும்.

* தொழிலாளர்கள், நில மற்ற உழவுப் பணியாளர்கள்; நிலைத்த வருவாய் பெறுவோர் - போன்றவர்களை வாட்டும் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும் மாநில அரசாங்கங்களின் கொள்கையை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் உதவ முன்வர வேண்டும்.

* தரமான வித்துக்களைப் பெருக்குதல், பாசன வசதிகளை விரிவுபடுத்துதல், உர வகைகளை உரிய காலத்தில்-உரிய அளவு

களில் வழங்குதல் - ஆகியவை மூலம் உணவு உற்பத்தி பெருக வகை செய்யப்படும். இதில் உர விநியோகத்தைப் பொறுத்த அளவில் மாநில அரசு, மத்திய அரசாங்கத்தைப் பெரிதும் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. மத்திய அரசின் செயல் ஏமாற்ற மளிப்பதாக இருக்கிறது. இதனால் உழவர்களிடையே பெருமளவில் கசப்புணர்ச்சி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உர வகைகளை முற்றிலும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும். இப்போது உருவாகி வரும் நான்காவது திட்டத்தில் உர உற்பத்திக்கு முதலிடம் தரவேண்டும் - என்று நமது மாநிலஅரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

* நிலவரி மீது போடப்பட்டிருந்த 'சர்சார்ஜ்' முன்பே நீக்கப்பட்டு விட்டது என்றும் இதுமட்டும் போதாது சிறு நிலக் கிழார்களை நிலவரிச் சுமையின் பிடிப்பிலிருந்து விடுவிப்பதற்குப் படிப்படியாகத் திட்டம் வகுக்கப்படும். இது குறித்து அடுத்த பசலிக்குள் திட்டவட்டமான முடிவுகளை அரசு மேற்கொள்ளும்.

* தற்போதைய நிலவாரச் சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைத்து பயிரிடும் குத்தகைக்காரர்கள் நடைமுறையில் நிலையான வார உரிமை பெறுவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் அச்சட்டத்தை மறு பரிசீலனை செய்யும்.

* சிறு நிலக் கிழார்கள் கூட்டுறவு நிறுவனத்திற்கும் தங்களுக்கும் மிக்க தொலைவு என்றும், அடிக்கடி தங்களுக்கு எதிராகச் செயல்படுகிற அரசியல் ஈர்ப்புச் சக்திகளுக்கு இந்த நிறுவனம் உட்பட்ட தென்றும் கருதுகின்றனர். பெரும்பாலான சிறு குடியானவர்களுக்குக் கூட்டுறவு நிறுவனத்தின் வேலையை ஆராய்ந்து நல்ல முறைகளில் அதைச் சீர்திருத்தி அமைப்பதற்கான செயற் குறிப்புகளை வகுப்பதற்கான குழு ஒன்று நிறுவப்படும்.

* சேலம் உருக்காலை போன்ற பெரிய தொழில் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்ற மாநிலஅரசு மத்திய அரசை வற்புறுத்தும்.

* மாநிலங்களின் பொறுப்புக்கு உட்பட்ட வேளாண்மை உற்பத்தி, கல்வி' பொதுச் சுகாதாரம், போன்ற எல்லாத் துறைகளிலும் மத்திய அரசு நிதி வரை யறைகளையும் ஏனைய வரையறைகளையும் விதித்து அதிகமாகத் தலையிடும் போக்கைக் கட்டுப் படுத்த வேண்டும்.

* எந்தத் திட்டத்தை முதலில் நிறைவேற்றுவது என்கிற வரிசைக் :கிரமத்திற்கு ஏற்ப, மத்திய அரசும் மாநில அரசுகளும் பகிர்ந்து கொள்ளும் தேசிய சேகரிப்பே மத்திய அரசாங்கத்தின் வருவாய் என்பது. ஆனால், மத்திய அமைச்சகங்கள், மத்திய கடன்களையும், மானியங்களையும் தங்களுக்குப் பிடித்தமான 'செல்லத் திட்டங்களை' வளர்ப்பதற்குப் பயன்படுத்துகின்றன. இதனால் இது முதலில்; இது இரண்டாவது - என்று முக்கியத்துவத்துக் கேற்ப வரிசைப் படுத்தி வைக்கப்பட்டிருக்கும் திட்டங்களின் வரிசைக் கிரமம் மாற்றப்பட்டு விடுகிறது. மேலும் இதனால் நாட்டின் அரிய நிதி ஆதாரங்கள் பயனற்ற முறையிலே கையாளப் படுவதற்கும் வழிகோலியுள்ளது

* தென் மாநிலங்களில் உணவு உற்பத்தி, உணவு விநியோகம் போன்றவைகளோடு நதி நீர் போன்ற இயற்கை வளங்களைப் 'பொது நன்மைக்குப் பயன்படுத்தும் விதத்தில் 'மண்டலக் குழுக்கள்' விறுவிறுப்பாகப் பணியாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

......இவைகள்தான் கவர்னர் தமது உரையின் மூலமாக வெளியிட்ட தமிழக அரசின் கொள்கைகள். இதற்கு முன்பும் தேசியத் திருவாளர்கள் ஏகச் சக்ராதிபதிகளாக கோலோச்சிய போது கவர்னர் துவக்க உரை ஆற்றியிருக்கின்றனர். அந்த உரைகளைப் படிப்பவர்களுக்கு இப்போது தமிழக அரசைத் துவக்கி வைத்திருக்கும்போது கவர்னர் அவர்களால் வெளியிடப்பட்ட எழுச்சி வரிகள் எத்தகைய புரட்சித் தன்மை வாய்ந்ததென்பது தெளிவாகும்.

யாருமே தட்டிக் கேட்காத அளவிற்குக் கொடி கட்டி ஆண்ட, மத்திய அரசை குடியரசுத் தலைவரது மாநிலப் பிரதி நிதியாக அங்கம் வகிக்கும் கவர்னரைக் கொண்டே பாடம் புகட்டி யிருப்பது வரலாறு காணாத புதுமையாகும்.

......''மத்தய அரசின் செயல் ஏமாற்ற மளிப்பதாக இருக் கிறது...'' என்று கவர்னர் அவர்கள் தமது உரையிலே எடுத் துக் காட்டுகின்ற முறை இப்போது முதன் முதலாகத் தமிழக அரசில்தான் கையாளப்படுகின்றது. அங்கே இருக்கின்ற டில்லி தேவதைகளுக்கு இங்கேயிருந்து கை தூக்கிடும் அதிச யப் பதுமைகளாகத்தான் இதற்கு முன்பு இங்கே அரசு பிரதி நிதிகளாக இருந்தவர்கள் அங்கம் வகித்தனர்.

'சேலம் இரும்பாலை போன்ற பெரிய தொழில் திட்டங் கள் சிலவற்றை நிறைவேற்ற மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தும்.'' என்று குறிப்பிடுகின்ற நம்பிக்கை வரிகள், தமிழக அரசு ஆற்றிட இருக்கும் சீரிய செயலினை விளக்கிக் காட்டின. 'வளமெல்லாம் அங்கே - வகையற்ற நிலை இங்கே' என்று நாம் ஆயிரமாயிரம் பொது மேடைகளிலே எடுத்துச் சொல்லிய கருத்தை இங்கே எவ்வளவு லாவகமாக கவர்னரைக் கொண்டே கூறவைத்திருக்கிறோம். வெறும் மேடைப் பேச் சென்று வர்ணித்த திட்டங்களை யெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றனரே என்பதை எண்ணிப் பார்த்திடும் போது வெட்கத்தால் தலை தாழ்த்திக் கொள்கின்றனர், திரு வாளர்கள்.

'அதிகமாகத் தலையிடும் போக்கைக் கட்டுப்படுத்தவேண் டும்' என்ற உரிமை முழக்கம் ஆதிபத்தியவாதிகளுக்கு உள் நடுக்கத்தைத் தருவதாகும். 'யாரை யார் கட்டுப்படுத்துவது' என்ற இறுமாப்பிலிருந்த பாரத புத்ரர்கள், கவர்னரைக் கொண்டே கட்டுப்படுத்த வேண்டுமென்று தமிழக அரசின் கொள்கை விளக்கப்படுவதைக் காணும்போது தேர்தலின் போது பயங்கர வீழ்ச்சி யடைந்ததைவிட அதிகமாக வேதனை

படுகின்றனர். தங்களது வீண் கித்தாப்புகளுக்கெல்லாம் கரி பூசப்படுவதை நினைத்து நினைத்து நெஞ்சம் துடிக்கின்றனர். அதேபோது நல்லறிஞர்களும் - நாட்டவர்களும் தமிழக அரசு எடுக்க இருந்த எழுச்சி தரும் ஏற்றமிகு நடவடிக்கைகளை முழு மனதுடன் இருகரமேந்தி வரவேற்றிட தயாராகி வந்தனர்.

தமிழக மேலவையில் கவர்னர்உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்த நமது அருமை மிகு அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியபோது

'தேர்தல் முடிவுகள் ஒரு கட்சிக்குரிய பாடம் மட்டுமல்ல; எல்லா கட்சிகளுக்குமுரிய பாடமாகும். தேர்தல் காலத்தில் பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்ருலும்நடந்தவை நடந்தவையாகஇருக்கட்டும் - நடப்பவைநல்லவைகளாக இருக்கட்டும். விலைவாசி உயர்வைப்பெரிய பிரச்சினையாகக் கருதி, நாங்கள் செயல்படுவோம். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம். அதில் நாங்கள் படிப்படியாக வெற்றி பெறுவோம்.

''விவசாயத் துறையில் சரியான கவனம் செலுத்தப்படாததால் பெரிய அவலம் ஏற்பட்டிருக்கிறது. மாநில அரசுகளுக்கு அதிகமான அதிகாரம் தரவேண்டுமென்று கவர்னர் உரை கூறுகிறது. 'இந்தக் கருத்தைப் பல ஆண்டுகளாக டாக்டர் ஏ, லட்சுமணசாமி போன்றவர்கள் எடுத்துக் கூறினர், அக் கருத்து இன்று வெற்றி பெற்றிருக்கிறது.''

''வாக்குறுதிகளிலிருந்து நழுவிச் செல்லும் எண்ணம் தி. மு. கழகத்திலிருக்கும் கடைசித் தொண்டனுக்குக் கூட இல்லை. சேலம் உருக்காலை இந்த மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு முதுகெலும்பு போன்றது. அதைப் பெறுவதில் உறுதி காட்டும் அரசு வந்திருக்கிறது. கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்பதுபோல் - அமைதிப் புரட்சியை காலத்தின் தீர்ப்பை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நான் இந்த சபைக்கு வரும்போது நண்பர் வெங்கட்ராமனும் அமைச்சர் இருக்கையில் இருந்தார், இப்போது எதிர்க் கட்சியில் இருக்கிருர் இதுதான் காலத்தின் தீர்ப்பு என்று அழகுபடக் குறிப்பிட்டுக் காட்டி, தென்னகத்திலே இலட்சியவாதிகளால் எழுதிக் காட்டப்பாட்ட தீர்ப்பின் முழு உருவத்தையும் விளக்கினுர்.

அங்கே, தமிழக மேலவையில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள் கவர்னர் உரைமீது பேசுகின்றபோது...“நான் இந்த சபையின் முக்கிய உறுப்பினர். பல மாறுதல்களைக் கண்டிருக்கிறேன். ஆனல் யாரும் எதிர்பார்க்காத பிரமாண்டமான மாறுதல் இது. தேர்தலில் நடந்த மாறுதல் மகத்தான மாறுதல். சிலர் தோற்றிருக்கலாம். ஆனல், இது ஜனநாயகத்தின் வெற்றி எனக் கொள்ளவேண்டும். மாறுதல்கள் நாட்டு வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். முதலமைச்சர் அண்ணு பதவிக்கு வருமுன் கட்சியை விட நாடு பெரிதென்று கூறியவர். அதே கொள்கையை இப்போதும் கடைப்பிடிப்பார் என்று நம்புகிறேன், புதிதாக வந்தவர்களுக்கு நிலைமைகளை உணர ஆறு மாதங்களுக்குமேல் அவகாசம் வேண்டும். உணவுப் பிரச்சினையில் மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்தால்தான் உணவுப் பிரச்சினை தீரும். ஒரு விஷயத்தைப்பற்றி பேச நான் கூச்சப்படுகிறேன், ஆனலும் பேசுகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக முன் எப்போதையும் விட தடியடிப் பிரயோகமும்-கண்ணீர்ப் புகையும், துப்பாக்கிச் சூடும் நிறைந்திருந்தது. அதுபோல் இனி நடக்காமல் அமைதி காக்கப்பட வேண்டும். மொழிப் பிரச்சினை காரணமாகத்தான் பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது என்று ஒரு பெரியார் கூறினர். அத்தகைய மொழிப் பிரச்சினை இங்கும் இருக்கிறது. அதைத் தீர்க்கும் சட்டத் திருத்தம் டில்லியில் கொண்டு வரப்படும் என்று நம்புகிறேன். எந்த மொழியும் யார்மீதும் திணிக்கப்படக் கூடாது. மொழியைத் தேர்ந்தெடுப்பது தனிப்பட்டவர்களின்

விருப்பமாக்க வேண்டும். ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிகள் போதுமானவையென்று கல்வி யமைச்சர் கூறியிருப்பதை வரவேற்கிறேன், "அன்று களி மிகக்கொண்டு கூறி வாழ்த்தி வரவேற்ருர்.

தமிழக சட்ட மன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து தோழர் எம். எஸ். மணி கொண்டுவந்த தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் கழக முக்கிய நண்பர்கள் பங்கு கொண்டு கொள்கைதனை பலபட விளக்கிப் பேசினர். சகோதரக் கட்சி உறுப்பினர்களோடு எதிர்க் கட்சியை அலங்கரித்த காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்டு தமது இதய கருத்தினை எடுத்துச் சொல்லினர்.

கழக நண்பர் சி, வி. எம். அண்ணுமலை பேசுகின்றபோது "காங்கிரஸ் அரசு தன் கட்சியையும் கட்சிக் காரர்களையும் வாழ்விக்க 20 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது. எங்களது வாக்குறுதிகளை நினைவு படுத்தும் காங்கிரஸ் நண்பர்கள் காங்கிரஸ் அளித்த வாக்குறுதிகளை நினைவுபடுத்திப் பார்த்தால் நினைவில் அடங்காது, ஏட்டிலும் அடங்காது. அற முறையைக் கொன்றுதான் சென்ற முறை நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. விவசாயிகளின் வாழ்வில் ஒளி சேர்ந்தால் தான் நாட்டின் வாழ்வில் ஒளி சேரும.

சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றும் மனிதர்-தமிழகத்திலே ஏன்-துணைக் கண்டத்திலேயே அறிஞர் அண்ணு அவர்களைப்போல் யாரும் இல்லை. ஆகவே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவார்" என்று பேசி வாக்குறுதி நிச்சயமாக நிறைவேற்றப்படுமென்ற உறுதிப்பாட்டை விளக்கினுர்.

தோழர் துரையரசன் பேசுகையில்-"கராச்சியில் போடப்பட்ட தீர்மானங்களை காங்கிரஸ் காற்றில் பறக்கவிட்டதுபோல் அல்லாமல் காஞ்சிபுரத்துத் தீர்மானங்களை நாங்கள் நிறைவேற்றுகிறேம் என்று எடுத்துக் கூறினுர்.

சகோதர முஸ்லீம் லீக் கட்சியை சேர்ந்த பீர்முகமது பேசுகையில் ''முஸ்லீம் லீக் சட்ட மன்றத்தில் தி. மு. கழகத்திற்கு எதிரிக் கட்சியாகவும் அல்லாமல் எதிர் கட்சியாகவு மல்லாமல் ஆதரவுக் கட்சியாகப் பணியாற்றுவோம்'' என்று நேச உள்ளத்தைக் காட்டினர். சகோதர சுதந்திராக் கட்சியைச்சேர்ந்த திரு. ஹண்டே பேசுகையில்......''புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட தி. மு. கழக அமைச்சரவைக்கு எனது பாராட்டுதல்கள்' கவர்னர் அவர்களின் உரையை வரவேற்றுப் பராட்டுகிறேன். இந்தத் தேர்தலில் நிலவிய அமைதிபற்றி கவர்னர் பராரட்டியிருக்கிறார். இந்தப் பாராட்டு தி. மு. கழகத்திற்குரியது. ஏனெனில், தி. மு. கழகத் தலைவர்கள்தான் மக்களை மிக அமைதியுடன் இருக்கச் செய்தார்கள்.'' என்று குறிப்பிட்டு தேர்தல் காலத்தில் எத்தகைய கண்ணியத்துடன் கட்டுப்பாட்டுடன் கழகம் நடந்து கொண்டதென்ற கடமையை விளக்கினர்.

சகோதர கம்யூனிஸ்ட் - மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி. கே, கோதண்டராமன் ''தவறான காங்கிரஸ் ஆட்சியைத் தூக்கி எறிந்து புதிய அரசை மக்கள் அமைத்திருக்கிறார்கள்'' என்று பெருமையுடன் குறிப்பிட்டார், கழக நண்பர் மலைச்சாமி ''பிரஞ்சுப் புரட்சி படைக்கலன்களைக் கொண்டு நடந்தது. ஆனால் தமிழகத்துப் புரட்சி வாக்குச் சீட்டின் மூலம் நடந்தது. ஒப்புக்காக அழுகின்றவர்களைப் போல ஒப்புக்காக காங்கிரஸ் கட்சி தி டங்களைத் தீட்டினார்கள் திட்டம் கோட்டையில் இருந்ததே தவிர குடிசைக்கு வரவில்லை ! அதனால்தான் உணவுச் சிக்கலும் ஏற்பட்டது.', என்று தனது விளக்க உரையினிடையே குறிப்பிட்டார்.

கழகம் ஆட்சிக் கோலேந்திய நாளிலிருந்து அதன் நடவடிக்கைகளை வெளியிலிருந்த நல்ல உள்ளம் படைத்தோரும், பேரறிஞர்களும் மிக மிகக் கவனமாகப் பார்த்து வந்தனர். கழகத்தின் அரசு ஈடுபாடு கவர்ச்சியும் கண்ணியமும் மிகுந்த போக்குடன் இருந்து வந்ததை அவர்கள் தெளிந்து வந்தனர்.

ஆட்சிப் பாங்கினை ஏற்றிடுவதற்கு முன்னரே தமிழக முன்னணி யினரின் நல்லாசியையும் பெருவாழ்த்தினையும் நேரில் சென்று பெற்ற அண்ணாவின் அவையடக்கத் தன்மையை அவனியில் வேறு எப்பக்கமும் கண்டிட முடியாத கேட்டிட முடியாத சிறப்பு மிகு நிகழ்ச்சியாகும். பெருந் தலைவர் பெரியார் அவர் களிடம் திருச்சி திருநகர் சென்று மாண்புமிகு அமைச்சர்கள் வணங்கி இதய வாழ்த்துதனைப் பெற்றதை அரசியல் உலகம் அவ்வளவு சாமானிய மானதாக மதிப்பிட முடியாத தாகும். பெற்ற பாசத்துடன் பெரியார் கழக அரசுதனை ஆத ரிக்க துவங்கிய தனது வரலாற்றிலே புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். பெரியார் அவர்கள்......"முன் னேற்றக் கழகத்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றதற்காக நான்வருத்தப்பட்டவன். 'நான்தோற்றுவிட்டேன்என்று அறிக் கையும் வெளியிட்டேன். அப்படிஇருந்தும் பதவிக்கு வந்ததும் என்னை வந்து சந்தித்து நாங்கள் ஆட்சியில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நீங்கள் ஆலோசனை சொல்லவேண் டும் என்று அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். 'அட என்னடா இந்த அளவுக்கு வந்துவிட்டதே' என்று எனக்கு மன மாறுதல் ஏற்பட்டது தெளிவாகச் சொல்லப்போனால் காங்கிரஸ் ஆட்சியைவிட மேலாக - திறமையாக நடை பெறும் முன்னேற்றக் கழக ஆட்சியை நாம் கட்டுப்பாடாக ஆதரிக்க வேண்டும். இன்று முன்னேற்ற கழக ஆட்சிக்கு எதிரி காங்கிரஸ் கட்சினயிர்தான், காங்கிரஸ்கட்சியினர் பார்ப் பனரல்லாத ஆட்சியாக நடித்தபோதிலும் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள் - வருகிறார் கள். இந்நிலையில் முன்னேற்றக் கழக ஆட்சியைக் கட்டுப் பாடாக நாம் ஆதரிக்காவிட்டால் அது தமிழர் சமுதாயத்திற்கு கேடு - பகுத்தறிவுக்கும், சுயமரியாதைக்கும் புறம்பானது ஆகி விடும்.' என்று அறிக்கைகள் வெளியிட்டும் மேடைகளில் அழகுபட பேசியும் வந்தார்கள். பேசியதோடு மட்டுமல்லா மல் ஆக்க பூர்வமான ஆலோசனைகளைக் கூறியதுடன் ஆற்

றல் மிகு திராவிடர் கழகத் தோழர்களின் பெருந் தொண்டினை யுந் திரட்டித் தந்தார்.

பெரியாரைப் போன்ற - இலட்சிய விதையை ஒவ்வொரு திராவிடர் உள்ளத்திலும் பதித்த முதுபெரும் தலைவரின் துணை கழக அரசுக்கு இருந்து வருவதைக் காண நல்ல உள்ளம் படைத்தோர் மிகுதியும் மகிழ்ந்தனர். பிற மாநிலத்தைச் சேர்ந்த பிரமுகர்களும், கழக ஆட்சிதனை சிறப்பிக்கின்ற முறை யிலே மதிப்பிட்டனர். பிரஜா சோசலிஷ்டுக் கட்சியின் அனைத் திந்திய பொதுச் செயலாளர் தோழர் பிரேம்பாசின், 'தி. மு. கழகத்தின் பொருளாதாரச் செயல் திட்டங்களை கருத்திற் கொண்டு பார்த்து, அதை ஒரு முற்போக்குக் கட்சி என பி. சோ கட்சி கருதுகிறது.'' என்று போபாலில் பேசுகின்ற போது குறிப்பிட்டார்கள். மேலும் செய்தியாளர்களிடம் உரை யாடுகின்றபோது தோழர் பிரேம்பாசின் ''காங்கிரசின் நசிவில் இந்தியாவில் வளர்ந்த ஒரே கட்சி மக்கள் கட்சி தி. மு. க. தான், அக்கட்சி வாழ்க்கைப் போராட்டத்தில் மிகத் துன்பப் படுபவர்கள் மற்றும் பாமரர்களின் மன எழுச்சிக்குப் பிரதிநிதி யாக விளங்குகிறது,'' என்ற தெளிந்த கருத்தினைச் சொல்லி தென்னகத்துக்கு வடக்கே இருக்கக்கூடிய தெளியாத நெஞ் சங்களுக்குத் தெளிய வைத்தார். அகில இந்தியாவிலும் கொடி கட்டி வாழ்ந்து, எக்காளச் சிரிப்பொலி முழங்கிவந்த காங்கிரஸ் கட்சியை வேரடி மண்ணோடு வீழ்த்திடுவதற்கு மக்கள் சக்தி பெற்ற மாபெரும் இயக்கமான தி. மு. கழகந்தான் காரணமாக இருந்த தென்பதை பி. சோ. கட்சியின் பொதுச் செயலாளர் செய்தியாளர்களிடம் மிக நல்ல முறையில் விளக்கி யிருந்தார். 'பாமரர்களின் மன எழுச்சிக்குப் பிரதிநிதியாக விளங்குகிறது' என்று அவர் கழகத்தைப் பெருமையுடன் குறிப்பிட்டதானது இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்படி ஒரு உழைக்கும் அணியின் சிறப்பினை கழகம் மட்டுமே பெற்றிட வாய்ப்புண்டு என்ற ரகசியத்தை அம்பலப்படுத்திய தாகவுமாகிறது. பாட்

டாளி வர்க்கத்தினருக்காக வெறும் டாம்பீகம் நிறைந்த கோஷங்களை மட்டும் போட்டுக்கொண்டிராமல் இதய பூர்வ மான பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பெருமை எப் போதுமே கழகத்திற்கு உண்டு. அந்தப் பெருமையை தோழர் பிரேம்பாசின் போன்றவர்கள் எடுத்துச் சொல்லியபோது கழ கத்தின் கம்பீரம் இமயத்தைத் தொட்டது.

நாட்டின் ஜனநாயகப் போக்கினைவியத்தகு முறையிலே அவர் கோடிட்டுக் காட்டியது போலவே, மேற்கு ஜெர்மனி யின் நேஷனல் பிரஸ் ஏஜென்ஸியைச் சேர்ந்த தோழர் - ரெஷ்கே .....'அரசியல் மேதைகள் முன்கூட்டியே சொன்னது இந்தத் தடவை சரியென்று நிரூபிக்கப்பட்டு விட்டதாகவே படுகிறது என்றும், காமராசர் அவரை எதிர்த்த தி. மு. க. வேட்பாளர் சீனிவாசனுல் தோற்கடிக்கப் பட்டிருப்பது தேர்த லிலேயே மிகப் பெரிய ஆச்சரியமாகக் கருதப்பட்டே தீரும்'' என்று எடுத்துச் சொல்லி பெரும் புள்ளிகள் இங்கே சாய்ந்த காதையை விளக்கினர்.

இந்த அரும் பெரும் நிபுணர்கள் தந்த கருத்துரையைவிட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன மதிப்புமிகு உரை சிறப்பு மிகுந்ததாகும்.

''தமிழக முதலமைச்சரின் கண்ணோட்டம் - ஆக்கப் பூர் வமானது. இத்தகைய நல்லுணர்ச்சி பிரச்சினைகள் தீர உத வும் என்ற முறையில் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு இந்தியப் பிரதமர் எழுதிய மடலின் தத்துவம் மண்டைக் கனம் பிடித்தவர்களுக்கு வாயடைப்பதாகும்,

அதேபோது பொருளாதாரப் புள்ளிகளெல்லாம் வெகு ஆவலுடன் எதிர் நோக்கிய தமிழக சட்ட மன்ற இடைக்கால நிதி நிலை அறிக்கை தயாராகிக் கொண்டிருந்தது. நிதி அமைச்சரென்ற முறையில் முதலமைச்சர் அண்ணா அதி கவ னத்துடன் தயாரித்து வந்தார். அரசுப் பங்கேற்ற 75-வது

நாளில் பேரறிஞர் அண்ணா நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்திடும் நிலை பிறந்திருந்தது. இரண்டு திங்களுக்கு மேலாகவே ஆட்சி பீடத்திலிருந்து தமிழக மக்களுக்கு இமை மூடி இமை திறப்பதற்குள் பல நன்மைகளைப் புரிந்து கொண்டிருந்த நல்லவர்களின் அரசு எத்தகு முறையிலே எழிலான அதன் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திடப் போகிறதென்ற ஆவலில்தான் தென்னகமே அந்த நாளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது.

அந்த இரண்டு திங்களாக அரசு செய்து முடித்த செயற்கரிய காரியங்கள் எத்தனை எத்தனையோ, ஓசைப் படாமல் ஓராயிரம் நன்மையைச் செய்து முடித்தார்கள். திரு. திருமதி செல்வி என்ற சொற்களைப் பெயருக்கு முன்னே பயன்படுத்த அரசு ஆணை பிறப்பித்தனர். 'தமிழுக்கு ஏற்றத்தைத் தரும் வழி வந்தவர்களின் அரசு இது! தாய் மொழி தமிழ் தலை நிமிர்ந்திட சகல ஆக்க முயற்சியினையும் கடைப் பிடித்திடுவோம்' என்று பாருக்கு அறிவித்திடுவது போல அமைந்தது. அரசுவின் இந்த ஆணை;

அரசு தாக்கீதுகளில் 'உம்மை' என்பதை 'உங்களை' என்றிருக்கும்படி மாற்றித் திருத்தப்பட்டது. மரியாதைக் குரியவர்களாக மக்களை மதித்திடத் தக்கவர்களாக அரசு அலுவலர்கள் மன மாற்றம் பெற்றிட வேண்டு மென்பதற்காக இந்த வழிமுறை மேற்கொள்ளப்பட்டது.

கொள் முதல் தீவிரப்படுத்தப் பட்டது——

மாட மாளிகையிலே 'கொட்டிக் குவித்து வைக்கப்பட்டிருந்த உணவு தானியங்களெல்லாம் வெளியே கொண்டுவரப் பட்டது. சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த பொது மக்கள் இந்தச் சதிகாரர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தித் தந்தார்கள். அரசுத் துறையினரும் இரவு பகலாக ஓய்வின்றிப் பாடுபட்டு சதிக் கிடங்குகளைக் கண்டறிந்து பொது மக்களுக்

குப் பயன்படாமலே பதுங்கிக்கிடந்த தானிய மணிகளை மூட்டை மூட்டையாகக் கொண்டுவந்து சேர்த்தனர். வயிறு பற்றி எரிந்தபோது, பார்த்தும் பாராதது போல நடந்து கொண்ட பெரிய மனிதர்களின் வீடுகளிலிருந்து லாரி லாரியாக தானிய மூட்டைகள் ஏற்றப்பட்டபோது ஏழையர் இதயம் பார்த்துப் பார்த்து பூரித்து மகிழ்ந்தது. 'நமக்காக ஒரு நல்லரசு பூத்துவிட்டது. இல்லாமை போக்கிட நமது இதயக் குரலுக்கு காது கொடுத்திட தூயவர்கள் வந்துவிட்டார்கள்' என்ற துணிவுடன்-தெம்புடன் நடை போட்டுக் கொண்டிருந்தனர். அரசு எடுத்த உடனடி நடவடிக்கைகளைக் கண்டு ஆதிக்க நினைவிலே பழகிப்போனவர்கள் துடி துடித்தும் போனார்கள். 'இப்படியும் நடக்குமா? நடப்பது கனவா' வென்ற ஆயாசத்தில் இடிந்து போய் நின்றனர். இவர்களது பரிதாபப் போக்கைக் கண்டு அநுதாபப் பட்டுக் கொண்டே அரசு தனது ஆக்கப் பணிகள் பலவற்றிலே வெற்றிவாகை சூடி வந்தது.

உடனடியாக கலெக்டர்கள் மாநாட்டைக் கூட்டி உணவு பிரச்சினை குறித்து ஆராயப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள் மக்களின் உண்மையான சேவகர்கள்தானென்பதை செயல் முறையில் காட்டிடும் வகையில் ஏற்கனவே அமைச்சர்களுக்கு நிர்ணயிக்கபட்ட சப்பளத்தில் பாதிச் சம்பளமே வாங்கப் போவதாகவும் அதுவும் குறிப்பிடத்தக்க அளவில் ரூபாய்க்கு படி அரிசி தரும் வரை அந்தப் பாதிச் சம்பளமும் வாங்குவதில்லை என்று அறிவித்திருந்தனர். பக்கத்து மாநிலமான மைசூர் மாநிலத்திலிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் ஆயிரம் ரூபாய் சம்பளத்தையும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று விரும்பி வேண்டிய நேரத்தில், தமிழக அமைச்சர்கள் பாதிச் சம்பளமே பெற்றிட விருப்பந்தெரிவித்ததையும் - அதுவும் படி அரிசித் திட்டம் நடைமுறைக்கு வரும்வரை அந்தப் பாதித்தொகையும் வாங்குவதில்லை என்ற சபதம் சபல எண்ணங்கொண்டவர்களையும்

நேர்வழியிலே கொண்டுவந்து றுத்தியது. இது வரை இங்கே அரசுப் பங்கிலிருந்தவர்களின் டம்பாச்சாரி முறைக்கும் இப்போது ஏழைகளின் உயிர்த் தோழர்களாகப் பதவி ஏற்றிருப்பவர்களின் வழிவகைகளுக்கும் நாட்டு மக்கள் நல்ல முறையிலே தெரிந்து கொள்ள முடிந்தது. படகு போன்ற பெரிய வாகனங்களை உபயோகிப்பதிலிருந்து விடுபட்டு சின்னஞ்சிறு வாகனங்களைப் பயன் படுத்தி சிக்கனத்தைக் கடைப் பிடித்தனர். ஆற்றல் மிகு அமைச்சர்கள் கட்சிப் பிரசார நோக்கங் கொண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செல்கின்ற போது. அரசுப் பணத்தில் கைவைப்பதில்லை என்ற முடிவிற்கு வந்து அந்த நல்ல முடிவை நடைமுறையாக்கி வந்தனர். அமைச்சர்களின் எளிமையும், ஆற்றலும் சகல பகுதி மக்களையும் கவரத்துவங்கியது. பகலுக்கும் இரவுக்கும்—வீட்டுக்கும் கோட்டைக்கும் வித்தியாசம் தெரியாத அளவில் அமைச்சர்கள் ஓய்வின்றிப் பணியாற்றிவந்தனர். பல நேரம் அவர்கள் பசியோடிருந்து திட்டங்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் பதவி ஏற்ற நாளிலிருந்து பதுக்கல் வேட்டைப் பிரமுகர்களைப் பிடித்து, அவர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களை வெளிக் கொண்டுவந்து சேர்ப்பதிலே அமைச்சர்கள் அயராது பாடு பட்டனர். முதலமைச்சர் அண்ணா...'லாரிகளிலே உணவுப் பொருட்களை மட்டும் நீங்கள் கடத்தவில்லை. பல லட்சக் கணக்கான உயிரைக் கடத்துகிறீர்கள்' என்று கடத்தல் புள்ளிகளைப் பற்றி பேசுகின்றபோது எச்சரித்தார். அதன் தொடர்பாக தென்னகத்தின் பலபகுதிகளிலும் உணவு வழங்கு துறை எச்சரிக்கைப் பிரிவு காவல்துறையினரால் அமைச்சரவை பதவி ஏற்ற 6-3-67 முதல் 24-3-67 நள்ளிரவுவரை வெளிக் கொணரப்பட்ட பதுக்கல் பொருள்களும் அவற்றின் மதிப்பும் வருமாறு:

மாவட்டம்	நெல் குவிண்டால் கணக்கில்	அரிசி குவிண்டால் கணக்கில்	இதர தானியம் குவிண்டால் கணக்கில்	உரம் மூட்டைகள் கணக்கில்	ரூபாய் மதிப்பு
சென்னை		102·25			7756·00
செங்கற்பட்டு	4779·78	189·38	221	2001	414589·00
வட ஆற்காடு	81·75	64·77	38·75		13875·00
திருச்சி	494·11	41·53			31809·00
மதுரை	2203·75	117·20	140		146691·00
திருநெல்வேலி	229·50	5·50			8228·00
கன்னியாகுமரி	112·34	18·39	10·80	8	8057·00
தஞ்சாவூர்	2027·95	5·74			94331·00
சேலம்	290·75	111			29740·00
தர்மபுரி	4·50	17			2210·00
கோவை	21	156·95	65·25		22000·00

கோடான கோடி ஏழை எளியவர்களின் வயிற்றிலடித்த பதுக்கல் பூதங்களிடமிருந்து — அவர்களின் ரகசியக் கோட்டைகளிலிருந்து பல லட்சக் கணக்கான மதிப்புள்ள உணவுதானியங்களை வெளியே கொணர்ந்தனர் தமிழக அரசினர். இதற்கு முன்னே இயங்கிவந்த காங்கிரஸ் அரசினர் இப்படிப் பட்ட மக்களுக்குத் தேவையான அருபம்ணியினை ஆற்றிடவில்லை என்பதோடு, வஞ்சக எண்ணங்கொண்ட கள்ளச் சந்தை கழுகுகளுடன் கூடிக் குலவி மகிழ்ந்திருந்தனர். அவர்களின் போலி வேடத்தையெல்லாம் நாடறியச் செய்தனர் மக்களரசின் திருத் தொண்டர்கள். பதுக்கல் பேர்வழிகளைப் பிடித்த வேலையோடு வேலையாக கொள்முதலை தீவிரப்படுத்தியது அரசு. பதவி ஏற்ற இரண்டே கிழமைக்குள்...

செங்கற்பட்டு மாவட்டம்	286189 ரு
வடாற்காடு மாவட்டம்	12200
திருச்சி மாவட்டம்	135226
குமரி மாவட்டம்	66500
தஞ்சை மாவட்டம்	99251
தருமபுரி மாவட்டம்	2120
கோவை ம வட்டம்	7000
தென்னாற்காடு மாவட்டம்	89129

...என்ற அளவில் பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உணவுதானியங்களை கொள்முதல் செய்து தீர்த்தது அரசு. மக்களுக்காக உழைத்திட வேண்டுமென்ற தொண்டுள்ளம் கொண்ட அரசினர்மட்டுமே இத்தகு தீவிர ஈடுபாட்டைக் கொள்ளமுடியும் கொள்முதல் துறையிலே. அதைத்தான் தமிழக அரசினர் மிக மிக கவனத்துடன் செய்து முடித்தனர். காவல் துறையைத் தமிழக எல்லையோரங்களிலே பலப் படுத்தி வெளி மாநிலங்களுக்குப் பதுக்கல் பேர்வழிகள் மூலமாகச் சென்று கொண்டிருந்த கள்ள வாணிப முறைக்கும் தடைபோடப் பட்டது. அதே போது சகல சுற்றுச் சார்புகள் மீதும் கண் காணிக்கப்பட்டது

"சமூக விரோதிகள் அதிகார வட்டாரத்திற்கு அப்பால் தான் இருப்பார்களென்று நாங்கள் நினைப்பவர்களல்ல. அதி காரிகளுக் குள்ளேயும் சமூக விரோதச் சக்திகள் இருக்கலாம். தயவுதாட்சண்யமில்லாமல் அரசியல் கட்சி வேறுபாடில்லா மல் சமூக விரோத சக்திகளை அடக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப் பிட்டுப் பேசியது மட்டுமல்லாமல் ஊழல் முறை எங்கிருந்தா லும் அது எந்தத் துறையிலே யிருந்தாலும் ' உடனடித் தீர் வைக் காண முயன்றார்.

சமூக விரோதிகள் பிடிபட்டு சமுதாயத்தின் நல்ல வாழ்விற்கான துவக்கம் ஏற்பட்டிருந்த வேளையில்... பொதுப் பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த கலைத்திரு கருணாநிதி அவர்கள் பொதுமக்களுக்கு மேலும் மேலும் வசதி வாய்ப்பினைப் பெருக்கிட வேண்டுமென்ற வளமான எண்ணத் தில் தமிழகத்தில் நீண்ட தூர பயண பஸ் கட்டணத்தைக் குறைத்தார். இது குறித்து மெயில் ஏடு எழுதிய தலையங் கத்தில் நீண்ட தூர பயண கட்டணத்தை குறைத்திருப்பது தி. மு. கழக அரசாங்கத்தின் பாராட்டத்தக்க முடிவாகும். இது பொது மக்களால் பாராட்டி வரவேற்கப்படும். மைலுக்கு 6 காசுகளிலிருந்து கட்டணம் 5 காசுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது அரசாங்க பஸ்களைப் பயன் படுத்தி வந்த பயணிகளுக்குக் கிடைத்துள்ள கணிசமான நிவாரணம் ஆகிறது. கட்டண உயர்வினால் இந்த பஸ்கள் வருவாயில் ஏற்பட்ட குறைவினால் புதிய முடிவிற்கு வந்திருக்கலாம். கடந்த ஆண்டு ஜனவரியில் இக்கட்டண உயர்வு அதிகரிக் கப்பட்ட போதே வருவாயைக் கூட்டுவதற்கு பதிலாக நேர் எதிர்வான விளைவை ஏற்படுத்தக்கூடும் என்று அச்சம் தெரி விக்கப்பட்டது அந்த அச்சம் ஆதாரமில்லாததாகி விட வில்லை. தங்களது கட்டண விகிதங்களை உயர்த்தாதது இருந்த நிலையில் அவற்றை விட்டு வைத்த ரயில்வேக்களும் தனியார் பஸ்களும் இதனால் லாபம் அடைந்தனர். இப்

போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டணக் குறைப்பானது இழந்த வருவாயை திரும்பப் பெறவும், தன் பயணிகள் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ளவும் உதவும்' என்று விளக்கமாக வரவேற்று எழுதியது. துரிததூரப் பயணிகள் அரசு செய்து தந்த வாய்ப்பினைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொண்டனர். கட்டணத்தைக் குறைத்தும்—காங் கிரஸ் அரசினர் காட்டிய லாபத்தை விட 4000 ரூபாய் மாதமொன்றுக்கு அதிக லாபத்தைத்தான் கழக அரசு காட் டியது மெயில் ஏடு குறிப்பிட்டது போல--தனியார் பஸ்களை நடத்தி வந்த பண முதலைகள் வளமடை வதற்குத்தான் காங்கிரசார் நடத்தி வந்த அரசில் சாதகமிருக்க முடிந்தது. அரசுக்கும் ஒரு பக்கம் வருமானத்தைக் கெடுத்துக் கொண்டு மறு பக்கம் பொது மக்களின் பணத்தைக் கரியாக்குவதிலு மான காரியத்தில் அவர்கள் ஈடு பட்டிருந்த முறைக்கு துரித பஸ்களின் தற்போதைய கட்டணக் குறைப்பு நல்ல தொரு விளக்கமான படப் பிடிப்பாகும்.

பொதுமக்களுக்கு வசதியும், அரசுக்கு வருமானமும் பெருகிய நேரத்தில் அரசு போக்கு வரத்துத் துறைத் தொழிலாளர்கள் விழாவிற்கு அழைத்து வந்திருந்த அமைச் சர் கருணாநிதியிடம் தொழிலாளர் குறைகளடங்கிய நீண்ட தோர் பட்டியலைத் தந்திட்ட போது பாதிக்கு மேல் அதே விழாவில் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். ஒரு பக்கம் கோரிக்கையை நீட்டிய நேரத்தில் மறு பக்கம் கழக நண்பர் கள் அமைச்சரைப் பாராட்டுகின்ற முறையிலும், வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்ற முறையிலும் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சிகள் முடிவதற்கு முன்னதாகவே தமது இலாக்கா சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை நேரிடையாக கவனித்திடும் அவசியத் துரி தப் பணியில் ஈடுபட்டார் கலைஞர்--நமது பொதுப் பணித் துறை அமைச்சர். பொதுப் பணித்துறை அமைச்சர்

எடுத்த உடனடியான ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் நல்ல உள்ளத்தவரின் பாராட்டைப் பெற்று வந்தது.

92-வது வட்டத்தின் சார்பில் நடை பெற்ற நன்றி சொல்லும் கூட்டத்தில்... நீங்கள் காலால் இட்ட கட்டளையை நான் தலையால் செய்து முடிக்கக் காத்திருக் கிறேன். நீங்கள் இடுகின்ற கட்டளை நியாயமானதாக இருந் தால் சட்ட ரீதியானதாக இருந்தால் அவை ஏழை எளிய வர்களுக்கு நல்ல வாழ்வு தருவதாக இருந்தால் அந்தக் கட்டளையை நிறைவேற்றித் தருவதை விட பதவி பெரிதல்ல என்று கருதுகிறவன் நான். எனக்குத் தரப்பட்டிருக்கிற துறை நம்முடைய சைதாப்பேட்டை தொகுதிக்கும் ஏற்ற துறையாகும். குடிசை நிறைந்த தொகுதி இந்த சைதாப்பேட்டை தொகுதி. நான் தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் சென்றால் அங்கெல்லாம் "உங்களுக்கென்ன நகரத்திலல்லவா இருக்கிறீர்கள்" என்று கேட்கிறார்கள்; சைதாப்பேட்டைத் தொகுதி நகரமா—கிராமமா? இரண்டுங் கெட்டான் நிலையில் இருக்கிறது. பூவிருந்தவல்லியிலிருந்து குதிரைப் பந்தயம் நடக்கின்ற கிண்டியைக் கடந்து--குடிசை களாக இருப்பது சைதைத் தொகுதி. இந்தத் தொகுதியைப் பண்படுத்த வேண்டியது சீர்திருத்த வேண்டியது மாநகராட்சி யின் பொறுப்பு; அதை ஊக்குவிப்பது சர்க்காரின் கடமை.

அடுத்து எனக்கு பொதுப்பணித் துறை என்று தலைப் பிடப்பட்டிருந்தாலும் போக்கு வரத்துத் துறையையும் மேற் கொண்டிருக்கிறேன். சர்க்காரின் பஸ்களும் தனிப்பட்டவர் களின் பஸ்களும்; இந்தத் துறையின் கீழ்தான் இருக்கின் றன தி. மு. கழகத்தின் இலட்சியம் எல்லா பஸ்களையும் தேசிய மயப் படுத்தவேண்டும் என்பது. அது நடைபெறுமா என்ற கேள்விக்குறி உங்களிடையே இருக்கிறது. இதற்கான நட வடிக்கையை தி. மு. கழகம் தீவிரமாக மேற் கொள்ளும் கூடு மான வரை எங்களது ஆட்சிக் காலத்திலேயே உங்களின்

அன்பான ஆதரவின் துணை கொண்டு பஸ் தொழிலை தேசிய மயமாக்கும் இலட்சியம் வெற்றி பெறும் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இந்தத் துறைக்கு வந்தவுடன் என்னைச் சந்தித்த நண்பர்களெல்லாம் போயும் போயும் பஸ் தொழிலை மேற்கொண்டிருக்கிறீர்களே '? ஏற்கனவே நஷ்டத்தில் நடக்கிறது நஷ்டக்கணக்குக் காட்டக் கூடிய துறையை மேற்கொள்கிறீர்களே என்று வருத்தப் பட்டுக் கொண்டார்கள்

சென்னை நகர பஸ்களில் உண்மையிலேயே சர்க்காருக்கு லாபமில்லை தான். முப்பத்து நான்கு முப்பத்தைந்து லட்ச ரூபாய் நஷ்டம் தான். காங்கிரஸ் சர்க்கார் காட்டி வந்த நஷ்டக் கணக்கைக் குறைத்து அதனை சமப்படுத்தி ஈடு படும் இந்தத் துறையில் முன்னேற்றம் காண தீவிர கவன செலுத்துவேன் ' என்று அமைச்சர் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்கள். மேடையில் கூறிய கருத்து காற்றோடு கலந்தது என்ற நிலைமை இருந்து விடாமல் ஆக்கப் பணி கள் பல உருவெடுத்தன. அந்த வரிசையிலேதான் துரிதபஸ் களின் கட்டணக் குறைப்பு சிறப்பிடம் பெற்று எல்லோரையும் மகிழ்வித்து நடுத்தர ஏழை எளிய மக்களுக்கு அந்தக் கட்டணக் குறைப்பு வரப்பிரசாத மாக அமைந்தது கழக அரசு ஏற்படுவதற்கு முன்னர் இப்படி ஒரு நிலைமைக்காக ஆட்சி பீடமேறியோர் கவலை கொண்டிருக்கவில்லை காரணம் அவர்களெல்லாம் ஏழையர் வாழ்கின்ற உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள விருப்பமில்லாதவர்கள். அவர்களின் உறவும் சுகமும் பங்களாவாசத்தோடு சரி மெருகு குலையாத புத்தம் புதிய காரிலே பவனி வருவதும், துரைமார் கூட்டத்தின் நளினத்தோடு நடந்து கொள்வதும் அவர்களுக்கே பழகிப் போன முறை.

ஆனால் இப்போது அரசு பீடம் ஏறியிருப்பவர்களோ நேர் எதிரிடையான நிலையிலே இருப்பவர்கள். நானும்

நடை பாதையிலே நடந்து பழக்கப்பட்டவர்கள். எந்த பஸ்ஸிலே அன்றாடம் அடிதடியோடு மக்கள் ஏறிச்செல்லு கிறார்களோ அதே பஸ்ஸில் அதே மக்களோடு மக்களாக இதயம் கலந்திடும் முறையிலே பயணம் செய்பவர்கள். அவர்களுக்கு சாதாரண மக்கள் படும் கஷ்ட நஷ்டங்கள் தெரிந்த காரணத்தால் தான் அவர்களுக்கான ஆக்கப் பணி யிலே ஈடு பட்டனர். உல்லாச புரி நோக்கி பெரும் பயணம் துவக்கி யிருந்தால் அவர்கள் பாதை வேறு விதமாக வல்லவா அமைந்திருக்கும் அந்த அட்டகாச நிலை அமையாத காரணத்தால் தான் ஏழையின் இதயத்தோடு இதயமாக இருந்து குரல் கொடுத்தனர். அந்தக்குரல் மோட்டார் மன்னர்களை, எண்ணற்ற கோடீஸ்வரக் குடும் பங்களைத்தான் குழப்பத்திலே கொண்டுவந்து சேர்த்தது, "இது வரை ஆளவந்தவர்கள்...கூப்பிட்ட குரலுக்கெல்லாம் ஆடி ஓடி வருபவர்களாக இருந்தார்களே...அவர்களைப் போன்றே இவர்களும் நமது கடைக் கண் அசைவிற்கு இசை வார்களென்று நம்பினோமே! நம்பிக்கை நாசமாகி விட் டதே...தேசியம்—சுதேசியம் என்று எதை எதையோ பேசி நமது ஆசைக் கோட்டைக்கு வெடி வைத்திட எண்ணு கின்றனரே!... மந்திரிகளென்ன—மந்திரிகளென்றால் சின்ன மந்திரிகளையல்ல...பெரிய பெரிய மந்திரிகளெல்லாம் நமது மாளிகை வாசலிலே காத்துத் தவம் கிடந்தனரே. மந்திரி கள் மட்டுமா? கவர்னர்கள். கலைக்டர்கள் என்ன...கூட் டம் கூட்டமாக வந்து போய்க்கொண்டிருந்தனரே! அந்த சிருங்கார மெல்லாம் இப்போது எங்கே?" என்று ஏக்கப் பெரு மூச்சோடு பேசிடத் தான் முடிகிறது இன்று, அன்று வளங்கண்டவர்களால் இப்படிப்பட்ட ஒரு விபரித நிலை உருவாகியதைக் காணக் கண்கொண்டு சகித்திட முடியா தோர் மயங்கித் தயங்கிய நேரம்...

அண்ணா முதலமைச்சர்களின் மாநாட்டிற்காக டெல்லிப் பட்டணம் சென்றார். பாராளுமன்றப் பிரவேசத்திலேயே சிறப்

பீடத்தைப் பெற்றிருந்த அண்ணா; தென்னகத்திலே கொடும் புலியை வீழ்த்தி வெற்றி வாகை சூடிச் சென்றபோது வட புலம் மிக மிக அதிசயப்பட்டு, மொய்த்த விழி திருப்பாமல் நோக்கிக்கொண்டிருந்தது. வடபுலத்தின் பெரும்புகழ் படைத்தோர் நம் பேரறிஞரின் திரு உருவந்தன்னை தரிசித்து வணங்கி, வாழ்த்திச் சென்றனர். டெல்லியில் நடந்த மாநாட்டில்... பர்மாதரவேண்டிய கடனுக்கு அரிசி பெற்றிடுவது பற்றி ஆலோசனை செய்யும் படி மத்திய பீடத்தை வேண்டினார் அந்த நாட்டிலேயே அண்ணாவின் சிறப்பு மிகுந்த கருத்து தனி முக்கியத்துவம் பெற்று காட்சியளித்தது. பர்மாவாழ் தமிழர்களை வெந்த உள்ளத்தோடும் பெருகி வந்த கண்ணீரோடும் கடல் வழி அனுப்பிவைத்த பர்மா அரசினர் அவர்கள் தந்திடவேண்டிய கடனுக்கு இதுவரை அரசு செலுத்தியோர் வழிவகை கண்டிடவில்லை என்பதோடு, அண்ணா அவர்கள் டெல்லி பீடத்துககு தட்டிச் சொல்லிய துணிவும் பெற்றிடாமலேதானிருந்தனர். தமிழர் தம் துயர் துடைத்திடும் உண்மைப் பிரதிநிதிகள் நாங்கள்தானென்று வாய்டமாரம் அடித்தவர்களின் வெளிவேடத்தை அண்ணா அவர்களின் ஆணித்தரமான கருத்து முச்சந்தியிலே நிறுத்தியது. சொந்த நாட்டிலே சோற்றுக்கு வழியில்லாமல் சோகந் தாங்கியாக இருப்பதைவிட அந்நிய நாடுசென்று உழைத்து பிழைத்து மானமாக வாழலாமென்று என்றோ ஒரு நாள்... காடுமலை தாண்டி' கத்துங் கடல் தாண்டிச் சென்ற தமிழன் புகுந்த இடத்தைப் பூத்துக் குலுங்கும் சோலையாக்கினான் கண்ணீரையும் செந்நீரையும் ஒரு சேரக் கொட்டி வளத்தை வகைப் படுத்தித் தந்தான். வளம் வந்த பிறகு வறுமை போக்கிக் கொள்ள வந்த தமிழன் விரட்டப்பட்டான். அழும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, தேம்பும் மனைவியை அழைத்துக் கொண்டு செந்நீரைக் கொட்டி வாழவைத்த ரங்கோன் சீமையை—பர்மாபுரியை—ப் பார்த்துக்கொண்டே என்னால் ஏற்றம் பெற்ற நாடே போகிறேன்—வரமாட்

டேன். பொன்னையும் பொருளையும் உனது பாதங்களிலே கொட்டிக் குவித்துவிட்டு எந்த ஒட்டாண்டியாக இங்கே வந்தேனோ அதே நிலையில் எனது தாயகம் நோக்கி அடி எடுத்து வைக்கிறேன். வரும்போது தனியனாக வந்தேன் இப்போது புதுச் சுமையோடு அன்புத்தொல்லைகளோடு — மனைவி மக்களென்ற பாரத்தோடு நடைபோட்டுப் போகி றேன். அலைகடலுக்கு அப்பால் யாரையுமே அறிமுகப் படுத் திக்கொள்ளாத நிலையிலே போய்ச் சேரும் எங்களது அவ லம் எப்படி இருக்குமோ ? நீ வாழவேண்டுமென்பதற்காக உழைத்தவனை ஒருமுறை நன்றியோடு பார்த்துக் கொள் அது போதும்.'' என்று கத்திக்கதறி, முட்டி மோதி இங்கு வந்து சேர்ந்த அந்த நாதியற்றவனுக்காக யாரும் முன் கர மெடுத்திடாதபோது கழக அரசு டில்லி பீடத்தோடு அவர் களுக்காக வாதிட்டது. பர்மிய அரசு தரவேண்டிய கடனை அரிசியாக அனுப்பட்டும். கப்பல் கப்பலாக வந்து திசை தெரியாது தேம்பித் திரியும் பர்மா வாழ்ந்த அகதிகளுக்கு இதன் மூலமாவது வழிதிறக்க முடியுமென்பதை இடித்து இடித்துக் கூறினார் அண்ணா. பாகிஸ்தான் அகதிகள் என்ற பெயரால் வரவழைக்கப்பட்டவர்களுக்கு அகண்ட இந்துஸ் தானம் பேசியவர்கள் தங்கத்தாம்பாலத்திலே வரவேற்புத் தந்தார்கள். எத்தகைய சிறப்போடு அவர்களெல்லாம் வாழ வசதி பெற்றார்களென்பதை நாடு அறியாததல்ல ஆயினும் விரட் டப்படுகின்ற தமிழர்களுக்கு மத்திய அரசினர் எத்தகைய ஆமைவேகத்தில் நிவாரணமளிக்க முன் வருகின்றனரென்ப தும் கவனிக்கத் தக்கதாகும்' கூடுதலான வேகத்தையும், கவர்ச்சியான அமைப்பையும் அவர்களுக்குச் செய்தவர்கள் இங்கே பரிதாபத்திற்குரிய தமிழனிடம் நிதானத்தைக் காட்டு கின்றனர். இந்த வேதனையான போக்கிற்கு முடிவுகட்ட டில்லியிலே உரிமைக் குரல் கிளப்பினார் அண்ணா. பன் நெடுங்காலமாக மூலையிலே தூங்கிக் கொண்டிருந்த பர்மிய அரசுக்கடன் பற்றிய விபரம் மதிமிக்க மத்திய ஆட்சிபீட

மந்திரிமார் திருப்பார்வையில் படமுடிந்தது அண்ணாவின் ஆற்றல்மிகு செயலால்.

அண்ணாவின் அரசு தனது செயல்திட்டங்களை மேலும் மேலும் விரித்துச் சென்றபோதுதான் இந்தி எதிர்ப்பு வீரர்கள் பற்றிய திருப்பம் ஏற்பட்டது. கழக அரசுக்கு முந்திய காங்கிரஸ் அரசு இயங்கிய நேரத்தில் அதை செயலற்றுப் போகும் நிலைமையை உண்டாக்கிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரைப்பற்றி நாடு அறியாததல்ல. அந்த அறப் போரில் மாணவர் எத்தகைய மானங்காத்திடும் மரபினராக ஆற்றல் மிகு சேவை புரிந்தனரென்பதையும் வரலாற்றுப் பொன்னேட்டிலே மங்காத ஒளியோடு காணமுடியும். மாணவமணிவிளக்கு இலட்சிய வீரன் இராசேந்திரன் துறைத்தனத்தின் குண்டடி பட்ட நிலையிலும், தனது ரத்தத் துளிகளால் நாட்டின் களங்கத்தைத் துடைத்துக் கொண்டே 'இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!' என்று வீர கர்ஜனை புரிந்து தனது கடைசி நேரத்தையும் தாய்மொழி காத்திட அர்ப்பணித்த நிகழ்ச்சியை யார்தான் மறந்திட முடியும்? எண்ணி எண்ணிப் பாராட்டாதோர் யாரோ?... இப்படிப்பட்ட அரும் பெரும் வீரர்களை அறிமுகப் படுத்திவைத்தது இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர்.

திருச்சியிலே தியாகி சின்னச்சாமியும், சிங்காரச் சென்னையிலே சிவலிங்கமும் தீக்குளித்தனர் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து. 'ஊனும் உடலும் உயிரும் இருந்தென்ன... நான் பேசும் தமிழ் வாழவேண்டும்.' அன்னை மொழி தமிழ் வாழ என்னையே போக்கிக் கொள்கிறேன். தன்னையே மதிக்காது தமிழையே மதித்திடுவோரிடம் இந்தி எத்தகைய மதிப்பைப் பெற்றுவிடும் எப்படி வாழ்ந்து வரும்'' என்று கேட்டுவிட்டு அவர்கள் போய் விட்டார்கள். அந்தச் சாம்பலின் சூடு ஆறுவதற்குள்ளேயே திறவாத கண்களெல்லாம் திறந்து-

கொண்டன. மூடிக்கிடந்த இரும்பு இதயங்களெல்லாம் வழி விட்டன, மொழிகாத்திட தீக்குளித்த தியாக பாரம் பரியம் தென்னகத்திலே பரவி வந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பை பலபட பாருக்கு விளக்கிக் காட்டியது.

1965 - ஜனவரி 26ம் நாள் இந்தி அரியாசனம் ஏறிட ஆர்ப்பரிக்கும் நாள், நமக்கோ துக்க தினமென்று அந்த நாளை அறிவித்திடும் முறையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள்... "1965ல் ஜனவரி 26ல் இந்தி ஆட்சி மொழியாகிறது. எனவே இந்த ஜனவரி 26 நமக்கு துக்க தினம். சென்ற வருடம் ஜனவரி 26ம் நாளை துக்க தினமாகக் கருதும் நிலை ஏற்படவில்லை. அடுத்த வருடமும் நாம் நினைக்கப் போவதில்லை" என்று தமது நீண்ட அறிக்கையிலே குறிப்பிட்டார்கள், உடனே காங்கிரஸ் ஜாம்பவான்கள் அதிர்வேட்டைப் போன்று முழங்கியதோடு துக்க தினத்துக்கு எதிர் நடவடிக்கை எடுத்திடும் முயற்சிலே ஈடுபாடு கொண்டனர், இந்த ஜபர்தஸ்துகளைக் கேள்விப்பட்ட அண்ணா துக்க தினத்திற்கு முந்திய நாள் தெளிவான தமது உள்ள முருக்கிடும் அறிக்கையைத் தந்தார்.

"வன்முறை தலைக்காட்டக் கூடாது என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டவன். ஆயினும் முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் கறுப்புக் கொடிகளை அறுத்தெறிவோம் கூட்டம் நடத்த அனுமதிக்க மாட்டோம். போலீஸ் கூட அல்ல — தன்னாலே எல்லாம் நடந்துவிடும் என்று பேசியிருக்கிறார், ஆகவே பொது இடங்களில் கறுப்புக் கொடி — தோரணம் ஆகியவைகளைப் பறக்க விடுவதோ; கட்டுவதோ முற்றிலும் கூடாது. கழகப் பணி மனைகள் உங்கள் இல்லங்கள் இங்கு மட்டும் கறுப்புக் கொடி பறக்கவிடுவதுடன் உங்கள் கடமை முடித்து விட்டது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். துளியும் வன்முறை கூடாது, அறவே கூடாது. கலவம்ர

பொருள் சேதம் போன்றவைகள் ஏற்படக் கூடாது. பழி போட அஞ்சாதவர்கள் நம்மைச் சூழ இருக்கிறார்கள். நான் மகிழத்தக்க அளவில் கடமை — கண்ணியம் — கட்டுப்பாட்டுடன் அறநெறி நின்று நடந்துகொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.'[1]

பேரறிஞர் அண்ணா அவர்கள் இவ்வளவு அமைதிமிகுந்த அறப் போரை நடத்தும்படி வேண்டுகோளிட் டிருந்தும் காங்கிரஸ் நண்பர்கள் எழுச்சி பற்றிய தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் தடியெடுத்து தாண்டவமாடத் துவங்கினர். தனிப்பட்ட கழக நண்பர்களின் இல்லங்களில் கட்டப்பட்ட கறுப்புக் கொடிகளை காங்கிரஸ் குண்டர்களைக் கொண்டு அறுத்தெறிந்தனர், போலீசாரின் துணையோடு, கறுப்புக் கொடிகள் அசைந்தாடிய இல்லங்களுக்கு பெருத்த சேதத்தை விளைவித்தனர், கழகத் தலைவர்களின் வீடுகளிலே பட்டப் பகலிலே பகிரங்கமாக ஏறிக் குதித்து கறுப்புக் கொடிகளை இறக்கி அராஜக ஆர்ப்பாட்டம் புரிந்தனர். இலட்சிய நடிகர் இராசேந்திரன் இல்லத்து உச்சியில் பறந்த கறுப்புக் கொடியை போலீசாரும், காங்கிரசாரும் சேர்ந்து அறுத்தனர். இலட்சிய நடிகர்மீது வழக்கும் போட்டனர். மதுரையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய மாணவர்கள்மீது காங்கிரஸ் காலிகள் பாய்ந்து வெறி கொண்டு அரிவாளால் வெட்டிச் சாய்த்தனர். இந்தக் கொடுமையைக் கண்டித்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலம் நடத்தியபோது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதைத் தொடர்ந்து நாடெங்கும் புரட்சி பொங்கியெழுந்தது.

துப்பாக்கிப் பிரயோகம் — வன்முறை செயல்கள் —போலீசார் சிலர் கொளுத்தப்பட்டது தீக் குளித்தல்—பொதுச் சொத்து நாசம் இப்படிப்பட்ட பயங்கர நிகழ்ச்சிகள் உருவெடுத்தன. கேளாக் காதர்களாக மிகமிக உயரத்திலிருந்த டில்லி மூலவர்களுக்கே நடுக்க மேற்பட்டிருந்தது. பேரறிஞர் அண்ணா

குமுறிடும் எரிமலையாக இருந்த மாணவ சமுதாயத்தையும் நாட்டு மக்களையும் அமைதி யடையும்படி பணிவன்போடு வேண்டி நின்ருர்.

வன்முறை ஒரு எரிமலை — எரிமலையால் விளைவது நாச மின்றி வேறில்லை. உரிமைகளையும் குறிக்கோளையும் பெற வன்முறை வழிகாட்டாது. வன்முறை எழக் கூடுமென்ரோ நுழையும் என்ரோ —நுழைக்கக் கூடியவர்கள் உள்ளனர் என்ரோ ஒரு துளி அறிகுறி தெரிந்தாலும் — எத்தனை பெரிய தூய்மையான கொள்கை அடிப்படையில் அமைக்கப்பட்ட தாக இருப்பினும் — கிளர்ச்சி, நேரடி நடவடிக்கைகள் உட னடியாக நிறுத்தப்பட வேண்டும்''

அண்ணுவின் வேண்டுகோள் கொடுமைக்கு ஆளாகி ஆத்திர மடைந்தவர்களின் உள்ளத்தை சாந்தப்படுத்திக் கொண்டிருந்தது. பேரறிஞரின் வேண்டுகோளை ஒட்டியே கலைஞர் அவர்களும் தமது முரசொலியில்...''ஆத்திரத்தால் விளையக்கூடியது என்பது ஒன்றிஞலேயே வன்முறை அனும திக்கக் கூடிய முறையாகாது. அடக்குமுறைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கிற தியாகப் பண்பு வளர வேண்டு மென்பதே நீண்ட காலமாகத் தி. மு. க. கடைபிடித்து வரும் கொள்கையாகும்'' என்று எழுதி வன்முறையை விட்டொழிக் கும்படியும், அராஜகவாதிகளின் அடக்குமுறைகளுக்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்ளும்படியும் கேட்டுக்கொண் டார்கள். ஓரளவு கட்டுப்பாட்டிற்கு வந்தனர் கொதிப் படைந்த மக்கள். இந்திக் கொடுமையால் நாட்டிலே இத் தகைய கோர நர்த்தன மிருப்பதை காங்கிரசு அரசு பீடத்தி னர் அறிந்திருந்தும் கேடு நீக்கிட பாடுபடாது — தீது தரும் இந்திதனை வடக்கே ஓட்டி அனுப்பாது — அராஜகத்துக்கு ஆலவட்டம் சுற்றிடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந் தனர், இங்கே இப்படிப்பட்ட வேதனையான நிலை வளருகின் றது...உங்களது இந்தி ஆதிகத் திணிப்பை மறந்து விடுங்கள்

என்று டில்லி மூலவர்களுக்கு எடுத்துச் சொல்லிடுவதற்கு மாருக... ஆர்ப்பாட்டங்களுக்குத் துணை யிருந்தார்களென்ற காரணத்தைக் காட்டி ஆயிர மாயிரமாக காரக்கிருகத்தி னுள்ளே தள்ளிக் கொண்டிருந்தனர். தமிழ் கற்ற பெரும் புல வர்களை யெல்லாம் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர், 'தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்று வீர முழக்கமிட்டுக் கொண்டிருந்த மாணிக்கங்கள் அரசினரின் சித்ரவதைக்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். விபரீத வழக்கு கள் ஜோடிக்கப்பட்டு வீணான தொல்லைகளுக்கு அந்த விடு தலை வீரர்கள் ஆளாக்கப் பட்டனர்.

கழக அரசு பீட மேறியதும் இந்தி எதிர்ப்பு வீரர்கள் சம்-பந்தப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்தி எதிர்ப்பு மறக் குல மாணிக்கங்களை விடுதலை செய்தது. இந்த விடுதலை அநீதியானது என்று காங்கிரஸ்:பிரமுகர்களும் காங் கிரஸின் பிரசார பீரங்கிகளான ஏடுகளும் வாதிட்டன. இவர் களின் ஆகாத வாதத்துக்கு கழகத்தின் சார்பான ஆங்கில கிழமை இதழ் நியாய அடிப்படையில் நின்று பதில் எழுதியது குறிப்பிடத் தக்கதாகும்,

Congress men and Pro Congress recent action of Pardoning all those Convicted for participating in the anti Hindi agitation. Just because it was D M K Govern-ment, What did the Congress people do in 1947? they let off those political prisoners many of them convicted for grave—offences. What dld the Andhra Cengress men did when the new Andhra State was inagurated in 1957? they let off all political and even some non political pri-seners some time back the Governor of Bombay gav c pardon to naval officer Nanavathi who was under going life lmprisonment for the offence of committing a murder,"

1947ல் காங்கிரஸ் அரசினர் செய்த இதே முறையை அப்போது அவர்கள் அநீதியாகக் கருதவில்லை, அரசியல் கைதிகளை அவர்கள் ஆட்சிபீட மேறியதும் விடுதலை செய்தார்கள். பயங்கரமான குற்றங்கள் சுமத்தப்பட்டு தண்டிக்கப் பட்டவர்களையும் விடுதலைசெய்தார்கள். இது போலவே ஆந்திர காங்கிரஸ் காரர்களின் அரசும் 1957 ல் புதிய ஆந்திர மாநிலம் அமையப் பெற்றதும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தனர், சில அரசியல் சம்பந்த மில்லாத கைதிகளையும் சேர்த்து இதற்கு சில காலத்துக்குப் பின்னர் பம்பாய் கவனர் கடல்படை அதிகாரியான கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட நானுவதிக்கு அளிக்கப்பட்டிருந்த தண்டனைக்கு விலக்களித்தார்கள்...என்ற விபரங்களையெல்லாம் கழக ஆங்கிலக் கிழமை இதழ் விரிவாக எழுதி வாதிட்டது. ஆந்திர நினைவு கொண்டோர் நேர்மையாளர்கள் ஒப்பிடக் கூடிய விளக்கங்களையும் ஏற்றுக் கொள்ளாமலேயே மக்களின் எண்ணத்தைத் திசை திருப்ப நினைத்து தோல்வியைக் கண்டனர். 1947ல் அரசியல் கைதிகளை காங்கிரஸ் அரசு விடுதலை செய்ததில் எத்தனை நியாயப் பாடும், விடுதலை வீரர்களின் தியாகத்தை மறக்கக் கூடிய எப்படிப்பட்ட விவேகமுமிருந்ததோ அதே போன்ற நீதியும் விவேகமும் இந்தி எதிர்ப்பு வீரர்களை விடுதலை செய்வதிலும் இருக்கத்தான் செய்ததென்பதை நாட்டுமக்கள் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர். புதிய ஆந்திர மாநிலம் ஏற்படுவதற்கு முன் ஏற்பட்ட கிளர்ச்சியின் தன்மையை நாடு அறியாததல்ல. ஆயினும்... அரசியில் கைதிகள் என்ற பெயரால் சகலரும் 1957 ல் விடுதலை பெற்றனர்- காங்கிரஸ் நண்பர்கள் இந்த நியதியை மட்டும் வரவேற்றிடுகின்ற போது இந்தி எதிர்ப்பு வீரர்களைக் கழக அரசு விடுதலை செய்ததை ஏனோ அவர்கள் வரவேற்றிட மன மில்லாமலிருந்து விடுகின்றனர். கொஞ்ச நஞ்சம் மனம் வந்தாலும் இந்தி ஆதிக்க புத்தி அவர்களின் எண்ணத்தை வேறு திக்கிலே திருப்பி விடுகிறது. தாய்

மொழி காத்திடும் நினைவற்றோர் அந்நிய வாசல் மிதிப்பதே கௌரவமென்ற நிலையிலிருந்தோர் துரோக உருவகங்களை நிழலாட விட்டபோது ...ஆதிக்கத்தை எதிர்த்து சிறைக் கோட்டல் புகுந்தோர் தமிழன்னையின் களங்கத்தைத் துடைத்த கண்ணியத்தோடு வெளியே ஏறு நடை போட்டு வந்தனர்.

அவர்களது திகைப்பை அதிகப்படுத்தியது கழக அரசை முதன் முதலாக சந்தித்த தமிழப் புத்தாண்டு தமிழ் மணக்கும் புத்தாண்டில் 'தமிழக அரசு' என்ற மின் பலகையைக் கோட்டையிலே முதலமைச்சர் அண்ணா திறந்து வைத்தார். தாய் மொழியாம் தமிழைக் காத்திட தியாகம் பல புரிந்த செம்மல்களின் சிந்தையெல்லாம் குளிர்ந்து போகும் நிலை பிறந்தது. பேரறிஞரின் பெரு முயற்சியால் இந்தி ஆதிக்கத்துக்குப் பலியாகத் தந்த தாளமுத்து-நடராசனிலிருந்து...தீக்குளித்த சின்னசாமி வரை அந்த தியாகிகள் சிந்திய ரத்தம் வீண் போகவில்லை என்பது 'தமிழக அரசு' என்ற ஒளி சிந்திய பலகை ஊருக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. இந்த எழிற் கூடத்தைக் கட்டி முடிப்பதற்காக நரம்புகளையும், சதைகளையும். எலும்புகளையும் காணிக்கையாகத் தந்த அந்த உத்தம சீலர்களின் வீரகாவியம் வீணாகி விடவில்லை. அந்த அடலேறுகள் சிந்திய செந்நீரால் வரலாற்றுப் பெருமை பெற்ற தமிழர் சமுதாயம் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது.

தமிழக அரசு...என்ற மின் ஒளி சிந்துகின்ற பலகையைக் காணுகின்ற போது தமிழ்க் குலமே ஆனந்தக் கடலில் மூழ்கியது, ஆனால் பரிதாபத்திற்குரிய முறையிலே நமது குலப் பிறப்பென்று நம்பியிருந்த சிலர் நாமும் எதிர்க்காத அளவிலே எதிர்ப்பைக் காட்டினர். 'வெளிச்சம் போடுவதன் மூலமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விட முடியாது. மக்களின் எண்ணங்களை வேறு பக்கம் திசை திருப்புகிறார்கள் 'கவர்ன்

மெண்ட் ஆப் மெட்ருஸ் என்பது எவ்வளவு அழகுடன் வெளி நாட்டவரும் புரிந்திடும் அளவில் இருக்கிறது. இதை ஏன் மாற்றிட வேண்டும். மெட்ருஸைத் தேடி வந்தவர்கள் இங்கே தமிழக அரசு தானே இருக்கிறதென்று போயே போய்விட்டால் என்ன செய்வது ?' என்ற முறையிலே கேலிமொழி கலந்த அளவிலே அருமைமிகு காங்கிரஸ் நண்பர்கள் வாதிட்டனர். 'தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரைத் தாங்கியிருப்பவர்களே ... மதருஸ் என்ருல் தெரியாதா தமிழகம் என்று ஏன் மாற்ற வேண்டுமென்று கேட்டது தான் வியப்பிற்குரிய தாகும். சென்னை ராஜ்ஜிய காங்கிரஸ் கமிட்டி என்ருே, மதருஸ் காங்கிரஸ் கமிட்டி என்ருே அவர்கள் அழைத்துக் கொள்ள வில்லை ஆனுல் 'தமிழக அரசு' மாற்றத்தை மட்டும் பலமிக்க எதிர்ப்போடு கண்டிக்கத் துவங்கினர். நமது பெரு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும், 'சிறப்புக்குரிய மற்ற அமைச்சர்களும் 'தமிழகம்' ஒளி பெற்ற நாளிலே தெளியாத நெஞ்சங்களுக்குகெல்லாம் நல்ல முறையிலே தெளிவுரையாற்றினர். இங்கேயுள்ள இருளை மட்டுமல்ல மூலையிலே மூடுபனி கப்பிய நிலையிலுள்ளவர்களின் இதயத்திலுள்ள இருளையும் இந்தப் புத்தொளி அகற்றிடுமென்று நாடு நம்பியது, தமிழ்ப் புத்தாண்டிலே இத்தகையதொரு அருஞ் செயலை தமிழக அரசு அழகுடன் சாதித்து முடித்தது. மதருஸ் அரசாங்க மல்ல இது—மக்களின் அரசு தமிழுக்கா உயிர் நீத்து... தமிழைக் காப்பாற்றித் தீருவதற்காக உயிரை வைத்திருக்கும் தமிழர்களின் அரசு ! பட்டி தொட்டியெங்கும், நாடு நகர மெங்கும் மேடை போட்டு அடிவயிறு வலிக்க வலிக்க விலா எலும்புகள் நோக நோக அடித்துப் பேசிய கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் ஒரே அரசு ! இந்தியத்துணைக் கண்டத்திலேயே சொன்ன கொள்கைகளுக்கு நல்வாக்குகளைப் பெற்று நல்லரசு அமைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைப் பெருமையடன் குறிப்பிடமுடியும்.

கழகம் வெற்றி பெற்றதும்—Parlimentary Studies...ன் மார்தாந்தர விமரிசனத்தின் போது...

The virtues of simplicity and soeialisam of Kamaraj sounded vague and hollow to the people Bot the DMK is by and for the tamils the DMK men Are not only young and energetic but men with known capaeiry for creative theinging and Purposiue Action and their leader anna is a great and born Statesman. என்று எழுதி கழகத்தையும் அதன் கண் மணிகளையும் சிறப்பித்தது. அந்த விமரிசனம் எல்லைக் கோடிட்டுக் காட்டியது போல தமிழர்களுக்காக தமிழர்களால் குரல் கொடுத்தது கழகம் எனவே தான் தமிழக அரசு மலர்ந்ததும் தமிழ்ச் சமுதாயம் எல்லையற்ற இன்பத்தில் மூழ்கியது. வடபுலத்திற்கு தாசர்களாக இருந்தே பழகிப் போனவர்களுக்கு மட்டும் நெஞ்சு பொறுக்க வில்லை கொடுமைகளைக் கண்டு வீணை கானம் எழுப்பிய நீரோ கோமாளிகளைத்தான் நாம் சரிதத்திலே சந்தித்திருக்கிறோம், இங்கே இருக்கும் விகடதாரிகள் நல்லதைக்கண்டும் வேதனை ஓலமிடுவதைக் காணுகின்றோம் விந்தையான நிகழ்ச்சிதானென்றாலும் இங்கே நடக்கிறது. படிக்காத மேதையேயானாலும் பார் முழுவதும் பவனிவருகிறார் பாருங்கள் இந்தச் சிறப்புக்கு என்ன காரணம்? சாதாரண பாமர மக்களிடையே எங்களது கொள்கை கோட்பாடுகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் தனிச் சிறப்பிருக்கின்ற காரணத்தால் அவர்களைக் கவர்ந்திட முடிகிறது என்று வாய்ப்பந்தல் போட்டவர்கள், பாமர மக்கள் வாழும் வகை, குலநலம் பேணிக் காத்திட தமிழக அரசு முன் கரமெடுக்கும்போது குறுக்கே போய்த் தடுத்து நின்றனர். அந்தப் படிக்காத மேதைகள் காட்டிய திட்டமெல்லாம் வெறும் ஏட்டுச் சுரக்காயென்பதைக் கண்டறிந்த பின்னர்தானே மக்கள் அவர்களைத் தூக்கி எறிந்தார்கள்! அவர்களைக் காலி செய்த இடத்திலே கழகத்துக்கு வைரமுடி சூட்டி மகிழ்ந்

தார்கள். முடி இழந்த பிறகும் ...அந்த நாள் நினைவு...ரத கஜ துரத பதாதிகளோடு ஆட்டிப் படைத்த எண்ணங்கள் அவர்களை வாட்டி வதைத்திடுகின்றது- எல்லாம் பழங்கதை யாய்க் கனவாய்ப் போய் விட்டதே யென்று வேதனை மிகக் கொள்கின்றனர். எனவேதான் நீரோ கோமாளியையும் மிஞ் சுகின்ற அளவிலே நடமாடிடுகின்றனர்.

எந்த மேதைத் தனத்தை பிரபலப் படுத்தினரோ அதே மேதை ஒரு ஆறு மாதகாலத்துக்குத் தமது திருவாயைத் திறவாமலிருக்கத் தகுந்த சூழ்நிலை உருவாகியது. எங்கே தப்பித் தவறி எதையும் கூறி மீண்டும் தமது மேதாவிலாசம் விமரிசனமாகி விடப்போகிறதென்ற அச்சத்தில் அவர் ஊமை யானார்- ஊமையானாலும் விடவில்லை இந்த செய்தியாளர் கள். அதற்கும் ஒரு உருவகத்தைத் தந்தனர். சென்னை மெயில் இதழில் டெல்லி செய்தியாளர் எழுதிய கருத்துறை யில்...“ வாக்காளர்கள் தம் கடமையைச் சரியாகச் செய்தி ருக்கலாம். ஆனால், புதுடெல்லியில் நடக்கும் தலைமைப் பதவிப் போட்டியில் காணப்படும் பித்தலாட்டமும் சதியா லோசனையும் கைகலப்பும் கொண்ட அவலக் காட்சி, யாருக் கும் முகலாயப் பேரரசின் கடைசிக் காலத்தைத் தான் நினைவூட்டும். பின்னோக்கிப் பார்த்தால், கடந்து கொண்டி ருக்கிற கொந்தளிப்பான கட்டம் அதன் அந்திம காலமாக ஆகிவிடக்கூடும். திருமதி இந்திரா காந்திக்கும்—திரு மொரார்ஜி தேசாய்க்கு மிடையே நடக்கும் தலைமைப் பத விப் போட்டியில் திரு காமராசர் பூண்டிருக்கும் மௌனம் தெள்ளத் தெளிவாக ஒரு பலவீனத்தின் அறிகுறியே! வலிமையின் அறிகுறி இல்லை. காமராசரின் நெருங்கிய ஆலோசகர் ஒருவர் கூறியது போல் தான் ஆதரிக்கும் வேட்பாளர் வெல்வாரா என்பதை உறுதி செய்து கொள்ளா மல்' இருவரில் எவரையுமே ஆதரிக்கும் பொறுப்பை— ஆபத்தை காமராசர் மேற்கொள்ள மாட்டார். ஏற்கனவே

அவரது அரசியல் உருவம் தவிடு பொடியான காங்கி ரஸ் தோல்விக்குப்பின் - சுருங்கியுள்ளது.'' என்று குறிப் பிட்டு எழுதி திரு காமராசரின் பலவீனத்தைவெளிப்படுத்தினர்

டெல்லி செய்தியாளர்களே இவ்வளவு அப்பட்டமாக அவரது தாழ்ந்த நிலை குறித்து படம் பிடித்துக் காட்டியிருந் தும் இங்கிருக்கக் கூடிய அவரது தொண்டரடிப் பொடியாழ் வார்கள் கழக அரசை தமிழக அரசை—அண்ணாவின் அரசைக் கவிழ்த்திடுவோமென்று முழக்க மிட்டனர். அவர் கள் வீதியெங்கும் முழக்கமிட்டுத் திரிந்த போது தான் பொதுப்பணித்துறை அமைச்சர்—கலைஞர் கருணாநிதி அவர் கள் புதுப்பேட்டைக் கூட்டத்தில் பேசுகின்றபோது. தேர்தல் நேரத்தில் நெருப்புக்கும் ரத்த வெள்ளத்துக்கு மிடையே ஜன நாயக முறையில் போராடி அமைத்த மக்களின் அரசு— தி. மு. கழக அரசு அதனை காங்கிரஸ் கட்சியால் ஒரு போதும் கவிழ்க்க முடியாது 'என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டார். அதே கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகின்ற போது... ''இந்த சர்க்காரை கவிழ்த்து விடு வோம் என்று காங்கிரசார் கூறுகிறார்கள் கவிழ்த்துப்பார் நாங்கள் என்றும் கப்பல் அல்ல, கவிழ்த்ததும் ஆழ்கடலின் அடியில் சிக்கிக் கொள்ள நாங்கள் கட்டு மரம் எப்படித் திருப்பினாலும் கட்டுமரம் கவிழாது இதை உணர்ந்து கொள். அப்படியே கவிழ்ப்பதானாலும் என்ன குடியா முழுகிப்போய் விடும் ?

'இந்தப் பதவியை எல்லாம் எதிர்பார்த்தா கட்சியை வளர்த்தோம் நாங்கள் இந்தக் கட்சிக்கு வந்த போது எங் களைப் பார்த்து மிரட்டியது காராக்கிரகம் அழைத்தது தூக்கு மேடையில் பல்இளித்தது பாது காப்புச் சட்டம். பார்த்தோம் பாளையங் கோட்டையே ஆபத்தான காரியத்தில் ஈடுபடுகி றாயே என்று எங்களை கேட்ட நேர்த்தில் —வீரமகனே புற நானூற்றைப் படித்துப்பார் என்று சொன்னோம் பதவிபோய்

விட்டால் ஐயோ பதவி போய்விட்டதே யென்று ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒன்பது பேரும் ஒப்பாரியா வைப்போம்' இதைவிட அன்பான--பாசமான பந்தமான நாற்காலி எதிரே இருக்கிற உங்கள் இதய நாற்காலியில் உட்காருவோம்.

''கையிலே இருந்த விரால் மீன் வழுக்கி விட்டது. அதுவும் நம்கையில் விழுந்து குழம்பாகி--வயிற்றுக்குள் போய்விட்டதே யென்று கவலைப்படுகிருர்கள், நமக்கு வேலை இல்லை விட்டுவிட்டுப் போகத் தயாராக இருக்கிறோம். நாங்கள் கேட்பது எல்லாம் கிளர்ச்சி செய்து பொய் சொல்லி--புரட்சியை உருவாக்கி ரணகளத்தை உருவாக்கி இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட்டாள் அது தொடர்கதையாகி விடாதா? இந்த ஆட்சியைக் கவிழ்த்தால் நாங்கள் போவோம் மறுபடியும் நீங்கள் போவீர்கள்--நாங்கள் வருவோம் எகிப்திலே பருக்கைக் கவிழ்த்து நபீப் வந்தான். நபீப்பைக் கவிழ்த்து நாசர் வந்தார் அதைப்போல நடக்க வேண்டுமா ? அல்லது ஜனநாயக முறையில் இந்திய நாட்டின் சரித்திரம் வேண்டுமா ? இதற்குத் தானு மகாத்மா காந்தி நவகாளிக்கு கால் கடுக்க நடந்து சென்ருர் நேரு தன் இளமைக் காலத்தை இதற்காகவா சிறைச் சாலையில் கழித்தார்? நேதாஜி ராணுவஉடையில் இதற்காகவா போராட்டம் நடத்திஞர் திருப்பூர் குமரனும், தில்லையாடி வள்ளியம்மையும் தியாகம் செய்தது இதற்காகவா ? இந்த ஆட்சியை கவிழ்த்து விடுவோமென்றும் சொல்பவர்களுக்கு நான் இரண்டு சொல்வேன் ஒன்று இந்த ஆட்சியை உங்களால் கவிழ்க்க முடியாது இரண்டாவது அப்படியே கவிழ்த்தாலும் நீங்கள் காட்டிய பாதையை நாங்கள் மறந்து விடமாட்டோம் ''என்று ஆதார பூர்வமாக எடுத்துக் கூறிஞர். கவிழ்த்து விடுவோமென்று கர்ஜித்த முகங்களெல்லாம் தலை கவிழ்ந்தன.

அந்தந்த தலைகளெல்லாம் மேலும் கவிழுகின்ற முறையிலே பொதுப்பணித்துறை அமைச்சர் அரசு பஸ்கள் அத்தனையிலும் 'தமிழக போக்கு வரத்து' என்ற எழுத்துக்களை எழுதும்படி ஆணையிட்டார். அரசுப் பேருந்துகளெல்லாம் அன்னைத் தமிழின் புகழ் பரவி வலம் வந்தன. முன்னேற்றக் கழகத்திற்கு முன்னே இருந்த அரசு முயன்றிருந்தால் தமிழக போக்குவரத்து என்று அரசு பஸ்களிலே எழுதியிருக்க முடியும். தமிழர்கள் விரும்பிக் களிக்கின்ற சீரிய பணியினை நாம் ஏன் துவக்கிவைத் திட வேண்டு மென்று நினைத்தார்களோ அல்லது டில்லி மூலவர்களின் வீணான கோபத்துக்கு நாமேன் ஆளாகிட வேண்டுமென்று ஊமையர்களானார்களோ தெரியவில்லை. தாங்கள் வழி திறக்காதது தான் போகட்டும் வழிவகை கண்டவர்களையாவது பாராட்டியிருக்க வேண்டாமா? பாராட்டா விட்டால்தான் போகிறது மனதிற்குள்ளேயாவது வரவேற்றிருக்க வேண்டாமா?...இதையெல்லாம் விடுத்து...'போக்காவது--வரத்தாவது' என்று கேலி மொழியிலே குட்டிக் கதைகள் இணைத்துப் பேசினர்.

ஆளுங் கட்சிக்கு சரியான எதிர்க்கட்சி வேண்டுமென்று ஜன நாயகத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் சீலர்களைப் போல அளந்து வந்த அருமை மிகு காங்கிரஸ் நண்பர்களுக்கு சோதனை காலம் ஏற்பட்டது, சொன்ன சொல்லை காப்பாற்றவேண்டிய கட்டம் வந்தது. எதிர்கட்சியின் இலட்சணம் என்னென்ன என்பதை ஆளுகின்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள் 'என்று' காலம் யாரும் எதிர்பாராத முறையிலே கட்டளையிட்டது. காலத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை கித்தாப்போடு பேசினார்களோ, அதன்படி நடந்து கொள்ள முடியவில்லை. 'இவர்களெல்லாம் எதிர்கட்சியினரா? எதிர்க்கட்சியினரென்றால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் தெரியுமா? என்று பேசியவர்கள் அந்த நிலைமை தமக்கே வந்தபோது ...எரிச்சலும், மனக்

கொதிப்புந்தான் அடைய முடிந்ததே யொழிய புதிய உருவகத்தை ஏற்படுத்திட முடியவில்லை. முடியாதது மட்டுமல்ல எவ்வளவு கீழ் நிலையிலிருந்து வாதிட முடியுமோ, பொய்யுரை கலந்து கூறிடி முடியுமோ அவ்வளவு தாழ்வு நிலையிலிருந்து எதிர்க்கட்சி வரிசையை சிறப்பிக்க முயற்சி எடுத்தனர்.

பொறுப்பும் கண்ணியமும் மிகுந்த எதிர்க் கட்சி வரிசையிலே வீற்றிருக்கக் கூடிய காங்கிரஸ் நண்பர்கள் ஆகாதன கூறி ஆக்கப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர், பன்னெடுங்காலமாக ஆட்சிப்பீடங்கிலே அவர்களிருந்தும் பழக வேண்டிய பண்புகளைப் பழகிக் கொள்ள மறந்தனர். எனவே மாண்பினை மறந்தவர்களைப் பற்றி புத்தரசு கண்டோர் கவலை எடுத்துக் கொள்ள வில்லை. வேண்டாத கருத்துக்களையும் வேடிக்கை கதைகளையும் அவர்கள் கூறிக் கொண்டேயிருக்கட்டுமென்று விட்டு விட்டு மாண்பு மிகு அமைச்சர்கள் ஆக்கப் பணிகளிலே ஓய்வு வின்றி ஈடு பட்டனர்.

உலகப் பாட்டாளிகளின் தினமான மே தினத்தை தமிழக அரசு அரசினல் விடுமுறை நாளாக அறிவித்தது பாட்டாளிகளின் உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்கக் கூடியதாகும். உண்மையிலேயே இந்த அரசு பாட்டாளிகளின் கூட்டுத் தோழனாக அரசு பீடத்திலேயிருந்து வருகிறதென்பதை மெய்ப்பித்துக் காட்டியது. நாள் முழுவதும் ஓயாத உழைத்து சாகாமல் செத்த அடிமை வாழ்விற்கு சாவு மணியடிக்கப்பட்ட நாள் மே முதல் நாள். எட்டுமணி நேர வேலையை சட்டமாக்க வேண்டுமென்று போர்க்கொடி உயர்த்தி வெற்றி வாகை சூடிய அந்நாளை உலகப் பாட்டாளி வர்க்கத்தினரின் தியாகத்துக்கு மதிப்பளித்திடும் முறையில் தமிழக அரசு விடுமுறை நாளாக அறிவித்து மகிழ்ந்தது.

பீரங்கிகளின் ஆர்ப்பரிப்பிற்கும், ஆதிக்கவாதிகளின் மிரட்டலுக்கும் அஞ்சாத உள்ளம் படைத்தவர்கள் பாட்டாளி வர்கத்தினர். எலும்புகளை ஒடித்து ரத்தக்குளத்திலே தோய்த்தெடுத்து வரலாறு தீட்டும் தியாகப் பண்பு பெற்றவர்கள். மதோன் மத்தர்களின் மண்டைக் கனத்தைக் குறைத்திடும் மன வலிமை பெற்றவர்கள். உல்லாச வாசிகளின் சரிதத்துக்கு உலகெங்கும் முடிவுரை எழுதியவர்கள். இந்தக் கண் மணிகளின் தியாக சீலத்துக்கு மதிப்பளித்திடும் முறையிலேதான் தமிழக அரசு மே நாளிலே அந்த வீரர்களுக்குத் தலை வணக்கம் செலுத்தியது. குறிப்பாகத் தென்னகத்திலே மே தினத்தின் சிறப்பை விளக்கிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களையே சார்ந்திடும். பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே பொன்மலையில் மேதினம் பற்றி மே நாளில் பேரறிஞர் அண்ணா அவர்களாற்றிய உரை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அந்தச் சொற்பெருக்கு நூல் வடிவிலே வெளிவந்து பல லட்சக் காணக்கான உயர்ந்த உள்ளங்களைத் தொட்டதென்றால் மிகையாகாது. காங்கிரஸ் நண்பர்களுக்கும் மே தினம் பற்றி புரியாததல்ல. எனினும் முதலாளித்துவ முகாமாக அது முற்றிலும் மாறி விட்ட காரணத்தால் தமிழக அரசு அவர்களது கையிலே யிருந்த போது அதுபற்றி ஓய்வாகக் கூட நினைத்துப் பார்க்கவில்லை. ஜனநாயக சோஷலிஷம் பற்றி பேசுவதிலே தீவிரம் காட்டிய திருவாளர் காமராசர் கூட பாட்டாளிகளின் திரு நாள் நிழலிலே ஒதுங்கக் கூடவில்லை.

நமது ஆளுகையிருந்த போது இதைக் கூட நம்மால் செய்து முடிக்க இயலவில்லையே யென்று வேதனைப் பட்டு தலை தாழ்வதற்குப் பதிலாக வழக்கம்போலவே அரசு விடுமுறை குறித்தும் ஆய்வுதந்தனர். இவர்களைப் பற்றி நாடு சரியான முறையிலே மதிப்பிட்டிருந்ததால் புதியதாக எதுவும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. திட்டமிட்டு செய்யப்படும் நன்மைகளுக் கெல்லாம் புதிய தத்துவார்த்தங்

களைத் தந்து சிந்தையைக் குழப்பிடும் போக்கை விரும்பி ஏற்றிடவில்லை. தொண்டுள்ளம் படைத்த தமிழக அரசின் சீரும் சிறப்பும் நிறைந்த பணிகள் எந்த அளவுக்கு மக்களின் தரத்தை உயர்த்துகின்றன. அந்த சீரிய செயல்களால் இதுவரை ஒதுக்கப்பட்டு—ஒடுக்கப்பட்டுக் கிடந்தவர்களுக்கு என்னென்ன நன்மைகள் கிட்டியிருக்கின்றன என்பதைத் தான் அவர்கள் எடைபோட்டுப் பார்த்து வந்தனர். அவர்கள் மிகுதியும் மகிழத்தக்க முறையிலேயே அரசுப் பணிகள் அமையலாயின.

தேவைப்படாத உத்தியோகங்களை எடுத்து சிக்கனத்தைக் கடைபிடித்தனர். ஒரு குறிப்பிட்ட இலாக்காவிலே ஓரிருவரால் முடிவுகாண வேண்டிய அலுவலைப் பலர் இருந்து கொண்டு காலதாமதமாவதோடு, அரசுப் பணமும் கரியாவதைத் தடுக்கும் முறையிலே முதலமைச்சர் அண்ணா அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்தார்கள். இந்த சிக்கன நடவடிக்கையால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அரசுக்கு மிச்சமேற்பட வழிபிறந்தது. அதிகாரிகளும் வேலை வாய்ப்பை இழந்து விடாமல் வேறு இலாக்காக்களுக்கு மாற்றப்பட்டனர். சுமுகமான முறையிலே அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் நன்மை பயக்கும் முறையிலே இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்து தமிழக அரசு சிறப்பு மிகப் பெற்றது.

இது வரை முந்திய அரசுகள் சாதித்திடாத முறையிலே தொழிலாளர் பிரச்சினைபற்றி விவாதிக்க தொழிலாளர் தலைவர்கள் அடங்கிய பொது அமைப்பைக் கூட்டினர். சர்வ கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களும் அந்த அமைப்பில் கலந்து கொண்டு விவாதித்ததோடு, இதுபோன்ற நல்லமைப்பை காண முறைசித்த தமிழக அரசுக்குப் பெருமளவிலே பாராட்டி உறுதித் தெரிவித்து மகிழ்ந்தனர்.

பாட்டாளிகளும் அவர்தம் துயர் துடைத்திடும் தலைவர்களும் பெரிதும் மகிழ்ந்திடும் முறையிலே தொழிலாளர் சம்

பந்தம்பட்ட வழக்குகள் மேல் கோர்ட்டுகளுக்கு அப்பீல் செய்யப்பட்டால், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வக்கீல் வசதி அமைத்துத் தர தமிழக அரசு முடிவுசெய்தது தொழி லாளவர்க்கத்தின் நன்மைக்காக இதுவரை இங்கே இப்படி யொரு ஆக்கப்பணி—ஆறுதல் மொழி கூறியோர் யார்? கீழ்கோர்ட்டிலிருந்து மேலே போய், அங்கிருந்தும் மேலே போகத் துணிவுடனிருந்த முதலாளித்துவ முகாமிலிருந்த வர்களைப் பரிதாபத்திற்குரிய ஏழைத் தொழிலாளி எந்த அளவுக்குச் சந்திக்க முடியும்? நீதியை வேண்டி சில படிக்கட்டுகள் கடப்பதே அவனுக்குப் போதும் போது மென்றாகிவிடும், இந்த நிலையிலே கடைசிவரை அவனுக்கு ஒத்துழைக்க--நீதி தேவனின் சந்நிதானத்திலே அந்த நிர பராதி முறையிட்டுக் கொள்ள வசதியும் வாய்ப்பும் அளித் திட அரசு துணை நிற்கிறதென்றால்--அவனது வாழ்வை நோக்கி விடிவெள்ளி தலை தூக்கி விட்டது என்றுதானே அர்த்தம். இந்த இரும்பெரும் சாதனையை உழைப்பவர் உள்ளம் மகிழத்தக்க விதத்திலே செய்து முடித்தது அரசு.

மந்திரிகள் செல்லுமிடங்களில் எத்தகைய கெடுபிடி களுக்கிடையே அன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்கள், பவனி வந்தனரென்பதை நாடறிந்ததாகும். அடிக்கொரு காவல் வீரர்கள் அணிவகுத்து ஆடம்பர ஜபர்தஸ்து செய்த தையெல்லாம் ஒழித்துக்கட்ட ஆணையிட்டு இன்றைய தமிழக அமைச்சர்கள் மக்களோடு மக்களாகச் சேர்ந்து வலம்வந்தனர். அமைச்சர்கள் செல்லுமிடங்களில் கலெக் டர்கள், காவல்துறை அதிகாரிகள் அவசியப் பட்டால்தான் அழைத்தால்தான் செல்ல வேண்டுமென்று அரசினரால் அறிவிக்கப் பட்டது. வீண் ஆடம்பரங்களாலேயே வீழ்ச்சி யடைந்த காங்கிரஸ் மூலவர்களை மனதில் கொண்டு...அதை அரசியல் வாழ்க்கை எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு தமிழக அரசு காரிய மாற்றிடத் துவங்கியது. தனிப்பட்ட

சீமான் வீடுதேடிச் செல்லுவதும் சுவை மிகு விருந்தினை ருசிப் பதுமான பழைய ஏற்பாடுகளை ஒதுக்கிவிட்டு தமிழக 'அமைச்சர்கள் புதிய வரம்புக்குக் கட்டுப்பட்டு வழிநடந்தனர். ஏழைகளின் தோழர்கள் இவர்கள்' என்ற ஏற்ற மொழியை நிலைநாட்டிடவே விரும்பியிருந்தனர் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா கண்டெடுத்து அமைச்சரவைக்கு அழைத்து வந்திருந்த நல்முத்துகள் அத்தனையும் சேர்த்துத் தொகுத்த முத்து மாலை போன்று கவர்ச்சி தந்து முத்தமிழர் இதயத்திலே இடம் பெற்றன.

சென்னை 71-வது வட்டத்தில் நடந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகின்றபோது...

" 66 வது பக்கத்தோடு மூன்றாவது அத்தியாயம் முடிந்து 4-வது அத்தியாயம் தொடர்கிறது. இதுதான் ஜனநாயகம். 66-வது பக்கத் தோடு மேலும் தொடராமல் அரசியல் என்ற இலக்கியப் புத்தகத்தை முடித்து விட்டால் அதுதான் சர்வாதிகாரம் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

" என்னிடம் கல்வி, தொழில் இரண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலைப் பார்க்கும் போது ஒரு பக்கம் தொழிலாளர் முகத்தையும், மறுபக்கம் தொழிலதிபர் முகங்களையும் பார்க்கிறேன். அவர்களுக்கிடையே நான் தராசு முள் போல இருக்கிறேன். அவர்கள் தராசுத் தட்டுபோல் இருக்கிறார்கள். தொழிலாளர் செய்யும் கடமைக்கு ஏற்றவாறு தொழிலதிபர்கள் உரிமையைத் தராசுத் தட்டில் போட்டால் தான் தட்டு சமமாக இருக்கும். சிறிது குறைந்தாலும் தொழிலாளர் பக்கம் தராசு சாய்ந்துவிடும். அப்படி அவர்கள் சாய்ந்தால் நானும் அவர்களுடன் சேர்ந்து சாயும்படி ஆகிவிடும். அந்த--நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாமல் தொழி

லதிபர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்நாட்டில் தொழில் வளம் பெருகவேண்டும், சிறு தொழில் வளம் பெற வேண்டும். அதுவும் மாவட்டங்கள் தோறும் பெருகவேண்டும். அப்பொழுதுதான் சென்னை நோக்கி அதிகக் கூட்டங்கள் வராமல் இருக்கும். ஏனென்றால் இங்கே 6 சேரிகளைச் சீராக்கினால் 20 சேரிகள் எழுந்து விடுகின்றன. காரணம். தொழில் வேண்டி பரமக்குடியில் உள்ளவர் இங்கு வருகின்றார். ஆதலால் இவற்றைப் போக்க இக்குறைகளை நீக்க, சிறு தொழில்கள் ஆரம்பிக்க இப்பொழுது 2 லட்சம் ரூபாய் கடன்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டரை ரூபாய் பெறுமான இரும்பை அமெரிக்காக் காரன் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான ஒலி பெருக்கி கருவியாக மாற்றியமைக்கிறான். அதே இரும்பை நம் நாட்டுக் கிராமப் புறத்துத் தாய்மார்கள் பேரீச்சம் பழமாக மாற்றுகின்றனர்.

"பழைய சாமான்களைப் புதிய பொருளாக்கும் கல்வித் திறன் மேலை நாட்டிலே உள்ளது, அது போல் கனிச் செல்வத்தைப் பயன்படுத்தி ஆவன செய்ய வேண்டும் நாங்கள் ஆளுங்கட்சியாக அமர்ந்திருக்கவில்லை. உங்களுக்குப் பணிபுரியும் கட்சியாகவே வந்திருக்கிறோம்." என்று குறிப்பிட்டு தாங்கள் யாரின் உண்மைப் பிரதிநிதிகளென்பதை விளக்கினார். இப்படிபட்ட தொண்டுள்ளத்தை சிறப்பித்திடுவதிலேயே அமைச்சர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தனர். அதன் காரணமாகத்தான் ஆட்சிக்கு வந்த பத்தே நாட்களுக்குள் நமது மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் மதுரைக்கும் சென்னைக்கும் 16 ரூபாய் 90 காசாக இருந்த கட்டணத்தை இப்போது 14 ரூபாயாகக் குறைத்தார். நெல்லைக்கும் சென்னைக்கும் முன்பிருந்த பஸ் கட்டணத்தைவிட 4 ரூபாய் குறைத்தார். சென்னைக்கும் கோவைக்கும் 3-40 காசு குறைத்தார். பத்தே நாட்களுக்குள் மின்னலைப் போன்ற வேகத்தில் இந்தச் சாதனையை செய்து

முடித்தார் பொதுப்பணி அமைச்சர். ' நம்மால் ஆகுமா ? எப்படித் திட்டமிடுவது ? தனியார் பஸ் நடத்தும் முதலாளி மார் கோபித்துக் கொள்வார்களே ?' என்று சஞ்சலப்பட்டு நடமுறைக்கு வரவேண்டிய நல்ல திட்டங்களைப் போடாமலே நினைப்பையும் – நேரத்தையும் அன்றைய காங்கிரஸ் மந்திரிகள் பாழடித்தனர். ஆனால் தமிழக அரசு மக்களுக்கு நல்லதைச் செய்திட வேண்டுமென்று நினைத்த மாத்திரத்தி லேயே அதை உடனுக்குடன் செய்து முடித்தனர். அத்த கைய மாபெரும் ஆற்றலுக்குத் துணையிருந்தது மக்கள் சக்தி.

ஏழைமக்களின் அரசு இது என்று அடித்துக் கூறுவது போல உணவமைச்சர் மதியழகன் அவர்கள், "வாக்காளர் களாகிய உங்களுக்கு நன்று தெரிவிக்கவே வங்கக் கடலலை வீசும் காற்று மண்டலம் வருகின்ற பகுதியிலே உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். உங்களிடம் கூறியதை நாங்கள் நிச்சயம் செய்வோம் என்று உறுதிமொழி எடுக்கவே இங்கு வந்திருக்கிறோம். உங்கள் பிள்ளைகள் கோட்டை நாற்காலி யில் கொலு வீற்றிருந்தால் எப்படி ஆனந்தப் படுவீர்களோ அதே ஆனந்தத்தில் அண்ணா அமைச்சரானதால் தமிழகம் ஆழ்ந்திருக்கிறது. நாங்கள் எங்கே போனாலும் மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரத்தைப் பார்க்கிறோம். அவ்வளவு பேரார் வம் எங்கள் மீது. இதற்குக் காரணம் மக்களோடு மக்க ளாக நாங்கள் வாழ்வதே ! எத்தனையோ மந்திரிகள் வந்தார்கள்--மாயமாய் மறைந்திருக்கிறார்கள். எந்த மந்திரி சபைக்குமில்லாத ஆதரவு இந்த மந்திரிசபைக்கு இருக்கிறது. இந்த அரசு ஏழைமக்கள் அரசாங்கமாக இருக்க விரும்பு கிறது. மக்கள் உணர்ச்சிகளை மதிக்கின்ற அரசாக இருக் கின்றது. விவசாயத்திற்குத் தேவையான உரத்தை ரஷியா விடம் கேட்டிருக்கிறோம். அந்த உரம் மார்ச் 17 ல் பூந்த மல்லியில் பிற்பகல் 1-மணிக்கு 2000 மூட்டைகளில் கடத்

தப்பட்டது. உடனே அதைக் கைப்பற்றி மாவட்ட நீதி மன்றத்தில் மாலை 4-30 மணிக்கு ஒப்படைத்து விவசாயி களுக்கு வழங்க உத்திரவிடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் முன்பு நடந்த நிர்வாகக் கோளாறுதான். கோயம் புத்தூரில் இரண்டு ரேசன் கடைகளுக்குச் சென்று சோதனை போட்டத்தில் அங்கு கணக்கே இல்லாமலிருந்தது. இந்த இலட்சணத்தில் காங்கிரஸ் அரசாங்கம் நடந்திருக்கிறது. இதையெல்லாம் விரைவில் ஒழிப்போம்,'' என்று பேசும் போது குறிப்பிட்டார்கள்.

மக்களுக்கு நன்மை செய்ய வந்த சேவகர்கள் தான் அமைச்சர்கள் என்று விளக்குவது போன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துச்சாமி அவர்கள் பேசுகின்றபோது... "நாங்கள் பெயருக்குத்தான் அமைச்சர்களாக இருக்கிறோம். உண்மையிலே நீங்கள் தான்--உங்கள் ஆட்சிதான் இன்று அறியணையில் இருக்கிறது. மாடி வீட்டுச் சீமான் களுக்கே உரியதாக இருந்த சிங்காதனம் இன்று ஏழைகளின் இருக் கையாக மாறிவிட்டது. இந்த நாட்டில் கோடான கோடி ஏழைகளின் இதயங்களை அறிந்தவர் அண்ணாவைத் தவிர யாரும் இருக்க முடியாது. கொட்டிச் சிதறிக் கிடக்கும் செங் கற்களை எடுத்து அடுக்கிச் சுவர்வைக்கக் காலதாமதம் ஆகும். அதுபோல் சிதறிக் கிடக்கும் அரசின் அலங்கோலங் களை எடுத்து நிறுத்திப் பயன் படும்படிச் செய்யச் சிறிது காலம் ஆகத்தான் செய்யும். உங்களுக்கு நன்மை செய்ய வந்திருக்கும் ஊழியர்தான் நாங்கள்'' என்று அழகுபடக் குறிப்பிட்டார்கள். தமிழக அரிசனநல அமைச்சர் சத்திய வாணிமுத்து அவர்கள் பேசிய போது...''ஜனநாயக முறைப் படி இந்தத் தேர்தல் முடிவுற்றது. நமது கட்சியில் உறுப் பினரான ஆதித்தன் சட்டமன்ற அவைத்தலைவராகவும், நமது இயக்கத்தைச் சார்ந்த புலவர் கோவிந்தன் சட்ட மன்றத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமை

குறித்து உள்ளம் பூரிக்கின்ருேம். செல்லுமிடமெல்லாம் மக்கள் எங்களை மனமார வரவேற்ருர்கள்--வரவேற்றுக் கொண்டிருக்கிருர்கள். காங்கிரஸ் காரர்கள் பதவியில் இருக்கும் பொழுது என்ன செய்தார்கள் என்று கவனிக்கவில்லை-- என்ன செய்ய முயன்ருர்களென்றும் கவனிக்கவில்லை. ஆனால் நாம் என்ன செய்கிருேம் என்ன பேசுகிருேம் என்பதை மிக உன்னிப்பாக மக்கள் கவனிக்கின்றனர். ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் நாங்கள் ஓய்வெடுக்கவில்லை. உணவமைச்சர் மதியழகனைப் பார்க்கும்போதே இது தெரியும் தனக்கு ஓய்வில்லாமல் கலெக்டர்களுடன் கொள்முதல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிருர், ஏறிய விலைவாசியை குறிப்பாக அரிசிவிலையை எப்படி இறக்குவதென்ற சிந்தனையில் அவர் இரண்டு நாட்கள் சரியாக உண்ணக்கூட இல்லை. அகவிலையைக் குறைப்பதற்காக நாங்கள் சிறைச்சாலைக்குப் போயிருக்கிருேம். தடியடி பட்டிருக்கிருேம். புளுத்த அரிசிச் சாப்பாட்டை சிறையிலே வலிந்து உண்டிருக்கிருேம். ஆகையால் சமுதாய விரோதிகளான கள்ளக் கடத்தல் வியாபாரிகளை எளிதில் விட்டு விடக் கூடாது.'' என்று எடுத்துச் சொல்லி சமுதாய விரோதிகளுக்கு எதிரான ஆக்கப்பணிகளிலே அரசு ஈடுபடுமென்பதை வலியுறுத்திஞர்.

பொது நல அமைச்சர் சாதிக் பாட்சா பேசுகின்றபோது... ''துப்பாக்கி வேட்டுகளின் சத்தம் இனிக் கேட்காதபடி— தெருக்களிலே ரத்தத் துளிகள் சிந்தாதபடி மக்கள் தீர்ப்பளித்ததை அனைத்துலகும் பாராட்டுகிறது. செயிண்ட் சார்ஜ் கோட்டையை முற்றுகையிடாமல் நாம் பிடித்து விட்டோம். தமிழகத்தில் இந்து-முஸ்லிம் ஒற்றுமை அண்ணு அவர்களால் நன்கு வேரூன்றி விட்டது என்று ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டு ஆட்சி மாற்றத்தை விளக்கிஞர்.

தமிழக விவசாய அமைச்சர் கோவிந்தசாமி ஏழை உள்ளத்தைக் குளிரவைப்போமென்ற உறுதியுடன் தமது உரை

யினை ஆற்றுகின்றபோது..."இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட போது என்னைக் கடலூரில் நடுத்தெருவில் போலீசார் இழுத்துச் சென்றார்கள். உடனே தோழர்கள் ஓடிவந்து எங்கள் தலைவரை நடுத்தெருவில் நடக்க விட்டு அழைத்துச் செல்லாதே. வண்டியில் ஏற்றிபோ என்றனர். உடனே அந்தத் தலைமைப் போலீஸ்காரர் நான்தான் காமராசரை யும் முன்பு கைது செய்தேன். அதன்பிறகு மந்திரியானார். அதுபோல் நீங்களும் ஒருநாள் மந்திரியாவீர்கள் என்று கூறினார். அவர் இப்போதும் கடலூரில் தானிருக்கிறார், சேலத்தில் விலைவாசிக் குறைப்புப் போராட்டத்தில் என்னை கைது செய்யச் சொன்ன கலெக்டர் தான் இன்று நான் வகிக்கும் பதவிக்குக் காரியதரிசியாக இருக்கிறார். முன்பு மன்ற உறுப்புனராக இருக்கும்போது சி. சுப்ரமணியத்தைக் கேட்டேன், படகு போன்ற கார்களில் போகிறீர்களே சின்னக் கார்களில் போகக் கூடாதா என்று! அதை ஞாபக மூட்டி அண்ணா எங்களுக்கு சின்னக்கார் கொடுத்திருக்கிறார். மந்திரி சம்பளம் குறைய வேண்டும் என்றோம். அதுபோல் பாதி யாகக் குறைத்துக் கொண்டோம். 250 ரூபாய் வாடகை யில் இப்பொழுது வீடுகிடைக்காததால் சென்னையிலே சொந்த வீடில்லாத நாங்கள் பெரிய வீடுகளில் இருக்கிறோம். இப் பொழுது அந்த வாடகையில் வீடு கிடைத்தால் கூட அதை விடுத்து நாங்கள் வந்து விடுவோம். முன்பு சொன்னது போல் படிப்படியாக ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். எல்லாம் முழுமை பெறும் வரையில் நீங்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக அமைச்சர்களின் எழுச்சி வரிகளை உற்று நோக்குவோர் எத்தகைய சீர்மிகு மக்களின் தொண்டர்களாக அவர்களிருந்து வருவதை உணர முடியும். இத்தகைய பேராற்றலைப் பெற்றவர்களின் அரசு தங்களது

செயல் திறனுக்கெல்லாம் சிகரமாக படிஅரிசித் திட்டத்தை மே-15லிருந்து கோவையிலும், சென்னையிலும் அமுல் நடத்தத் திட்டமிட்டிருந்த சேதி ஏழை எளியவர்களின் இதயங்களை யெல்லாம் குளிரச் செய்தது, இப்படிப்பட்ட உழைப்பே உருவகமான அமைச்சரவை பதவியேற்ற 70 நாட்களில் ரூபாய்க்கு ஒருபடி அரிசித்திட்டத்தை அமுலாக்கியது. இரவு பகலாக ஓய்வின்றி அவசர அவசரமாகத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்,

அரசுப்பொறுப்பு தம்மிடம் வந்து சேர்ந்தபோது சென்னை நகரில் மட்டுமுள்ள 20 லட்சம் மக்களுக்கு ஒரு நாள் தேவை 600 டன் அரிசி ஆனால் கையிருப்பு அரிசி இருந்ததோ அரை நாளுக்கும் கூடப் போதாதமுறையில். இந்த அவல நிலையிலிருந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இரண்டே திங்களில் நாடே அதிசயக்கத் தக்க அளவிலே மாற்றத்தை செய்து காட்டினர் தமிழக அரசினர். மக்களுக்கு நல்லதைச் செய்திட வேண்டுமென்ற துணிவை முன்வைத்துத் தான் இந்த செயற்கரிய சாதனையைச் செய்து முடித்தனர். சட்ட மன்றத்திலே முதலமைச்சர் அண்ணா அழகு பட எடுத்துச் சொன்னார்கள்....

'இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரை Hasten slowly எனும் வேகமும் நிதானமும் என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கும் எங்கள் நடவடிக்கையில் வேகமும் இருக்கும் நிதானமும் இருக்கும் வேகமாகச் செல்கிற அதே நேரத்தில் இடறி விழாமல் பார்த்துக் கொள்வோம்' என்று இது போல முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெளிவுடன் எடுத்துச் சொல்லி தெளியாத நெஞ்சங்களுக்கும் புரியவைத்ததோடு எத்தகைய இடர்பாட்டுக் கிடையே நாங்கள் பணியாற்ற வேண்டியுள்ள தென்பதை . . .' கொள் முதல் பற்றியும் லெவி பற்றியும் இங்கே கூறினார்கள் ஆனால் லெவி முறையை

முதலில் கையாண்டு பார்த்து விட்டு அதில் குறைகள் இருப்பதால் தான் கொள் முதல் முறைக்கு வந்ததாக எனக்குத் தகவல் இருக்கிறது. முறைகள் பற்றியோ அதன் பெயர்கள் பற்றியோ நமக்குக் கவலையில்லை.

சென்னை கோவை ஆகிய பகுதிகளில் ரேஷனுக்கு அரிசி கொடுக்கும் பொறுப்பு இருக்கிறது' மற்றும் குடும்பக் கார்டுகள் தரப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொருள் தரும் அளவுக்கு கையிருப்பு தேவை. இந்தப் பொறுப்புகளை நாம் புறக்கணித்து விட முடியாது. இந்தத் தேவைகளுக்கேற்ற அரிசியைக் கொள் முதல் செய்து தான் அரசாங்கம் செயல் பட முடியும். ஏனெனில் அரசாங்கத்திற்கென்று சொந்தப் பண்ணைகள் இல்லை. தான்ய வியாபாரம் முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்வது என்பது வசீகரமாகத் தானிருக்கிறது. ஆனுல் உபரி தான்யத்தில் 20 சத விகிதம்தான் இப்போது கொள் முதல் செய்கிறோம். இதற்கே பணம் கிடைக்காமல் உரிய நேரத்தில் மத்திய அரசு பணம் தராமல் ஓவர் டிராப்ட் பெறும் குற்றத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

...ஆனுல் ஒன்று போன வருடம் இதே தேதியில் இருந்த தான்யக்கையிருப்பு இந்த வருடம் இதே தேதியில் இல்லை என்பது மறைக்க முடியாத உண்மை 'என்று இது போல முதலமைச்சர் எடுத்துச் சொல்லிய விபரங்கள் எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலை தானியக் கையிருப்பும், கொள் முதல் முறையில் இருந்த தென்பதை விளக்குவதாகும். இருக்கின்ற அந்த நிலையை வைத்துக் கொண்டே படியரிசித் திட்டத்தை நடை முறைக்குக் கொண்டு வந்துள்ளார்களென்ருல் எத்தகையை வியப்பிற்குரிய நிகழ்ச்சி என்று அறிந்து தான் நாட்டவர் பாராட்டி மகிழ்கின்றனர். ஏற்றமிகு முறையிலே தமிழக அரசு பீடத்தார் மக்களின் இதய சிம்மாசனத்திலே கொலு வீற்றிருக்கும் காட்சியை கலைஞர் அவர்கள் வர்ணித்தபோது...

'நீங்கள் தான் இந்நாட்டு மன்னர்கள்—மன்னர்கள் என்ருல் மந்திரிகள் தேவையல்லவா ? அதனுல் எங்களைக் கோட்டை கொலு மண்டபத்தில் அமர்த்தியுள்ளீர்கள் ஆகவே இது உங்கள் சர்க்கார்தான் ஆண்டு கொண்டிருப்பது நீங்கள் தான் மூன்றரை கோடி பேரும் கோட்டையிலே அமர முடியாதென்பதால் எங்களில் ஒன்பது பேரை மட்டும் மந்திரியாக்கி யிருக்கிறீர்கள் இந்த பதவியை ஏற்றுக் கொண்டிருப்பது புதிய தகுதிக்காகவும் அந்தஸ்துக்காகவும் அல்ல; அறிஞர் அண்ணு அவர்கள் பல முறை எடுத்துச் சொன்னது போல் உங்களின் இதயத்தில் இடம் பெறுவதை விடவா எங்களுக்குக் கோட்டை கொலு மண்டபம் உயர்ந்தது ? உங்களின் அன்பு அரவணைப்பை விடவா ஆட்சி மன்றத்தில் கிடைக்கும் உபசரணைகள் பெரிது ? உங்களின் மூச்சுக் காற்றில் கிடைத்திடும் குளிர்ச்சியை விடவா—கோட்டைக்குள்ளே சுழலும் காற்ருடி சிறநதது ? அல்ல நண்பர்களே அல்ல ! அல்ல தாய்மார்களே அல்ல ! உங்களை விட எங்களுக்கு எதுவுமே பெரிதல்ல, தெய்வமே கூடப் பெரிதல்ல ! நீங்கள் குடி யிருக்கும் குடிசைகள் தான் எமக்குக் கோயில்கள் ! உங்கள் காலடிகள் தான் எங்களுக்கு ஆண்டவனின் அடிச்சுவடுகள் !' என்று பூரித்துப் போன இதயத்தோடு குறிப்பிட்டார். இப்படிப்பட்ட தொரு நேச பாசம் தமிழக அரசுக்கும் மக்களுக்கு மிடையே ஏற்பட்டது. ரத்த பாசத்தால் கட்டுண்ட ஒரே குடும்பம் போன்று அவர்கள் காட்சி தந்தனர். இதன் காரண மாகவேதான்...ஆர்வம் துள்ள தமிழகம் சட்ட மன்ற இடைக்கால நிதி நிலை அறிக்கையை எதிர்நோக்கி நின்றனர்.

முதலமைச்சர் அண்ணு அவர்கள் நிதி அமைச்சர் என் முறையில் தமிழக சட்ட மன்றத்தில் வரவு-செலவு திட்டத்தை தாக்கல் செய்தார்கள். அதில் ஏழு கோடியே அறுபது லட்சம் ரூபாய் துண்டு விழுந்தது. 1967-68 ல் தமிழக

அரசின் வருவாய் 204 . 89 கோடியாக அமையுமென்றும் செலவுகள் '211.99 கோடியாக அமையுமென்றும் எனவே '7 கோடியே 60 லட்சம் துண்டு விழுமென்றும் பட்ஜெட் தெரிவித்தது. அரசாங்க ஊழியர்களுக்கு நடப்பு ஆண்டில் இரண்டாம் தடவையாக பஞ்சப் படியைக் கூட்டியதன் விளைவே, துண்டு விழுவதற்கு முக்கிய காரணம் என்று முதலமைச்சர் அண்ணு கூறினுர். தமிழகத்தின் 4--ம் திட்டத்திற்கு ரூ 564 கோடி முதலீடு செய்யலாமென்று கருதப் பட்டுள்ளது. இதில் ரூ 250 கோடி மத்திய உதவியாக அமையும். மீதியுள்ள 314 கோடி தமிழக அரசால் ஏற்கப் படவேண்டும் என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார். ஆனுல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் தேசீய வளர்ச்சிக்குழுவால் அங்கீகரிக்கப் பட வில்லை என்றும் மாநில அரசாங்கம், மாநிலத்தின் நான்காவது திட்ட நகல் குறித்து விரைவாகவும் விரிவாகவும் ஒரு மதிப் பீட்டைச் செய்யு மென்றும் தேவையான திருத்தங்களைச் செய்யு மென்றும் அவர் கூறினுர்.

அதன் தொடர்பாக தமிழகச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதம் நடந்தபோது சகோதர சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த தோழர் எச். வி. ஹண்டே பேசும்போது ...'மக்கள் பல காலம் எதிர்பார்த்தார்கள். அண்ணு ஒரு நாள் வந்து பட்ஜெட் சமர்ப்பிப்பார் என்று அந்தக் கனவு--மக்கள் காட்டிய தேர்தல் உறுதியால் நிறை வேறியது என்று குறிப்பிட்டார்.

கழக நண்பர் அரங்கண்ணல் பேசுகின்ற போது... காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவித்த கருத்துகள் ஒரே ரீதியில்தான் இருக்கின்றன 'புதிய அம்சம் இல்லையே என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கவர்னர் உரையும்--இடைக்கால நிதி நிலை அறிக்கையும் சென்ற அரசாங்கம் விட்டுச் சென்ற வேலைகளுக்கான திட்டத்தைத்தான் கூறுகின்றன.

இப்போது நிலவரி எடுக்க வேண்டும். இவ்வளவு வேகமாக வாதாடும் காங்கிரஸ் உறுப்பினர் பொன்னப்பநாடார் 1966-ம் ஆண்டு நவம்பர் 6-ம் தேதி இதே மன்றத்தில் தி. மு. கழகம் ஐந்து ஏக்கருக்குக் கீழேயுள்ள நிலங்களுக்குரிய நிலவரி நீக்கப் படவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்த போது எதிர்த்து ஓட்டுப் போட்டவர்தான். காந்தியார் கூறினர் மந்திரிகள் 500 ரூபாய்தான் சம்பளம் வாங்க வேண்டும் என்று. அதன்படி தி. மு. கழக மந்திரிகள் 500 ரூபாய் தான் வாங்குவோம் என்று கூறியதற்கு காங்கிரஸ் காரர்கள் ஒரு பாராட்டுச் சொல்லாவது உதிர்த்திருக்க வேண்டாமா? செய்யவில்லை--காரணம் அவர்கள் தான் காந்தியாரை மறந்து பல நாட்களாகி விட்டனவே. இந்த அரசாங்கத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்ருல்- மத்திய அரசுக்குக் கடன் 235 கோடியும்-அதற்குரிய வட்டி வருடத்திற்கு 8 கோடி ரூபாயும் கட்ட வேண்டிய நிலையில் தான் நாம் பொறுப் பேற்றிருக்கிறேம்.'' என்று குறிப்பிட்டு நிலைமையை விளக்கினர்.

சகோதர இடது சாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் என். சங்கரய்யா பேசுகையில்,...'விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினு லொழிய பஞ்சப்படி தருவது நடந்து கொண்டு தானிருக்கும். இது ஒரு ஓட்டப் பந்தயம் போல நடந்து விடக் கூடாது. பஸ்களைத் தேசீய மயமாக்குவது முதலாளித்துவ நாடுகளில் கூட நடந்திருக்கிறது. பழைய எண்ணங்கள் படைத்திருந்த சர். சி. பி. ராமசாமி ஐயர் திருவாங்கூர் திவானுயிருந்த போது பஸ்களை தேசீய மயமாக்கினர். என்று குறிப்பிட்டுச் சொன்னர்.

சகோதர பிரஜா சோசலிஷ்டுக் கட்சியைச் சேர்ந்த ஏ. ஆர். மாரிமுத்து பேசுகையில், "நிலவரி குறைப்பது அத்தியாவசியம். மது விலக்கைப் புணர்பரிசீலனை செய்ய வேண்டும். பஸ்களைத் தேசிய மயமாக்க வேண்டும். இதற்கு

மத்திய சர்க்காரிடம் வாதாடி உதவி பெறலாம். அல்லது மக்களிடம் கடன் பெறலாம்'? என்ற ஆலோசனையைத் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் பேசுகையில், "பஸ் தொழிலை தேசிய மயமாக்கப் போவதாக தி. மு. க. கூறுகிறது. அப்படி பஸ் தொழிலை தேசிய மயமாக்கும் காலம் இன்னும் வரவில்லை என்பது தான் என் துணிச்சலான கருத்து." என்ற இதயக் கருத்தைக் காட்டினர்.

எதிர்க்கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன் பேசுகின்ற போது...; "இப்போது பேச எழும்போது புதிய உணர்ச்சியும்--புதிய அனுபவமும் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சி விஷ விருட்ச ஆட்சி அலங்கோல ஆட்சி என்றெல்லாம் கூறினர்கள் அதையெல்லாம் கேட்டுக் கொள்ளத்தயார். ஆனல் அந்த ஆட்சி பல நன்மைகளைச் செய்தது. அரிசியை வைத்து அரசியல் நடந்திருக்கிறது. நீங்கள் தேர்தல் அறிக்கையை வைத்தீர்கள். நாங்கள் ஒரு தேர்தல் அறிக்கையை வைத்தோம். உங்கள் அறிக்கையை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதை நிறைவேற்ற நாங்கள் ஒத்துழைப் போம்." என்று எடுத்துச் சொன்னர்.

தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர்-நாகசுந்தரம் பேசும் போது..., "எதிர்க்கட்சியாகிய காங்கிரசுக் கட்சி நம்மைப் பாராட்ட வில்லையே என்று அரங்கண்ணல் வருத்தப்பட்டார். ஆளுங் கட்சியாகிய நாம் மருமகளைப் போன்றவர்கள். காங்கிரசார் மாமியாரைப் போன்றவர்கள். இப்போது சாவி எங்களிடம் தரப்பட்டிருக்கிறது. இதையும் காங்கிரஸ் மாமியார் மனதுவந்து தரவில்லை. மாமியாருக்குக் கிழடுதட்டி-கண் தெரியாமல் சட்டி பானையை உருட்டி நாசப்படுத்தியதால் ஊரார் பார்த்து சாவியைப் பிடுங்கித் தந்திருக்கிருர்கள்.

திருச்சியில் காமராசர் வளைவு கட்டியது பற்றிய வழக்கிற்கு ஒரு மாவட்டப் போலீஸ் அதிகாரியைச் சாட்சியாகப் போட்ட போது அவர் என்னிடம் வந்து, "என்னை ஏன் சாட்சி யாகப் போட்டீர்கள் அப்ரூவருக்கு மாற்றி விடுவார்களே" என்று கூறினார், அந்த அளவுக்குக் காட்டு தர்பார் நடத்தினார்கள். மாணவர்களை பொது மக்களைத் தடியால் அடித்தார்கள். ஓடினால் துப்பாக்கியால் சுட்டார்கள். இப்போதைய அமைச்சர் கருணாநிதி. கி. ஆ. பெ. விசுவநாதம், ஆதித்தனார் போன்றவர்களைக் காரணம் காட்டாமல் சிறையில் அடைத்தார்கள். இந்த நிலைமைக்கு காங்கிரசுக் காரர்கள் டிபாசட் இழந்திருக்க வேண்டும்" என்று உணர்ச்சிபட எடுத்தியம்பினார்.

கழகத்தோழர் முனு - ஆதி பேசுகின்ற போது,... "உணவுக்காக முதலிடம் தந்ததற்காக இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுகின்றேன். ஆயிரம் - இரண்டாயிரம் மூட்டைகள் என்று பெரிய பணக்காரர்கள் பதுக்கிவைத்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து--நெல் மூட்டைகளை எடுத்து வருகிறது போலீஸ். இதைப் பார்க்கும் போது நாட்டிலுள்ள பற்றுக்குறை இயற்கையாக ஏற்பட்டதல்ல ! பணக்காரர்கள் உண்டாக்கியது என்பதைப் புரிந்து கொண்டோம். இனி நமது வேலை அந்தப் பதுக்கல் காரர்களைப் பிடிப்பது தான்"...என்று எதிர்த்துச் சொன்னார்.

கழகத் தோழர். ஆர். மாணிக்க வாசகம் பேசுகின்ற போது..., "இதுவரை விவசாயிகளை தட்டிக் கேட்டுப் பெற்றுக் கொண்டிருந்தார். இப்போது தட்டிக் கொடுத்துப் பெறும் அரசு வந்திருப்பதை வரவேற்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் அண்ணா சட்டமன்றத்தில் பதிலளிக்கும் போது, "இடைக்கால வரவுசெலவு திட்டத்தை புதிய

மொந்தையில் பழைய ஒயின் (கள்ளு) என்று பொன்னப்ப நாடார் (காங்) சொன்னார். பழுதுபட்ட நிலையில் மொந்தையை மாற்ற வேண்டியுள்ளது. இந்த பழைய ஒயின் நீங்கள் தயாரித்த சரக்கு நான் தயாரிக்கும் ஒயின் (புது பட்ஜெட்) சரக்காக இராது. மருந்தாக உணவாக இருக்கும்'' என்று பலத்த கைதட்டல்களுக் கிடையே குறிப்பிட்டார்கள். கேட்டிட வேண்டிய கேள்வியை எந்த நிலையிலிருந்து சகல விபரங்களையும் தெரிந்து கொண்டு கேட்கவேண்டிய வரம்பு முறையிலிருந்து மாறுபட்டு எதையாவது பேச வேண்டுமென்று குரல்கொடுத்த வாய்ப்பந்தல் வீரர்களின் நாவசைந்திடாதிருக்கும் முறையிலே பேரறிஞர் அண்ணா பதிலடி தந்தார்கள். இடைக்கால வரவு செலவின் உருவகத்தையே புரிந்து கொள்ளாமல் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆளுக்கொரு விதமாகக் கேட்டு, முடிவாக ஓய்ந்து அமர்ந்தனர். அவர்களின் தெளியாத போக்கிற்கு மேலும் தெளிவைத் தரும் முறையிலே முதலமைச்சர் அண்ணா தமிழக மேலவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும்போது,... " துண்டு விழுகிற பட்ஜெட்டை ஏன் சமர்ப்பித் தீர்களென்று காங்கிரஸ் காரர்கள் கேட்க மாட்டார்கள் என்று நம்புகிறேன், ஏனென்றால் அவர்களுடைய மொரார்ஜியே 300 கோடிக்கு மேல் துண்டு விழுகிற பட்ஜெட்டைத் தான் சமர்ப்பித்திருக்கிறார். துண்டு விழுவதற்கு என்ன செய்து நிறைவு செய்யலாம் என்பதை இங்கே இருப்பவர் கூற வேண்டும். ஏனென்றால் இந்தச் சபைக்கு கவுன்சில் என்று பெயர். கவுன்சில் என்றாலே யோசனைகளைக் கூறுமிடம் என்று பொருள். இந்தத் துண்டு முன்பு மாநில அரசு ஊழியர்களுக்கு ஈட்டுபடி உயர்வு போன்ற முக்கியமான செலவுகளால் இந்தத் துண்டு விழுந்திருக்கிறது. இங்கே நண்பர்கள் தேர்தல் காலத்தில் கூறியதை ஏன் நிறை வேற்றவில்லை ? எங்கே ஒருபடி ? எங்கே மூன்று படி ? என்றெல்லாம் கேட்டார்கள். எங்களால் முடிந்த அளவு செய்வோம். செய்ய முடியாது என்று தோன்றுமானால் ஒரு

துளியும் தயங்காது மக்களிடம் எடுத்துக்கூறி அவர்கள் நம்பிக்கையைப் பெறுவோம். இதற்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமானால்- திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்பு திராவிடத் தனிநாடு கேட்டுக் கொண்டிருந்தோம் அந்தக் கோரிக்கையைக் கைவிட நேரிட்டபோது மக்களிடம் நேரிடையாகச் சென்று கூறினோம். அப்போது சிலர், " இவர்கள் கொள்கையையே விட்டு விட்டார்கள் அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என்றார்களே என்ன ஆயிற்று ? மக்கள் இவர்களை மன்னிப்பார்களா ? என்று கேட்டார்கள். ஆனால், இப்போது என்ன காணுகிறீர்கள் ? இங்கே இருக்கிறோம். அப்படி விட்டுவிட்டதால் புதிய ஆதரவே கூடப் பல பாகங்களிலிருந்து வந்தது. நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லையென்றால் மக்களிடம் சென்று நாங்கள் முயன்றோம் ? முடியவில்லை தொடர்ந்து ஆட்சியில் இருக்கட்டுமா ? வேண்டாமா ? என்பது பற்றி ரெபரண்டம் கூடவைக்கத்தயார் என்று முன்பே கூறியிருக்கிறேன்.'யாராக இருந்தாலும் நல்ல சர்க்கார்—சிறந்த நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

அப்போதிருந்த பக்தவச்சலம் அமைச்சரவை நிலவரி எடுப்பதில் தாமதம் காட்டியது ஒரு அதிகாரியை நியமித்து அறிக்கை தயாரிக்கக் கூறியது அந்த அறிக்கை வந்தாலும் 1967—ஜூலைக்கு மேல் முடிவு என்ன என்பதைக் கூட கூறவில்லை. இருபது வருடங்களாக ஆண்டவர்கள் தாமதம் காட்டி விட்டு...குழந்தைப் பருவத்திலுள்ள எங்களை 'ஓடு' என்று தள்ளி விடுவது குழந்தை மீது நல்லெண்ணம் உடையவர்கள் செய்யும் காரியமல்ல;

திட்டக் கமிஷனே நிலவரி மீது கைவைக்காதே என்று. தாக்கீதுக்கு மேல் தாக்கீது அனுப்பிக் கொண்டிருக்கிறது ஒரே கட்சி மாநில அரசிலும், மத்திய அரசிலும் இருக்கும்

போதே அந்தத் தாக்கீது என்ருல் இப்போது அந்தத் தாக்கீது கடுமையாக இருக்கும் என்பதையும் மறந்து விடக் கூடாது.

மதிய உணவுக்கான செலவு குறையவில்லை. வருவாய் வேறு விகிதத்திலிருந்து திரட்டப்படும் சேலம் இரும்பாலையை மாநில அரசாங்கமே நடத்தும் என்று வெங்கட்ராமன் மார் தட்டிச் சொன்னுர் என்ருர்கள். மார் தட்டுவது எளிதான காரியம் தானு. ஆனுல் இதே வெங்கட்ராமன்,' அவர்களுக்கு என்ன 'சொன்னுலும்' புரியவில்லையே, என்று ஒரு கையால் அல்ல — இரண்டுகையாலும் மார் தட்டிக் கொண்டது எனக் குத் தெரியும் ஆகவே அருள் கூர்ந்து உறுப்பினர்கள் இனி யாவது மூன்று படி ஒருபடி என்று கூறியதால் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதாகக், கருத வேண்டாம். சரி தமிழகத்தில் தான் 3படி என்று கூறி ஆட்சிக்கு வந்தார்கள். கேரளத்திலும், வங்கத் திலும், ஒரிசாவிலும் எதிர்க்கட்சியினர் ஆட்சி அமைத் துள்ளனரே — அவர்கள் எத்தனைபடி போடுவதாக வாக்களித் தனர் ? முன்னேறுகிற நாட்டில் முன்னேற்றம் ஏற்பட வழி செய்த அரசாங்கத்தை விட இன்னொரு அரசாங்கம் வந்தால் என்ன செய்யும் என்று பார்க்க விரும்புவார்கள் என்று வெங்கட்ராமன் பொதுக் கூட்டத்தில் மற்றவர்கள் எல்லாம் காரசாரமாகப் பேசியபோது தனித்து நின்று பேசினுர். அது தான் உண்மை. மூன்று படி அரிசி போடுவோம். என்ருல் விவசாயி தன் நெல் விலை குறையும் ஆகவே தி. மு' கழகத் திற்கு ஓட்டு இல்லை என்று கூறியிருக்க மாட்டானு ? அனுல் எங்களுக்கு இந்த முறை கிராமங்களில் அதிக ஓட்டுகள் கிடைத்தன. காரணம் தி. மு. கழகம் அரிசி விலையை மட்டு மல்ல விவசாயிகளுக்குத் தேவையான மற்ற பொருட்களின் விலையையும் குறைக்க எண்ணுகிறது என்ப தால் ஓட்டு அளித்தனர். அவர்களது நம்பிக்கைக்கு உரிய முறையில் நடந்து கொள்வோம். அப்படியேதும் செய்ய முடியவில்லை யானுல் மக்களிடம் சென்று நிலைமையைக் கூறி பதவியில் இருக்கட்டுமா ? இறங்கட்டுமா ? என்று

கேட்பேனே தவிர இதே பதவியில் நீடித்து இருக்க வேண்டும் என்று நினைக்க மாட்டேன். ஜனநாயகத்தில் ஒரு அரசாட்சி மாறுவதால் எல்லாம் தலை கீழாக மாறிவிடாது. அதற்குப் புரட்சி--பலாத்காரப் புரட்சி நடக்க வேண்டும். ஆனால் இங்கே ஜனநாயக சக்கரம் ஒரு சுற்று சுற்றியிருக்கிறது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சுற்றியிருக்கிறது. இதை உணர்ந்தால் படிப்படியான மாறுதல்கள் தான் கிட்டும் என்பதை கொள்ளலாம் என்று குறிப்பிட்டார். பேரறிஞர் அண்ணாவின் மேலவைப் பேச்சு மேல்வாரியாகக் கழகத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தவர்களும் அதன்மீது புதிய தொரு கவர்ச்சி கொண்டிடும் மாற்றம் மலர்ந்தது. 'குறுகிய காலத்திற்குள்ளே எந்த முன் அனுபவ மில்லாத இவர்கள் எப்படி நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து விடப்போகிறார் களென்று வேடிக்கை மொழி பேசியவர்களெல்லாம் அதிசயித்திடும் முறையிலே முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அறிக்கையை தாக்கல் செய்தார். சட்ட மன்ற அனுபவ மிக்கவர்களே திறமையுடன் பாராட்டிடும் முறையிலே அறிக்கை தயாரிக்கப் பட்டிருப்பதாக பெருமையுடன் குறிப்பிட்டனர். மேடை ஏறி அலங்காரத்தோடு பேசிடவும், ஏடுகளிலே எழிலோடு எழுதிடவுந்தானே இவர்கள் கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள். பல கோடி மக்களுக்கு ஜீவனளித்திடக் கூடிய வரவையும்--செலவையும் இவர்கள் எங்கே அறியப் போகிறார்கள். அறிய முடிந்தாலும் எதைக் கூட்டி எதைக் குறைத்திட வேண்டுமென்று குப்பிடப் போகிறார்கள்... என்று சந்து முனையிலே பேசி வந்த பாரம் பரியப் பெருமையின் நினைவு கொண்டிருந்தோரின் சபல இன்பமெல்லாம் தகர்ந்திடும் முறையிலே அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதும், தங்களது அசகாய சூரத்தனம் நிறைந்த பேச்செல்லாம் வீணாகி விட்ட சரிவைக் கண்டனர்.

இது போன்றே அவர்கள் எதிர் நோக்கிய தாழ்வு நிலைகளுக்கு மாறாக தமிழக அரசு ஆக்கப் பணிகளிலே ஆற்றல்

மிகக் கொண்டு பணியாற்றி வந்தது. இரண்டு மூன்று திங்களுக்குள்ளாகவே ரூபாய் பத்து லட்சத்துக்கும் அதிக மான மதிப்புள்ள பதுக்கல் தானியங்களைக் கைப்பற்றி வெளியே கொண்டு வந்தனர். கறுப்புச் சந்தை கழுகுகள் உயிரைப் பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருந்த வாழ்வு பிரச்சனையில் பணத்தைப் பெரிதெனக் கருதி தானிய மூட்டைகளை இருட்டு கிடங்குகளிலே பதுக்கி வைத்திருந்தனர். தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவும், உணவமைச்சர் மதியழகனும் பதுக்கல் வேட்டைக்கும் கொள் முதலுக்கும் உத்தரவு போட்ட பிறகு...தமிழகத்து துணை போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரல் ஆர் என். மாணிக்கத்தின் கட்டளைக் கிணங்க தமிழகம் முழுவதும் காவல் துறை அதிகாரிகள் தீவிரமாகப் பதுக்கல் வேட்டை ஆடினர். ஆங்காங்கே உள்ள கழக நண்பர்கள் இந்த அரும் பெருந் தொண்டில் ஆர்வ முடன் ஈடு பட்டு காவல் துறையினருடன் ஒத்துழைத்தனர். இந்த அரும் பணி பற்றிய நாளிதழ் செய்தி...''எங்கெங்கே நெல், அரிசி; ரசாயன உரம் ஆகியவை பதுக்கி வைக்கப் பட்டிக்கிறது என்று போலிசாருக்குத் துப்புக் கொடுப்பதில் தி. மு. க. கூட்டணி ஊழியர்கள் அதிக ஆர்வம் காட்டி வரு கின்றனர். சென்னையை அடுத்த குரோம் பேட்டையில் உள்ள கூட்டணி ஊழியர்கள் துப்புக் கொடுத்ததின் பேரில் பல்லாவரம் சப்--இன்ஸ்பெக்டர்கள் ராமதாசும்' ஜெயராமனும் 432. மூட்டை ரசாயன உரத்தைக் கைப்பற்றினர். இந்த உர மூட்டைகள் பல்வேறு இடங்களில் பதுக்கி வைக்கப் பட்டிருந்ததாக .கூறப்படுகிறது. செங்கல்பட்டு சட்ட மன்ற உறுப்பினர் விசுவநாதன் தகவல் கொடுத்ததின் பேரில் திருக்கழுக் குன்றத்தை அடுத்த காரை கோவில் பட்டியில் 700 நெல் மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. இந்த நெல் மூட்டைகள் 4வீடுகளில் இருந்தாகக் கூறப்படுகிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர் ராகவாச்சாரி இந்த சோதனையை நடத்தினர்

என்று பெருமையுடன் குறிப்பிட்டதென்றால் அந்த ஆற்றல் மிகு பணி பொது மக்களால் எந்த அளவுக்கு வர வேற்கப்பட்ட தென்பது தெளிவாகும். தந்தை பெரியார் அவர்களும் நாமெல்லாம் மகிழத்தக்க விதத்திலே, 'பதுக்கல்காரர்களை கண்டிக்காமல் சிலர் மூலை முடுக்குகளில் எல்லாம் அரசாங்கத்தை சபித்துக் கொண்டு சாபம் கொடுத்துக் கொண்டு விஷமப் பிரசாரம் செய்கிறார்கள், ஏனென்றால் திருச்சியில் அதிகாரிகள் மிராசுதாரர்கள் வீடுகளிலும் சோதனை போட்டு தானிய மூட்டைகள் 100, 200 ஆயிரம் என்பதாக எடுக்க நேர்ந்தால் ஒரே மூச்சாகக் கூப்பாடு போடுகிறார்கள். யோக்கியமான குடிமக்களாகயிருந்தால் பதுக்கல்காரர்களைக் காட்டிக் கொடுப்பதை விட்டு விட்டு இப்படி ஆட்சிக்கு சாபம் கொடுக்க வருவார்களா? புதிய அனுபவ மில்லாத மக்கள் (தி.மு.க. வினர்) ஆட்சிக்கு வந்தால் யோக்கியமான குடிமக்கள் ஆட்சிக்கு ஆதரவளித்து பொறுமை காட்டி நல்வழிப் படுத்துவதையல்லவா கடைப்பிடிக்க--வேண்டும். 'அரிசி இல்லை அரிசி இல்லை' என்று ஒரு பக்கம் கூப்பாடு போடுவதும், அதற்கு யோக்கியமான பரிகாரம் செய்தால் ' அக்கிரமம் அநியாயம் ' என்று கூப்பாடு போடுவதும் சரியா?'' என்று தமது உயரிய அறிக்கையின் மூலமாகக் கேட்டார். அக மிக மகிழ்ந்திடும் அறிக்கை தந்ததோடு தி. மு. க மந்திரி சபைக்கு ஆதரவு திரட்டுகின்ற முறையில் இரண்டு திங்கள் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்திடப் போவதாவும் அறிவித்தார்.

அந்த அளவிற்கு சிறப்பு மிகக் கொண்டு மிளிர்ந்தது தமிழக ஆட்சிமுறை. ரூபாய்க்கு ஒரு படி வீதம் அரிசி கொடுத்து வருவதில் தமிழக அரசு 12 கோடி ரூபாய் நட்டத்தைத் தாங்கிட வேண்டயதாகியது. நட்ட ஈடு கொடுக்கும்படி முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா மொரார்ஜி தேசாயைக் கேட்டார். அவர் உடனடியாக திட்டம் பற்றி ஆராய்ந்து கூடப் பாராமல் கைவிரித்து விட்டார். இந்தியா

வில் கோதுமையை - அது வடநாட்டாரின் உணவாக இருப்பதால் குறைந்த விலைக்கு விற்பதற்காக ஆண்டுக்கு மத்திய அரசாங்கம் 180 கோடி ரூபாய் உதவிப் பணம் கொடுக்கிறது. தமிழ் நாட்டில் கோதுமையே சாப்பிடுபவர்கள் இருந்தால் இந்த நட்ட ஈட்டில் குறைந்தது 10 கோடியாவது தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும். கோதுமையைக் குறைந்த விலைக்குத் தருவதன் மூலமாக ஏற்படக் கூடிய நட்ட ஈட்டிற்குப் பணம் தருவோர் அரிசியைக் குறைந்த விலைக்கு விற்றிடும்போது தருவதில்லை. இது எந்தவகையில் நியாயமோ நாமறியவில்லை. அரிசி உண்போர் வடபுலத்திற்கும் அப்பாற்பட்டவர்கள் தானே என்ற பேத உணர்ச்சியை வெளிக் காட்டும் முறையிலேதான் அவர்கள் அப்படி நடந்து கொண்டதாக நல்ல நியாயம் தெரிந்தவர்கள் மதிக்க முடியும்.

இவ்வளவு இடர்பாடுகளிருந்தும் படியரிசித் திட்டத்திலே பின் வாங்கி விடவில்லை அரசு. மக்களுக்குப் படியளந்திடுவதிலே ஏற்படும் நட்டத்தைத் தாங்கிட அரசு தயாராகியபோது... முன்னர் ஆண்டு சென்றவர்களின் அவலமும் வலம் வரத்துவங்கியது. காங்கிரஸ் அரசு பருப்பு வியாபாரம் செய்கிறேனென்ற கித்தாப்போடு 85 லட்சம் ரூபாய்க்கு துவரம் பருப்பு வாங்கி கிடங்குகளிலே சேமித்து வைத்தது. தமிழக அரசு வந்த பிறகு அந்தப் பருப்புக்கு கிராக்கி இல்லை எனவே குறைந்த விலைக்கு பருப்பை விற்கநேர்ந்தது. 30 லட்சம் நட்டம் ஏற்பட்டது அரசுக்கு, தாங்குகின்ற சுமை போதாதென்று புதுச் சுமையும் ஏற்பட்டது. காங்கிரஸ் திருவாளர்கள் செய்து விட்டுப்போன திருவிளையாடல்களால்.

ஆயினும் உணவு உற்பத்தி பெருகிடுவதை வெற்றிகரமாக செய்து முடித்தால் தட்டுப்பாடுகள் கொஞ்சமாவது குறையுமென்று அரசு நம்பியது. அந்த நம்பிக்கையின்

காரணமாகவே தஞ்சை மாவட்டத்தில் இரட்டை சாகுபடி திட்டம் அமுல் படுத்தப் பட்டது. 10 லட்சம் டன் விளைந்து வந்த அந்த மாவட்டத்தில் இரட்டை சாகுபடி செய்வதன் மூலம் மேலும் 4 லட்சம் டன் நெல் அதிகமாக விளைவிக்கலாமென்று திட்டமிட்டனர்.

மத்திய அரசுக்கு இந்த ஆண்டு வட்டியாக மட்டும் இருபது கோடி ரூபாய் கட்ட வேண்டும். அதை நிரந்தரமாகத் தள்ளிக் கொடுக்க வேண்டாம். இரண்டு மூன்று ஆண்டுகள் தள்ளிக் கொடுத்தால் போதுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் டில்லி மூலவர்களிடம் கேட்டுப்பார்த்தார்கள். ஆகாது, கூடாது என்று பலமாகத் தலையாட்டி விட்டார் மொரார்ஜி. பட்ஜெட்டில் இந்த வரவையெல்லாம் சேர்த்துத்தானே கணக்கிட்டு வருகிறேன் என்று சூசமாகக் கூறிவிட்டார். என்ன நேர்ந்த போதிலும் படியரிசித் திட்டத்திலிருந்து பின்னுக்குப் போக மாட்டேன் என்று கூறினார் நமது அண்ணா.

"ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடப் போவதாக அறிவித்ததும், பதினறு கோடி நட்டம் வரும் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். பத்து கோடி நட்டம் வரும் என்று அனுபவசாலிகள் கூறுகிறார்கள். ஆறு கோடி நட்டம் வரும் என்று அரசாங்க அதிகாரிகளே கூறுகிறார்கள் என்றெல்லாம் சொல்லி பயமுறுத்திப் பார்க்கிறார்கள். எத்தனை கோடி நட்டம் வரும் என்ற கணக்கு நான்பார்க்க வில்லை. எத்தனை நாள் போட முடியுமோ போடுகிறேன். முடியாவிட்டால் சொக்காயை உதறிஉங்களிடத்தில் காட்டி விட்டு வெளியே வருவேன் ரூபாய்க்கு ஒருபடி அரிசிபோடுவதால் நட்டமாகலாம். எப்படி சரிக்கட்டுவது? ஐந்தாண்டு திட்டம் பிரச்சார அதிகாரிகள் மாவட்டம் தோறும் இருக்கிறார்கள். அவர்கள் பக்ரா-நங்கல் அணைக்கட்டுப் பற்றி இப்போதுதான்

படம் போட்டு காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை அதிலே இருந்து அழைத்துக் கொண்டால் அதிலே கொஞ்சம் மிச்சமாகும். தம்பி கருணாநிதியைக் கூப்பிட்டு, நீ மோட்டாருக்கு எல்லாம் சொந்தக்காரனாக இருக்கிறாய். அதிலே இருக்கிற சில அதிகாரிகளைக் குறைதுக் கொள் என்று சொன்னால் அவர் இரண்டரை லட்சம் ரூபாய் மிச்சமாகும் அளவுக்கு பட்டியல் கொடுத்து இருக்கிறார். கிராமப் புறத்திலே மலத்திலிருந்து எப்படி எரு தயாரிப்பது என்பதை விளக்க முந்நூறு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து வேறு வேலைக்கு அனுப்பினால் மிச்சம் ஏற்படும். கட்டடங்கள் கட்டுவதில் அனாவசியமாக பணத்தை வாரி இறைக்க வேண்டாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறேன். போலீஸ் துறையில் யார்யாரைக் குறைக்கலாம் என்று அந்தத்துறை அதிகாரிகளையே அழைத்து அவர்கள் சொன்னபடி குறைத்து இருக்கிறேன். இப்படி பல வழிகளில் நிர்வாகச் செலவை குறைத்து சிக்கனப்படுத்தி நட்டத்தை சரிகட்ட முயலுவேன்'' என்று முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 94-வது வட்டம் ஏரிக்கரை மைதானத்தில் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். அந்த முறையிலே விரைவான நடவடிக்கைகள் எடுத்து சிக்கனப் படுத்திடத் துவங்கினர். மாவட்ட அரசாங்க அலுவலகங்களிலும், மாநில தலைமை அலுவலகத்திலும் தேவையற்ற ஏராளமான பதவிகள் காலிசெய்யப் பட்டன. கலெக்டரின் தனி உதவியாளர் பதவிகளும் ரத்து செய்யப்பட்டன. சமுதாய நலத்திட்டத்தில் ஆண்டுக்கு 7 கோடி ரூபாய் சம்பளச் செலவு இருந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும். அங்கும் தீவிரமான மாற்றம் செய்யப்பட்டது.

விரயமான பணத்திற்குத்தான் சிக்கன முறையைக் கடைப் பிடித்தனரே தவிர உருப்படியாக நடைபெற வேண்டிய திட்டத்தையும் நிறுத்திவைத்து சிக்கனத்தைக் காட்ட

வில்லை. தஞ்சை மாவட்டதில் விவசாய வளர்ச்சியை முன்னிட்டு ஆற்றுப்பாலங்கள் அமைத்திட 88 லட்சம் ரூபாய் பொதுப் பணி அமைச்சர் கருணாநிதியால் ஒதுக்கப்பட்டது. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் அக்கினி யாற்றின் மீது பாலம் அமைத்திடவும், அதேசாலையில் நசுவினி யாற்றின் மீது பாலம் அமைத்திடவும், பட்டுக்கோட்டை-சேது பாவா சத்திரம் சாலையில் பாபாக்கினியாறு மீது பாலம் அமைத்திடவும், தஞ்சை கீழ்க் கடற்கரைச் சாலையை சீர் செய்திடவும், விளாங்குடி அருகே கொள்ளிடம் நதியில் பாலம் தொடங்கிடவும், பாம்பாறு நதியின் மேல் திருப்புன வாசல் -ஓரியூர் சாலையில் பாலம் அமைத்திடவும், ஐயம் பேட்டை கணபதி அக்ரகாரம் - பாபநாசம் - கபிஸ்தலம் சாலையில் குடமுருட்டி வடகரைச் சாலையை செப்பனிடவும், ஆவிடையார் கோவில் - ஓக்கூர் சாலையுடன் தஞ்சை மாவட்ட எல்லையில் பாம்பாறு நதியின் மேல் பாலம் அமைத்திடவும் சுமார் 88 லட்சம் ருபாய் பொதுபணி அமைச்சரால் ஒதுக்கப்பட்டது.

ஆக்க பூர்வமான திட்டங்களை உருவகப் படுத்தி ஆற்றலைப் புறிய வைத்த தமிழக அரசை கட்சிக் கண்ணோட்டத் தோடும், எரிந்த மனத்தோடும் பார்த்து வந்த காங்கிரஸ் கட்சியினைத் தவிர ஏனையதமிழக சகோதரக் கட்சினரெல்லாம் ஆதரவுக் கரம் நீட்டி பாராட்டிவந்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்மாநிலக் கிளைச் செயற்குழு... நான்காவது பொதுத்தேர்தலில் காங்கிரஸ்கட்சி முறியடிக்கப்பட்டு திராவிட முன்னேற்றக்கழகம் தமிழ் நாட்டில் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்றதன் விளைவாக தி. மு. க. மந்திரிசபை அமைக்க முன் வந்துள்ளதை இக்குழு வரவேற்கிறது. தி. மு. க. மந்திரி சபைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. சர்காரில் அங்கம் வகிக்காத கட்சி என்ற முறையில் கம்யூனினிஸ்டுக்

கட்சி சட்ட சபையில் சுதந்திரமான ஒரு கட்சியாக, சட்ட சபை சம்பிரதாயப்படி எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்த போதிலும் தி. மு. க மந்திரிசபையை ஒரு நேசக் கட்சியின் மந்திரி சபையாகக் கருதுகிறது. அந்த முறையில் அது ஆக்க பூர்வமான யோசனைகளை நல்கி நட்புணர்வோடு விமர்சனம் செய்யும் 'என்று தீர்மானம் போட்டு தனது நன்றியையும்—பாராட்டையும் தெரிவித்தது. இது போன்றே சகோதரக்கட்சிகளான முஸ்லீம் லீகும்; தமிழரசுக் கழகமும், சுதந்திராக் கட்சியும் நேசக்கரம் இணைத்து ஒத்துழைப்பை நல்கியது. சுதந்திராக் கட்சி ஒரு சில கருத்துகளிலே மாறு பட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தாலும் மொத்தத்தில் அரசுக்கு ஒத்துழைப்பதிலே முன் கரமெடுத்தனர்.

கோவை ஆலைத்தொழிலாளர் வேலை நிறுத்தக் கிளர்ச் சிக்கு ஒரே மணி நேரத்தில் தீர்வு காணப்பட்டது. கோவை வந்தடைந்த தோழர் டாங்கே வேலை நிறுத்தக் கிளர்ச்சி இவ்வளவு விரைவில் முற்றுப் பெற்றமை குறித்து அதிசயித் தார். ஜனநாயகமுறையிலே தி. மு. கழகத்தினர் நடத்தி வரு கின்ற அரசின் தூய்மை நிறைந்த செயல்கள்தான் தொழி லாளர்களுக்கு இத்தகைய மாபெரும் வெற்றியைத் தேடித்தந் திருக்கிற தென்று புகழ்ந்தார்.

தேர்தலிலே நம்மிடமிருந்து பிரிந்த வலது சாரி கம்யூனிஸ் டுகளும் வாக்குகளை சிதறடித்ததற்காக பெரிதும் வருந்தினர். தேர்தல் நேரத்தில் நம்முடன் கூட்டுச் சேரவில்லையே என்றும் வேதனை மிகக் கொண்டனர். கழகத்தை வேறு வேறு கோணத் திலே உற்று நோக்கியவர்களும் அதன் செயல் திறன் கண்டு விரைந்து நெருங்கினர். கழகத்தின் ஓயாத உழைப்பும்— மக்கள் அளித்த மாபெரும் ஒத்துழைப்பும் எதிர் முகாமிலிருந் தவர்களின் உள்ளத்தை மாற்றிட முனைந்தன.

உள்ளத்தால் உண்மை காந்தீயவாதிகளாக இருந்தவர்கள் 'தென்னாட்டு காந்தி அண்ணா தானென்பதை மனமுவந்து ஒப்புக் கொண்டனர். மது விலக்குக் கொள்கை குறித்து முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அழுத்தமான கொள்கையைக் கொண்டிருந்தார். மது விலக்கை ரத்து செய்து விட்டால் கலால் வரியாக 30 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்றாலும் மக்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்ல மாட்டேனென்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் முதலமைச்சர் அண்ணா, படியரிசித் திட்டத்தை நடை முறைக்குக் கொண்டு வந்ததில் ஏற்படும் நட்டத்தை காலால் வரி மூலமாக சரிக்கட்டும் வகையிருந்தும் அந்த வழியால் ஒரு நன்மையைச் செய்கின்ற போது மற்றொரு தீமைக்கு வழி திறந்து விடக் கூடாதென்று பேரறிஞர் அவர்கள் பேரிதும் நம்பிக்கை கொண்டார்கள். எனவேதான் கோவை செய்தியாளர்களிடையே முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகின்றபோது... ,அருகேயுள்ள மற்ற மாநில அரசுகள் மது விலக்கு பற்றி மறு பரிசீலனை செய்தாலும் கூட தமிழக அரசு மது விலக்குக் கொள்கையை ஒரு போதும் கை விடாது நான் மது விலக்குக் கொள்கையில் அழுத்தமாக ஊறிப் போனவன் ஆவேன் 'என்று குறிப்பிட்டு நிலைமையைத் தெளிவுபடுத்தினார். இதையெல்லாம் கண்டறிந்த பின்னர் தான் ஆந்திர முதலமைச்சர் பிரமானந்த ரெட்டியார் தமிழகம் வந்துற்றபோது பேரறிஞர் அண்ணாவை உண்மையான காந்தீய வாரிசு என்று பெருமையுடன் விமரிசித்தார். இந்த வாழ்த்து மொழிகளுக்கெல்லாம் சிகரம் வைத்திடுவது போல பாராளுமன்ற கழக நண்பர்களை சந்தித்த போது இந்தியத்துணைக் கண்டத்து ஜனாபதி மேதகு ஜாகீர் உசேன் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் சிறப்பினையும் அவர் தம் தமிழக அரசு ஆட்சியினையும் பலபடப் புகழ்ந்தார்கள். மற்ற மற்ற மாநில மத்திய அரசு அமைச்சர்களும் தமிழக அரசின் செயற்கரிய சாதனைகளைக் கண்டு பாராட்டு மலர்களைக் குவிக்கத் தவற வில்லை.

இதற்கிடையே நமது புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரன் அவர்களது அரும்பணியினையும் அரசுக்குப் பயன், படுகின்ற முறையிலே சிறு சேமிப்பு இயக்கத்தின் துணைத் தலைவராக்கினார் பேரறிஞர் அண்ணா மாநில சிறு சேமிப்பு இயக்கத்தின் தலைவராக பேரறிஞர் அண்ணா இருந்து வந்தார். சேமிப்புத்துறையிலே அரசின் பணிகளுக்கு பக்க பலமாக அவரது சேவையையும் இணைத்தார். மக்களுக்கு நல்லதைச் செய்திடுவதில் மனவிருப்பங் கொண்ட மக்கள் திலகம் பேரறிஞர் அளித்த பதவியினை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். மறு பிறவி எடுத்து மக்களுக்குத் தொண்டாற்றிடும் ஒப்புயர் வற்ற சந்தர்ப்பம் கிடைத்ததிலே அவர் பிறந்த தன் பயனைப் பெற்றார், தேர்தல் உலகத்திலேயே புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியவர் நமது புரட்சி நடிகர். மருத்துவ மனையிலிருந்து மரணத்துடன் போராடிக் கொண்டே வெற்றி வாகை சூடி வீணர்களின் முகத்தில் கரிபூசிய நிகழ்ச்சி நமது வரலாற்றிலேயே சிறப்புமிகு காதையாகும். இந்த வீர காதையை ஏற்படுத்திய மக்கள் திலகம் தமக்களிக்கப் பட்ட உயர் பதவியினை அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டு அவனி புகழ்ந்திடும் முறையிலே ஆற்றலுடன் பணியாற்றத் துவங்கினார். சிறு சேமிப்புத் துறையிலே அவர் திட்டமிட்டு செயலாற்றியதை நல்லறிஞர்கள் பெருமிதத்துடன் வரவேற்றனர். சிறுசேமிப்பு பற்றி அவர் ஆற்றி வந்த உரைகளிலே சேமிப்பின் தத்துவம் புதிய கோணத்தில் உருவெடுக்கும் முறையிலே விளக்கப்பட்டது. புரட்சி நடிகர் வியக்கத்தகு முறையிலே நடித்திடும் தலை சிறந்த நடிகர் மட்டுமல்ல ... அரசுப் பணியினையும் ஆற்றலுடன் செய்துக் காட்டும் காரியவாதி என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

அரசுத் துறைகளிலே எந்தெந்தக் கழக நண்பர்கள் பங்கு கொண்டார்களோ அந்த அத்தனை பேருமே சீரும் சிறப்புடன் பணியாற்றி தமிழக அரசின் ஒளி மிகுந்த எழிற் காட்சி பரவிட உதவினர்.

ஒப்பில்லாத வைர மூடிதனை ஏற்றிட பேரறிஞர் ஜூன் திங்கள் 17-ம் நாள் 67--68 ஆண்டுக்குரிய பட்ஜெட்டை சமர்ப்பித்தார். பட்ஜெட்டில் நாலாயிரத்துக்கும் மேலான தலைப்புக்களிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இங்கே வாழுகின்ற தென்னவர்களுக்கு மட்டு மல்லாமல் வாழ வழியின்றி விரட்டப்பட்டு வந்து சேரும் தமிழர்களுக்கும் சேர்த்து நிதி நிலை அறிக்கையிலே வகைகாணப் பட்டது பர்மாவிலிருந்து தமிழகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக 25 லட்சம் ரூபாய் பட்ஜெட் ஒதுக்கப்பட்டது. அங்கிருந்து இங்கே நம்மை நாடிய பூர்வ குடிகளுக்கும் குறை இருக்கக் கூடாதென்று 'பட்ஜெட்' தயாரிக்கப்பட்ட தென்றால்... இங்குள்ளவர்களுக்கு எந்த வசதி வாய்ப்போடு நிதி ஒதுக்கியிருப்பார் களென்பதை அறிய முடிகிறதல்லவா ?—அத்தகு சிறப்பு மிகக் கொண்டு பேரறிஞர் அண்ணாவின் நிதி நிலை அறிக்கை காட்சி தந்தது. முன்னாள் முதல்வர் பக்தவத்வலம் கூட பேரறிஞரின் பட் ஜெட்டை பல படப் புகழ்ந்தார். ஏற்கனவே இடைக்கால நிதி நிலையைக் கண்டு வாயடைத்துப் போனவர்களின் திரு வாய் களெல்லாம் மேலும் இப்போது இந்த நிதி நிலை அறிக்கையைக் கண்டு மிக மிக பல மாக அடைத்துப் போயிற்று நிதி நிலை அறிக்கையின் தயாரிப்பைக் கண்டு பொருளாதார நிபுணர் கள் அசந்து போயிருந்த நேரத்தில்—வீண் வம்புக்காக எதை யாவது கூறவேண்டுமென்று நினைத்த பரிதாபத்திற்குரிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது விபரீதமான கருத்துக்களை முன்வைத்தனர்.

விவாதத்தைத் துவங்கிவைத்துப் பேசிய காங்கிரஸ் உறுப் பினர் மார்ட்டின்... "முதலமைச்சர் பட்ஜெட்டை 2 மணி நேரம் படித்தார், தொண்டைக்கரகரப்பைப் போக்கிக் கொள்ள தண்ணீர் குடித்தார்" என்று பேசியபோது,. எதிர்க்

கட்சித் தலைவரான கருத்திருமன் எழுந்து 'தண்ணீர் குடித்தது'' சம்பந்தமாக தனது கட்சி உறுப்பினர் பேசியதை சட்ட சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி கேட்டுக் கொண்டார். முதலமைச்சர் அண்ணா அவர்கள் எழுந்து, 'உறுப்பினர்கள் எப்படிப் பேசுகிறார்களென்பதை மக்கள் தெரிந்து கொள்ளட்டுமே' என்றார். சட்டமன்றத்தலைவர் சி. பா. ஆதித்தனார் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு உறுப்பினரையும் குறிப்பிடாமல், மிகவும் கண்ணியமான முறையில் பேச வேண்டும் என நமது விதிகள் தெளிவாக இருக்கின்றன. அதைப் பின்பற்றும் படி கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இவ்வளவு கீழ் நிலையிலிருந்துதான் ஆளவந்திருப்பவர்களை விமர்சிக்க நினைத்தனர். பட்ஜெட்டின் நோக்கத்தை எடுத்து அலசி ஆராயாது அண்ணா ' தண்ணீர் குடித்தார் ' என்பதைப் பிரபலப்படுத்த முயற்சித்தார். பேரறிஞர் அண்ணா பாட்டாளிகளின் தலைவர், அரைப் பட்டினிகளின் முன்னோடி வரண்ட நாவிற்கு தண்ணீரைத்தானே குடிக்க முடியும்... அவர்களைப் போல எதை எதையோ குடித்திட கோடீஸ்வர பிரபுக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லவே இப்படி காங்கிரஸ் உறுப்பினர் பேசியது தவறுதானென்பதை அவர்களது கட்சித் தலைவரே எழுந்து ' அந்தவரிகளை நீக்கி விடுங்கள் ' என்று கூறியதிலிருந்து தெளிய முடியும். ஆயினும் பேரறிஞர் கூறியதை நினைக்க நினைக்க பிரமிப்படைந்து விடுகிறோம். ' அவர்கள் எப்படிப் பேசுகிறார்களென்பதை மக்கள் தெரிந்து கொள்ளட்டும்' என்று அடக்கத்துக்கு இலக்கணமாக இருந்து பேரறிஞர் பேசினார். எத்தகைய மேம்பாடு நிறைந்த போக்கு. கோடான கோடி இதயங்களிலே பூஜிக்கும் தெய்வமாகக் குடி புகுந்திருக்கும் அண்ணாவினை அந்தப் பண்பை மறந்தவர்கள் ஆகாதன கூறி பேசுவதைக் கேட்டும் நமது அண்ணன் மறக் குல மன்னன் சிந்தை நொந்து கொள்ளவில்லை. அவர்களை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட அவர்கள் உதிர்த்

திடும் பொன்மொழிகளே போதுமென்று கருதி அமைதியோடு புன்னகை புரிந்தார்,

தொடர்ந்து நடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது, கழக நண்பர் ஆசைத் தம்பி பேசும்போது... " காங்கிரஸ் கட்சி கடந்த தேர்தலில் தோற்றதற்கு ஒரு காரணம் பண்பாட்டுக் குறைவான பேச்சுக்களாகும். அத்தகைய முறையிலே இன்னும் காங்கிரஸ் காரர்கள் பேசுவார்களானால் இந்தக் கோட்டையிலிருந்தே அகற்றப் படுவார்கள்—மக்களால். புதிய அரசு ஏற்பட்டு 3 மாதங்கள் தான் ஆகியிருக்கின்றன. இந்த 3 மாதத்தில் நல்ல பெரிய மாறுதல்கள் இருக்கின்றன. 3 மாதத்திற்கு முன்பு ஒருபடி அரிசி 3 ரூபாய் வரை விற்றது, அதற்கும் அலையவேண்டி இருந்தது. ஆனால் இன்று அத்தகைய நிலை இல்லை. எல்லா இடங்களிலும் அரிசி அதனை விடக் குறைவான விலைக்குத் தாராளமாகக் கிடைக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடன் எங்கே ஒருபடி அரிசி என்று கேட்டார்கள். போடமுடியும் என்பதை அவர்கள் உணரவில்லை. சென்னையிலும், கோவையிலும் முதலில் ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடுவோம் என்று அண்ணா கோவையில் கூறினார். போடுவோம் என்று தெரிந்தவுடன் 2 நகரங்களில் தானா என்று கேட்டார்கள் இது பழைய சர்க்கார் செய்த பாவம்; பழைய சர்க்கார் சென்னையிலும், கோவையிலும் தான் சட்ட பூர்வமான ரேஷன் கொண்டுவந்தது.

இன்று ரயில் கட்டணம் மத்திய சர்க்காரால் உயர்த்தப் பட்டிருக்கிறது ஆனால், தமிழக அரசாங்கம் பஸ் கட்டணத்தைக் குறைத்திருக்கிறது. கிராமப்புறப் பகுதிகளிலும், பஸ் கட்டணத்தைக் குறைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும் போது மத்திய அரசாங்கம் பெட்ரோல் விலையைஉயர்த்துகிறது. விளைவாசியை உயர்த்துவது யார் ? ரயில்வே நிலைய ஓட்டல்களில் 1-15 ரூபாயாக இருந்த சாப்பாடு விலை 1-86

ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆனால், சென்னை நகர ஓட்டல்களில் 80-காசுக்கு சாப்பாடுபோட மதியழகன் ஏற்பாடு செய்திருக்கிறார். உண்மையிலேயே காங்கிரஸ்காரர்கள் விலைவாசி உயர்வை கண்டிப்பார்களானால். மத்திய அரசாங்கத்திற்கு ஒரு மாத நோட்டிஸ் கொடுத்து, அதற்குள் ரயில்வே ஓட்டல் சாப்பாட்டைக் குறைக்க வில்லையென்றால் போராட்டம் நடத்துவோம் என்று அறிவியுங்கள் (கை தட்டல்) இல்லையென்றால் ரயில்வே ஓட்டல்களை மாநில அரசாங்கத்திடம் விடச் சொல்லுங்கள் 80 காசுக்கு சாப்பாடு போடுகிறோம்.'' என்று குறிப்பிட்டார். தோழர் ஆசைத் தம்பி விலைவாசி உயர்வைத் தடுக்க தமிழக அரசு முயற்சிகள் எடுத்து வரும்போது, மத்திய அரசினர் விலை உயர்வை ஏற்படுத்தி வரும் நிகழ்ச்சியை சட்டமன்றத்திலே எடுத்துக் காட்டியதைப் போலத்தான் நாடாளுமன்றத்திலே நண்பர் ராசாராம் முழக்கமிட்டார். அவர் பேசுகின்றபோது..., ' உங்களுக்கு ஒரு செய்தி சொல்லுவேன் எங்கள் மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செலுத்துகின்றது. கடந்த காலங்களில் எதிர்க்கட்சியினர் அயல் நாடுகளை உதாரணத்திற்குக் காட்டுவார்கள். நான் மாநிலத்துக்கும் மத்திய ஆட்சிக்குமிடையே அமைந்துள்ள உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன். எங்கள் மாநிலத்தில் ஆளுங்கட்சியான தி. மு. க. போக்கு வரத்துத், துறை அமைச்சரான கருணாநிதி என்பாரைக் கொண்டுள்ளது. அவரை நாங்களெல்லாம் கலைஞர் கருணாநிதி என்போம். அவர் பஸ் கட்டணத்தை மைலுக்கு ஒரு காசு வீதம் குறைத்துள்ளார். ஏப்ரல் மாதம் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார், கட்டணக் குறைப்புக்குப் பிறகு பஸ் போக்கு வரத்து நிறைய லாபம் தேடியுள்ளது. ஒரு புறம் காங்கிரஸ் அல்லாத அரசுகள் விலையேற்றத்தை தடுத்து விலைகளைக் குறைக்க முயன்று வருகின்றன. கட்டணங்களைக் குறைப்பதன் மூலம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உதவ முயற்சி

எடுத்து வருகின்றன. மற்ருெரு புறம் மத்திய அரசின் பொறுப்பிலுள்ள ரயில்வேயானது 3-வது திட்ட கால முழுவதும் தொடர்ந்து நான்காவது திட்ட ஆண்டிலும் பண வீக்கம் அதிகரிக்கும் அளவுக்கு கட்டணங்களை உயர்த்திக் கொண்டே போகிறது. ஏற்கனவே விஷம் போல் ஏறியுள்ள விலைவாசிகளை இந்தக் கட்டண உயர்வுகள் மேலும் உந்தி விடும். இதனுல் சாதாரண ஏழை எளிய மக்கள் துன்பப்படுவர்'' என்று விளக்கினுர். டில்லி மூலவர்களின் முன்னே நமது சாதனையைக் காட்டி 20 வருட அனுபவம் பெற்ற உங்களுக்கு நாங்கள் வழிகாட்ட வேண்டியிருக்கிறதே யென்று தோழர் ராசாராம் இடித்துக் கூறுகின்ற முறையிலே அவரது உரை அமைந்தது.

கடல் அலைகளுக்குத் தப்பி கரையோரம் வந்து சேர்ந்தவர்களைப் போல மக்களின் கோபாவேச அலைகளுக்குத் தப்பிய அந்த மூன்று பேர் நாடாளு மன்றத்திலே தென்னகத்தின் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்து ஒருவரை மற்றவர் பார்த்துப் பார்த்து விழித்துக் கொண்டனர். நமக்கிருந்த இடத்தைத் தான் குறைத்தனர். கொஞ்ச நஞ்சம் விட்டு வைத்திருக்கும் புதுமையும் குறைத்துத் தீர்த்து நம்மை தலைய குனியவைத்து விடுவார்களென்று முழு மனதுடன் நம்பிக் கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கை வீண்போகாத முறையிலே தமிழகத்திலே காட்சிகள் உருவாகின...',

தமிழக சட்டமன்ற விவாதத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் உறுப்பினர் மகாதேவன் படி அரிசித் திட்டத்தை வரவேற்றதோடு, பஸ் போக்குவரத்தை தேசீய மயமாக்கு வதையும் ஆதரித்தார். 75 மைல்களுக்கு மேல் செல்லும் பஸ் ரூட்டுகளை தேசீய மயம் என்பதற்குப் பதிலாக எல்லா பஸ் ரூட்டுகளையும் தேசீய மயமாக்கி இருக்கலாம் என்றும் குறிப்பிட்டார். இத்தோடு மகாதேவன் நிறுத்திக்கொண்டால் புகுந்த இடத்தின் பெருமையை எப்படி நிலை நாட்ட முடியும் எனவே

...தன்னையும் மறந்து தட்டிக் கொடுப்பதை நிறுத்தி...ஓங்கி பலமாக குத்தினர்.

'இது வரை தி. மு. கழத்தில் இல்லாதவர்கள் அவர்கள். தி. மு. கழகத் தொண்டர்கள் அல்ல. கருப்பு சிவப்பு துண்டு போட்டிருக்கிற 'துண்டர்கள் குளங்களில் போய் விவசாயம் செய்யப் போகிறார்கள். 5 ஏக்கரா 10 ஏக்கராவுள்ள குளங் களிலுள்ள மடைகளை உடைத்து உற்பத்தியைப் பெருக்க போயிருக்கிறார்கள். இதனைப் பார்க்கும்போது, இந்தச் சீரணி யினர் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு போய் எப்படிச் செயல் படுவார்கள் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக பார்த்து வெட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'

காங்கிரஸ் உறுப்பினர் மகாதேவன் தான் இப்படிப் பேசினர் சட்ட மன்றத்திலே தொண்டர்கள் அல்ல— துண்டர்களாம்... நல்ல வேளை குண்டர்கள் என்று குறிப் பிடாதது கவனிக்கத்தக்க தாகும். அது தான் அவர் களுடைய ஏக--போக மான பட்டய மாயிற்றே ? அதனல் தான் அதைப் புகுத்த மறந்தார்கள், 'குளங்களில் போய் விவ சாயம் செய்யப் போகிறார்கள்'...கூறுவது வேறு யாருமல்ல

சங்கிலியை அறுத்துக் கொண்டு வந்தவர்களல்ல . . .காங் கிரஸ் உறுப்பினர் தான் அப்படி பேசினர். அதி மேதாவித் தனம் படைத்து 'குளங்களில் விவசாயம் செய்வார்களென்று பேச முடிகிறதென்றல் எந்த அளவுக்கு சட்ட மன்ற விதி களைக் கடைப் பிடிக்கிறார்களென்பதற்கு எடுத்துக் காட்டாகும்,

சாதாரண உறுப்பினர் மட்டும் இந்த வழி முறைகளைக் கடைப்பிடித்திட வில்லை. எதிர் கட்சித் தலைவரான கருத் திருமன் கூட இதே வழி வகையிலேதான் 'பட்ஜெட், பற்றி விமரிசிக்க முன் வந்தார். எந்த நிதி நிலை அறிக்கையை

மக்களின் உள்ளத்தைப் பிரதிபலிப்பதாயிருக்கிற தென்று காங் கிரஸ் அன்பர்களே வெளியே பாராட்டிக் கொண்டிருந்தார் களோ அதே நிதி நிலை அறிக்கையைத் தான் விவாதத்தின் போது ஆகாதன கூறி கீழ் மட்டத்திற்குரிய மதிப்பீட்டைத் தந்தனர். தமிழக பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட அன்று பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்கள் சேலத்திற்கு புகை வண்டியில் சென்றார்கள். புகை வண்டி நிலையத்தில் கலைஞரைச் சந்தித்த காங்கிரஸ் அன்பர் ஒருவர் 'தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்தைப் பிரதி பலிக்கும் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்துள்ளீர்கள்' என்று பாராட்டினார். சாதாரண மட்டத்திலேயே இத்தகைய பாராட்டுக் கிளம்ப முடிகிற தென்றால் மேல் மட்டத்திலிருப்பபதாக நாமெல்லாம் நம்பிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் எந்த அளவிலே உள்ளத்தைத் திறந்து பாராட்டி யிருக்க வேண்டும்? அதை விடுத்து புதிய குற்றச் சாட்டோடு தமது விவாதத்தைத் துவக்கினார். 'பட்ஜெட் ரகசியத்தை வெளியிட்ட காரணத்தால் மந்திரி மதியழகன் தம்முடைய பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று சட்ட மன்றத் திலே கோரிக்கை வெளியிட்டார் எதிர்க்கட்சித் தலைவர். அவர் தொடர்ந்து வலியுறுத்தும்போது, 'மதுரையில் உண வமைச்சர் மதியழகன்' வியாபாரிகளின் கோரிக்கையான விற்பனை வரி வரம்பை உயர்த்துவது குறித்து அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இது பற்றி பட்ஜெட் வரையில் அறி விக்கப்படும் என்று: கூறியிருக்கிறார். இந்தச் செய்தி இந்து பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. அவர் அப்படிச் சொன்னது போலவே விற்பனை வரி வரம்பு உயர்த்தப்பட்டி ருக்கிறது. இது பட்ஜெட் ரகசியம் இதை முன் கூட்டியே வெளியிட்டதன் மூலம் பட்ஜெட். ரகசியத்தை சபைக்கு அறிவிப்பதற்கு முன்னதாக வெளியிட்டு விட்டார் என்று குறிப்பிட்டு சபை ஒத்திவைப்பு அவசர தீர்மானம் கொண்டு வந்தார்.

மாண்புமிகு உணவமைச்சர் மதியழகன் இதற்கு பதிலளித்து பேசிய போது 'இந்த மன்றத்தின் பாரம் பரியமும் மரபும் காப்பாற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் கூறினர். இதில் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இதில் நான் எவருக்கும் பின் வாங்கிய வன் அல் ல. பட்ஜெட் ரகசியம் என்பது உயிரினும் இனி தாகக் காக்கப் பட வேண்டும் என்பதை அறிவேன். அதை நான் வெளியிட்டு விட்டதாகவும் அதற்காக நான் ராஜினமா செய்ய வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் கோரினர். ராஜினமா செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுமாறல், இந்த மாமன்றம் அப்படி தீர்மானிக்கு மாறல், அதற்கு நான் தலைவணங்கி அந்த பாரம் பரியம் காக்கப்படுவதற்காக என்னை நானே அர்ப்பணித்துக் கொள்ள தயங்கமாட்டேன். இந்த ஜீவாதார, உரிமை காப்பாற்ற படுவதற்காக என்னை அர்ப்பணித்துக் கொள்வது நாள் ஆற்றும் பணி கடமை என்று கருதுவேன்' ஆனல் எதிர் கட்சி தலைவர் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிருர். இதை ஒரு உரி மைப் பிரச்சினையாக உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டும் என்று கோர முடியாத ஒரு சங்கடமான நிலையில் சபை ஒத்திவைப்பு அவசரத் தீர்மானத்தைக் கடைசி ஆயுதமாகக் கொண்டு வந்திருக்கிருர். மன்ற உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் நான் கூறிய தாக பத்திரிகையில் வந்தது கொஞ்சங்கூட சம்பந்தம் இல்லாத நிகழ்ச்சியை கூறுகிருர். அந்த பத்திரிகையில் வந்த செய்தி நான் மதுரையில் பேசியதன் முழுவிபரமும் அல்ல. நான் பேசியதற்கு முற்றிலும் நேர்மாருன விஷயத்தை வெளியிட்டிருக்கிருர்கள். மதுரை—ராமநாதபுரம் வர்த்தக சபையில் பேசினேன். அப்போது வியாபாரிகள் விற்பனை வரி வரம்பை உயர்த்த வேண்டும், சிறு வியாபாரிகளுக்கு வசதி செய்யும் வகையில் இந்த வரம்பு உயர்த்தப்பட வேண்டும் என்று கோரினர்கள். நாங்கள் (தி. மு. க) எதிர்க்கட்சியாக இருந்த

போது இதே மன்றத்தில் அதை கோரியிருக்கிறோம். வியாபாரிகளின் அந்தக் கோரிக்கைக்கு ஏற்பு உடையவர்கள் மேலும் தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையை தி. மு. க ஆட்சியைக் கைப்பற்றினால் இந்த வரம்பை மாற்றுவோம் என்று பிரகடனப்படுத்தியுள்ளோம். ஆகவே கொள்கை அளவில் வியபாரிகள் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக எந்த அளவு இருக்கும். என்பது பட்ஜெட்டில் அறிவிக்கப்படும் என்று சொன்னேன். அத்துடன் மட்டு அல்ல சிறு வியாரிகளுக்கு சலுகை கொடுக்க வேண்டும் அப்படிப்பட்ட சலுகை வியாபாரிகள் மன நிறைவு பெறும் வண்ணம் அமையும் என்றேன். இந்த கொள்கையை நான் பேசினேனே தவிர பட்ஜெட் ரகசியத்தை நான் வெளியிடவில்லை.' 'என்று தெளிவாகக் குறிப்பிட்டு நண்பர் கருத்திருமனின் ஆகாத கருத்தை அம்பலப் படுத்தினர்.

இரு தரப்பு விவாதத்தையும் கேட்ட பிறகு சட்ட மன்றத் தலைவர், 'அமைச்சர் சொன்னது கொள்கை விளக்கமே தவிர பட்ஜெட்டில் உள்ள புள்ளி விபரத்தை அவர் வெளியிடவில்லை வருமான வரம்பு இவ்வளவு ரூபாயாக உயர்த்தப் படும் என்று அவர் சொல்லியிருந்தால் அதை பட்ஜெட் ரகசியம் என்று கொள்ள முடியும். அமைச்சர் சொன்னது கொள்கை விளக்கமே தவிர பட்ஜெட் ரகசியம் அல்ல, எப்படியும் சபாநாயகருக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன் படுத்தி அதற்குள் அடங்குமா என்று பார்த்தால் அதற்கும் இடமில்லை. ஆகவே அனுமதி மறுக்கிறேன் என்று அறிவித்தார்.

எதையாவது கற்பனை செய்து குற்றம் சுமத்தி கரி பூசிவிடலாமென்றுதான் கனவு கண்டனர் காங்கிரஸ் உறுப்பினர்கள். தெளிந்த உண்மைகளை அவர்களெல்லாம் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கு உதவித் துகை வழங்கும் திட்டம் ஒன்று 1966 அக்டோபர் மாதம் கொண்டுவரப் பட்டது. அந்த உதவித் துகை அதற்கென வகுக்கப்பட்ட விதிமுறைகளுக் கேற்ப வழங்க ஏற்பாடாகியது. அந்தத் திட்டத்தின் கீழ் உதவி கோரி 1967-மார்ச் மாதம் 15 ந் தேதிவரை 5206 மனுக்கள் வந்தன. அதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு மார்ச் 15 ந் தேதி வரை கலெக்டர்களிடம் முடிவு செய்யப் படாமல் 4281 மனுக்கள் உள்ளன. 872 மனுக்கள் குறித்து அறிக்கைகள் பெறப் பட்டன. மார்ச் 21 ந் தேதிவரை 95 பேருக்கு உதவித்துகை வழங்கப் பட்டது. 225 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டன. நெல்லை மாவட்டத்தில்... மணியாச்சி சந்திப்பில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்த ஆஷ் துரையைத் தன்னந்தனியனாகச் சென்று சுட்டு வீழ்த்தினான் வாஞ்சி என்ற இளைஞன். வெறிபிடித்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை இங்கிருந்து ஆயுத பலத்தால் விரட்டியடிக்க வேண்டுமென்ற விடுதலை வேட்கை கொண்டு இளைஞன் வாஞ்சி ஏகாதிபத்தியத்தின் தூதுவனாக இருந்த ஆஷ் துரையை மணியாச்சி சந்திப்பிலே சந்தித்து சுட்டு வீழ்த்தினான். வெடிச்சத்தம் கேட்ட போலீஸ் வீரர்கள் அங்கு மிங்குமாகப் பறந்து ஓடிக் கொண்டிருந்த வாஞ்சியைத் துரத்திச் சென்றனர். மின்னலைப் போல் மறைந்த வாஞ்சி ரயில் நிலையத்தின் ஒரு மூலையிலிருந்த சிறு நீர் கழித்திடும் அறைக்குள் நுழைந்து கொண்டான். விடாப் பிடியாகத் துரத்தி வந்த போலீசார் அறையின் கதவைத் திறந்து பார்த்தபோது... தன்னைத்தானே சுட்டுக் கொண்டு சாய்ந்து கிடந்த வாஞ்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். கடைசி நேரத்தில் நாட்டுக்கு அவன் செய்ய வேண்டிய காரியத்தை செய்து முடித்த திருப்தியோடு அவனது மூச்சு அடங்கிப் போயிருந்தது. தனக்குப் பின்னே சுற்றமிருக்கிறது—சுகமிருக் கிறதென்று எண்ணிப் பார்த்திட

வில்லை அவன். தனக்கு முன்னே அவனுக்குத் தெரிந்த தெல்லாம் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஜபர்தஸ்துகள்தான். எனவே... அவனது திருமுகத்துக்காகக் காத்துக் கிடந்த மனைவியை நினைக்க வில்லை...மற்றவர்களை நினைக்க வில்லை. அந்த மறக்குல மாணிக்கம் மறைந்து விட்டான். ஆனால் அவனது வாழ்க்கைக்குத் துணையாக வந்தவள் வறுமையின் புகலிடத்திலே வாழ்ந்தாள். சுதந்திர பாரதம் விடுதலைப் போராட்டத்தில் டங்கு கொண்டவர்களுக்கு உதவித் துகை வழங்கும் திட்டத்தை அறிந்து 'பென்ஷன்' கோரி மனுவை அனுப்பியிருந்தார் அந்த அம்மையார். காங்கிரஸ் அரசாங்கம் அந்த மனுவை ஆராய்ந்து... வாஞ்சியின் தற்கொலை தியாகமா? என்ற சந்தேகத்தில் விட்டுவிட்டது. ஆனால் தமிழக அரசின் முதல்வர் பேரறிஞர் அண்ணா' வாஞ்சி நாதர் உயிரைப் போக்கிக் கொண்டதன் உள் நோக்கம் சுதந்திர வேட்கை என்று கருதி 'பென்ஷன்' கொடுக்க உத்திர விட்டார், காங்கிரஸ் அரசு செய்ய மறுத்ததை கழக அரசு சீரிய முறையில் செய்து முடித்து, உதவித்துகை வரும் சேதியை அறிந்த பிறகு கழக ஆட்சிதனை வாழ்த்திக் கொண்டே அந்த அம்மையார் கண்களை மூடிக் கொண்டார்.

தியாக பரம்பரை யினருக்கு அவர்கள் செய்ய வேண்டிய திருப்பணிகளை செய்திட மறந்தனர்—மறுத்தனர். இதை முன்கர மெடுத்து தமிழக அரசு சாதித்தது. எத்தனையோ வகையிலே பற்றுக் குறையிருந்து விடுதலைப் போருக்கு உயிரைக் காணிக்கையாகத் தந்த மறக்குல மாணிக்கங்களுக்கு உதவிடுவதிலே அரசு பின்வாங்கி விடவில்லை. இதற்காக எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் ஒரு நன்றிப் புன்னகை கூட செய்திட வில்லை என்பது கவனத்திற்குரிய தாகும்.

சட்டமன்ற விவாதத்தின் போது கழகத் தோழர் முனு ஆதி, "வைக்கம் வீரர் பெரியாருக்கு தியாகிகள் மான்யம்.

பென்ஷன் ஏதும் தமிழக அரசு அளிக்குமா '' என்று கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் "பெரியாருக்கு தியாகிகள் மான்யமோ, பென்ஷனோ இந்த அரசு தரவேண்டுவதில்லை. இந்த அமைச்சரவையையே அவருக்குக் கொடுத்திருக்கிறோமே !'' என்று குறிப்பிட்டார்கள். இந்தச் சேதியை தோழர் வீரமணி தந்தை பெரியாருக்கு மருத்துவமனையில் கூறியவுடன் அதைக் கேட்ட தந்தை பெரியார் அவர்கள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து சிரித்துக் கொண்டே, 'இந்த அன்பான சேதியினால் எனக்கு தொல்லை அதிகம் ஏற்படலாம் என்ற போதிலும் எனக்கு பெருமளவுக்கு வலியை இது குறைத்து விட்டது' என்று மகிழ்ந்து குறிப்பிட்டார். இத்தகைய ரத்தப்பாசம் நிறைந்த பேச்சை தந்தை அவர்களைப் போன்றவர்களிடந்தான் எதிர்ப் பார்த்திட முடியுமென்பதை மெய்ப்பித்துக் காட்டினார், பகையைக் கக்கிய காங்கிரஸ் நண்பர்களிடம் கோப அனலைத் தான் காண முடிந்தது. உயர் எண்ணங்கள் மலர்ந்திடும் பூஞ்சோலையிடம் நாம் அனுபவிக்க முடிந்த நல்ல மணம்... இங்கே கிடைக்கவில்லை. தங்களது பாரம்பரியத்துக்கு நல்ல வழி வகையைக் காட்டியும் நம்மைப் பாராட்டுகின்ற நெருக்கத்திற்கு காங்கிரஸ் அன்பர்கள் வந்து தீரவில்லை. நீண்டு தொடர வேண்டிய முன்னேற்றப் பயணத்துக்கு அவர்களாகவே எல்லைக்கல் போட்டுக்கொண்டனர். அதே திங்களில் வெளியாகிய டில்லி பட்ஜெட் எத்தகைய விமரிசனத்தைப் பெற்றதென்பது நாடறிந்த உண்மையாகும். வடக்கத்தியர்களால் அசகாய சூரத்தனம் நிறைந்த பொருளாதாரப் புலியென்று விளம்பரப் படுத்தப்பட்ட திரு மொரார்ஜி தேசாய் சமர்ப்பித்த பட்ஜெட்டைப் பற்றி தேசீய நாளிதழாம் மித்திரன் டில்லி நிருபர்...'' காலையும் கையையும் கட்டி ஓர் ஆளைக் கிணற்றில் தூக்கிப் போட்டு நீச்சலடி யென்றால் என்ன செய்வான் ? கட்டப் பாறை நீச்சல் தான் அடிப்பான். மொரார்ஜி தேசாய் சமர்ப்பித்த பட்ஜெட்டும் இந்த மாதிரி தானிருக்கிறது

பாழுங்கிணற்றிலிட்ட இந்தப் பொருளாதாரத்தில் மூச்சுப் பிடித்துக் கொண்டு மிதப்பது எப்படி என்பதை மொரார்ஜி காட்டியுள்ளார். பட்ஜெட்டின் உடனடியான விளைவு மத்திய தர எளிய வகுப்பினரின் வாழ்க்கைச் செலவு 5 சதவீதம் அதிகரித்து விடும். மற்றபடி சலுகைகள் ஒன்றும் கிடையாது' ஆனால் இத்தோடாவது விட்டாரே என்று திருப்திபடலாம் ஏனெனில் மொரார்ஜியின் பட்ஜெட் பலவிதங்களில் கொடூரமாகயிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சம்பள உயர்வுக்குத் தடை போன்ற தீவிர நடவடிக்கைகள் கூட எதிர். பார்க்கப்பட்டன. தேசத்தின் பொருளாதார நிலை இத்தீவிர நடவடிக்கைகளால் தான் சீர்படும் என்று கருதப்பட்டது. இந்தப் பொருளாதார சீரழிவை ஆரம்பித்து வைத்தவரே மொராரஜிதான் 1963 ல் கண்மூடித்தனமான வரிகளை மக்கள் தலையில் சுமத்தியதால் நேருவின் அரசாங்கத்தை யாவரும் சபிக்கத் தொடங்கினார்கள். இதைக் கண்ட நேரு காமராசர் திட்டத்தின் கீழ் மொரார்ஜியை அந்த வருடமே வெளியேற்றினார். அப்போது ஏற்பட்ட பொருளாதார மந்தம் இன்னும் நீங்கிய பாடில்லை. தொழில் நிறுவனங்களில் சுறுசுறுப் பில்லை. லாபம் குறைந்து கொண்டே வந்தது. இதனிடையில் நாட்டில் விலைவாசி ஏறிக் கொண்டே போயிற்று. இந்தக் கேவலமான பொருளாதார நிலைமைதான் காங்கிரஸ் ஆட்சி பல ராஜ்ஜியங்களில் கவிழ்ந்ததற்குக் காரணமாக இருந்தது. மொரார்ஜி ஆரம்பித்து வைத்த பொருளாதார சீர்க்கேட்டை அவரே நிவர்த்தி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

''காப்பி, டி, சிகரெட் விலை ஏற்றத்தை விட முக்கியமான விஷயம் திட்டம் வெட்டப்படுவது தான். சென்ற ஆண்டு 2080 கோடி ரூபாய் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டும் அதே அளவுத்துகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக முதலாண்டை விட இரண்டாவது ஆண்டுத்

திட்டத்தின் 25 சதவிகிதமாவது அதிகம் முதலீடு செய்யப் படும். பட்ஜெட்டில் திட்டச் செலவினங்கள் அதிகமாக்கப் பட்டதன் விளைவாக புதிய பெரிய திட்டங்கள் இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப் படமாட்டா. கல்பாக்கம் அணுமின் திட்டம், தூத்துக்குடி துறை முகத்திட்டம் போன்ற மத்திய அரசு அமுலாக்க வேண்டிய திட்டங்கள் தள்ளிப் போய் விடும். பொகாரோவுக்கு மட்டும் பட்ஜெட்டில் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மேல் கைவைத்தால் ரஷ்யர் கள் 'கோபித்துக் கொள்வார்களோ என்ற அச்சம்தான் இறு கிப்பிடித்தாவது கணிசமான தொகை பொகாரா உருக்காலை வேலைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம். இல்லா விட்டால் இப்போதுள்ள பொருளாதார நிலையில் பொகாரா போன்ற மகாசுரத் திட்டங்களுக்கு இடமேஇல்லை.'' என்று விமரிசித்தார். மத்திய தர எளிய வகுப்பினருக்கு சலுகைகள் அளித்திடும் திட்டம் எதுவுமில்லையென்று மித்திரன் நிருபர் சுட்டிக் காட்டியது கவனிக்கத் தக்கதாகும். இதேபோது தமிழக அரசு எத்தகைய உயர்ந்த உள்ளத்தோடு அன்றாட வாழ்விற்குப் போராடுகின்ற அபாக்கிய வான்களுக்கு வழி வகை செய்தனர் என்பது அவன் அறிந்த சேதியாகும். இப்படி பட்ட தலை நிமிர்ந்திட முடியாத நிலையில் மேலிட பட்ஜெட் டைத் தயாரித்தவர்களின் திருத்தொண்டர்கள் தான் இங்கே பேரறிஞர் அண்ணாவின் 'பட்ஜெட்' பற்றி விவாதித்த போது ...'' இந்தச் சீரணியினர் மண் வெட்டியை எடுத்துக்கொண்டு போய் எப்படிச் செயல்படுவார்களென்று பார்க்க வேண்டியி ருக்கிறது. குறிப்பாக காங்கிரஸ் காரர்களின் வாழைத் தோட் டங்களாகப் பார்த்து, வெட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று பேசி மகிழ்ந்தனர். காங்கிரஸ் உறுப் பினர் மகாதேவன் ஏன் அவ்வளவு சிரத்தையுடன் சட்ட மன்றத்திலே வாழைத் தோட்டம் பற்றி அங்கலாய்த்துக் கொண்டாரென்றால் அதற்கும் காரணமில்லாமலில்லை. சூட் சமாக பேசியதிலே ஏதோ அராஜகத்தை விளக்கி விட்ட

தாக கற்பனை செய்து கொண்டார். உண்மையிலேயே அவர் அப்படிக் கூறியதன் உள் அர்த்தம் சரசுவதி பாண்டுரங்கத்தின் வீட்டு வாழைத் தோட்டம் பற்றித்தான். இந்த வாழைத் தோட்டம் பற்றிய புகாருக்கு நமது பொதுப்பணி அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தக்க முறையிலே பதிலளித்தார்கள்.

..."யாரோ காங்கிரஸ்காரர் சரசுவதி பாண்டுரங்கம் வீட்டு வாழைத் தோட்டத்தில் தி. மு. கழக எம். எல். ஏ. தலைமையில் கோஷ்டியாகச் சென்று அட்டூழியம் செய்தார்கள். என்று பேசியிருக்கிறார். உடனே இதுவரை பேசாமலிருந்த காமராசர் எழுந்து 'அந்த எம். எல் ஏ மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் மரியாதை கெட்டுவிடும்' என்று பேசியிருக்கிறார். எது மரியாதையைக் குறைக்கும். என்று யோசித்துப் பேச வேண்டும். பேசாமலிருந்த காமராசர் பேசிவிட்டாராம். உடனே கூட்டத்தில் மகிழ்ச்சி ஆரவாரமாம். ஒரு அன்பான கணவனுக்கும் - மனைவிக்கும் குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தையால் பேச முடியவில்லை குழந்தை பேசுவதற்குத் தேடாத வைத்தியமில்லை. செய்யாத மருத்துவமில்லை. கடைசியில் நல்ல வைத்தியர் சிகிட்சை செய்தார். குழந்தை எப்போது பேசப் போகிறதென்று எல்லோரும் சுற்றிவர பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தாய் 'கண்ணே பேசு! மணியே பேசு! என்று கூறிக் கொண்டிருந்தாள். குழந்தையின் உதடு அசைந்தது. பேசவும் ஆரம்பித்தது எப்படி? 'அம்மா நீ எப்போது தாலி அறுப்பாய்' என்று கூறியது. அதுபோலத் தான் காமராசரும் பேசியிருக்கிறார்.

" நாம் எல்லோரும் மதிக்கும் தலைவர் காமராசர். அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் கட்சிக்காக தியாகத்தை செய்தவர் எதிர்க் கட்சி மீது பழிசுமத்தும் எண்ணத்தோடு யாரோ பேசினார்... அதற்கு அந்த சம்பவம் நடந்திருந்தால்

அந்த எம். எல். ஏ. மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ருர். அதை நான் பாராட்டுகிறேன். அது அவர் எங்களுக்கும் இடும் ஆணையாக இருந்தாலும் சரி, பாராட்டுவேன். ஆனல் அடுத்த வார்த்தையில் 'நடவடிக்கை எடுக்காவிட்டால் தி. மு. க ஆட்சி மரியாதை கெட்டுவிடும்' என்று சொல்லியிருக்கிருர். அது பற்றிக் கவலையில்லை.

"'நடந்தது என்ன' என்று போலீஸ் அதிகாரியிடம் விசாரித்தேன். அதன்படி வந்து தகவல்களைக் கூறுகிறேன். நான் காமராசரைப் போல அவசரப் பட்டு கூறவில்லை. சரசு பாண்டு ரங்கத்துக்கு பழைய காங்கிரஸ் அரசாங்கம் கொஞ்சம் நிலத்தைக் கொடுத்திருக்கிறது. அதை அவர் நடராஜன் என்பவருக்கு குத்தகை விட்டிருக்கிருர், அதன் ஒரு பகுதியில் வாழை போடப் பட்டது. இதனல் வடக்குப் பகுதியிலுள்ள ஏரிக்குப் போகும் பாதை அடைபட்டு இருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ள காங்கிரஸ் சங்கம் ஒன்று அந்த வேலியை எடுக்கச் சொல்லியிருக்கிறது. அதற்கு நடராஜன் மறுத்து விட்டார். உடனே வேலியைப் பிரித்து, பாதையை விட்டு இருக்கிருர்கள். அதில் எம். எல். ஏ. கலந்து கொள்ளவில்லை. நடராஜன் புகார் கூறிய 5 பேர்களில் யாரும் தி. மு. க. வினர் அல்ல. காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் தான்."

...கலைஞர் எடுத்துக் காட்டிய இந்த உண்மைச் சம்பவத்துக்குத் தான் கற்பனை வடிவம் தந்து களங்கப்படுத்த நினைத்தனர் காங்கிரசார். இதன் காரணமாகவே தான் சட்ட மன்றம் வரையிலும் வாழைத் தோட்டம் 'பற்றி கர்ஜனை புரிந்த தோடு... அகில இந்தியத் தலைவரும் விபரம் புரியாதவராக்கப் பட்டார். எந்த நேரமும் பழைய ஆசாபாசங்களையே அவர்கள் நினைத்துக் கொண்டிருப் பதாலேயே சுய உருவத்திற்கும். சொந்தக் கருத்துக்கும் மதிப்பளிக்கும் மனவளத்தை-பலத்தை இழந்து தவிக்கின்றனர்.

தமிழக அரசின் மாட்சி பற்றி முத்தமிழ்க் காவலர் போன்றவர்கள் சிறப்பித்துப் பேசி வந்த நேரத்தில்தான் இந்த

குணக் குன்றுகள், கொள்கைவளர்க்க வந்ததாகச் சொல்லும் வைர மணிகள் மாசு கற்பித்திட இலக்கியம் தேடி வந்தனர். ஓங்கு புகழ் படைத்தவர்களை ஓட்டிட எண்ணங்களை திருப்பி யிருந்தனர். தாங்கள் தாழ்ந்து விட்டதகுதிக்கு அவர்களை யும் இறக்கிவிட வழி பிறக்குமா வென்று ஆடி ஓடித் தேடித் திரிந்தனர்.

அதுபோது தான் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. கொடைக்கானலில் நடைபெற்ற மாணவர் — இந்தி எதிர்ப்பு மாநாட்டில்..., '' தமிழ் செய்த புண்ணியம், தமிழர் செய்த புண்ணியம், தமிழன்பர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள் தமிழன் பர்கள் என்னென்ன விரும்பினார்களோ ? அவையெல்லாம் நடக் கிறது. மாணவர்கள் நடத்தும் எட்டாவது மாநாடு இதுவரை நடந்த மாநாட்டிற்கும் இதற்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. முன்பு நடந்த ஏழு மாநாடுகளும் ஆட்சியில் தமிழ்ப் பகைவர் கள் இருந்தபோது நடந்தன. இப்போது நடக்கும் மாநாடு ஆட்சியில் தமிழன்பர்கள் இருக்கும்போது நடக்கும் மாநாடு முன்பு நான் கொண்ட இருகருத்துக்களை இப்போது மாற்றிக் கொண்டேன்,

'மாணவர்கள் தான் எதிர்காலத் தலைவர் என்று பேசி வந்தேன், இதுவரை எழுதிவந்தேன். ஆனால் அந்தக் கருத்து இப்போது மாறிவிட்டது. மாணவர்கள் தான் இன்றைய அரசியல் தலைவர்கள் என்று உணர்ந்த கொண்டேன். இந்தியை எதிர்த்து முதியவர்கள் தீர்மானம் போட்டனர்; தூதுச்குழு அனுப்பினர், வாதாடினர், ஆனால் நீங்கள் அந்தப் பிரச்சினையில் தலையிட்ட பின்னர்தான் இந்தி டில்லி யிலேயே தங்கிவிட்டது.' என்று பேசி தமிழக அரசிற்கும், இந்த அரசினை கண்ணின் மணிபோன்று காத்திடும் மாணவ மணிகளுக்கும் தனது அன்பு கலந்த பாராட்டினை நல்கினார். அதே இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் பேசிய மாண்பு மிகு சட்ட அமைச்சர் மாதவன்...'நான் முதலில் உங்களுக் கொன்று கூறிக் கொள்வேன் - கடந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப்

போராட்டத்தின் போது கழகத் தலைவர்களையும்' மாணவ நண் பர்களையும் எந்த பாளையங்கோட்டை :சிறையில் அடைத் தார்களோ அந்தப் பாளையங்கோட்டை சிறைக்குத் தனி மதிப்புத் தரும் வகையில் அதைச் சீர் படுத்தி, பெரிதாக ஆக்கிட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். மாணவர் போராட்டத்தின் போது. துப்பாக்கிக்குக் பலியான மாணவர் இராஜேந்திரனின் தந்தை ஒரு மனு கொடுத்துள்ளார். அதன் மீது ராஜேந்திரன் சுடப்பட்ட சம் பவம் நீதிபதி தீர்ப்பு இவைகளைக் கொண்ட ஒரு வரலாறு வெளிவர இருக்கிறது என்பதையும் உங்களுக்குத் தெரிவித் துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்பு உணர்ச்சியுள்ள அரசாங் கம் எங்கள் கையில் இருப்பதால் இந்தி ஆதிக்கம் ஒழிந்து விடும் என்று நாங்கள் கருதவில்லை' ஆனால். •இதனால் மத் திய அரசின் குரல் மாறுகிறது. இதுதான் 67 தேர்தல் முடி வின் மகிமை நாம் பெற்றுள்ள வெற்றி.

'இந்தி எதிர்ப்பு விஷயத்யில் பக்தவத்சலம் ஆட்சி செய் தது என்ன? எத்தனை பேர்களை சுட்டுக் கொன்றார்கள். சட்ட மன்றத்திலேயே மதியழகன் சவால் விட்டுக் கூறினாரே 50 பேரை சுட்டதாகச் சொல்லுவது தவறு நூற்றுக் கணக் கானோரைக் கொன்று குவித்து இருக்கிறீர்கள். என்னோடு எங்கள் மாவட்டத்திற்கு வந்தால் காண்பிக்கிறேன் என்றார். ஆனால், அதற்கு பக்தவத்சலம் பைல்களைக் கொளுத்தி விட்டு ஒப்பாரி வைக்கிறார். வாங்கிக் கொடுத்த பிரியாணியைத் தின்று விட்டு மாணவர்கள் போராடுகிறார்கள் என்று எந்த மாணவரை அலட்சியமாகப் பேசினாரோ அந்த மாணவர் களே அவரைக் கவிழ்த்து? விட்டார்களே என்று நினைத்துப் புலம்புகிறார் ,என்று எடுத்துச் சொன்னார். மாணவர்களின் இதயக் குமுறலுக்கு—உள்ள உணர்ச்சிக்கு மதிப்பளித்திடும் மனவளம் பெற்றிட மறுத்தனர் காங்கிரஸ் பெரும் புள்ளிகள். அணைக்க முடியாத மாணவ மணிகளின் தியாக ஜுவாலைக்கு வாங்கிக் கொடுக்கும் பிரியாணியை விலையாக மதித்து

வெளியே விமரிசிக்கத்தான் அவர்களால் முடிந்தது. துப்பாக்கிக் குண்டுகளுக்கும் மார்பைக் காட்டத் தயங்காத வீர மரபினரின் இலட்சிய இதயத்திலே கேலி மொழிகளான அம்புகளைக் கொண்டு தாக்குவதிலே தான் அவர்கள் கவனம் மிகக் கொண்டிருந்தனரே தவிர — கொள்கை முழக் கழகத்துக்கும் காது கொடுக்க மறந்தனர்.

காங்கிரஸ் அன்பர்கள் முந்தியடித்து ஏறிய கப்பல் திசை மாறிவிட்டது. காலப்புயலின் விளைவால் அது தத்தளித்துக் கொண்டிருந்தது. டில்லி பட்ஜெட்டைப் பற்றி மித்திரன் நிருபர் எடுத்துக் காட்டியது இந்தத் தவிப்பைப்பற்றித்தான் எனவே தான் சேலம் இரும்பாலை, தூத்துக்குடி துறைமுகத் திட்டம் போன்ற மத்திய அரசு அமுலாக்க வேண்டிய திட்டங்கள் தள்ளிப்போய் விடும் என்று மதிப்பிட்டார்.

மதிப்பிட்டது மட்டு மல்ல, நடை முறையும் அப்படித் தான் ஆகியது. 'சேலம் இரும்பு தொழிற்சாலை 4 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்கப் பட மாட்டாது, என்று திட்டவட்டமாக மத்திய அரசின் இரும்புத் தொழில் மந்திரி பி. சி சேத்தி அறிவித்தார். சிந்தூரில் நிருபர்களிடம் அவர் பேசிய போது, 'பொருளாதார நெருக்கடி காரணமாகவும், வேறு பல காரணங்களினாலும் 5 வது --சேலம் இரும்பு தொழிற்சாலையை 4--வது ஐந்தாண்டு காலத்தில் அமைப்பதில்லை யென்று முடிவு செய்து இருக்கிறோம். அதற்குப் பதிலாக தற்போதுள்ள இரும்பு தொழிற்சாலைகளில் இரும்பு உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்யப்படும். ஏற்கனவே அமைக்கப்படும் 4 வது இரும்புத் தொழிற்சாலையை -- வட நாட்டில் பொகாரா என்ற இடத்தில் அமைக்கப்படும் தொழிற்சாலையை-- விரைவாக கட்டி முடிப்போம் 'என்று விளக்கிக் கூறினர்.

மத்திய அரசின் உதவியினால் துவக்கப்' படும் பெரிய தொழிற்சாலைகளின் மூலமாக இங்குள்ள வளத்தைப்பெருக்கி தமிழக மக்களின் வாழ்வுக்கு வகை தேடுவதற்காகத்தான்

தென்னக அரசினர் பன்னெடுங்கால மாக சேலம் இரும்பு தொழிற்சாலை--தூத்துக்குடி துறை முகத்திட்டம் போன்ற வற்றை வலியுறுத்தி வந்தனர். ஆனல் மத்திய அரசோ வட நாட்டு பொகாரா போன்ற இடங்களைத்தான் மனதால் நினைத்துக் கொள்ள முடிந்ததே தவிர தென்னகம் பற்றிய ஆக்க முயற்சியிலே ஈடு பாடு காட்டிக்கொள்ள வில்லை. 20 ஆண்டுகளாக ஆட்சி புரிந்த காங்கிரசார் 400 கோடி ரூபாய்க்கு கடனை ஏற்படுத்தி விட்டுச் சென்ருர்கள். இவ் வளவு கடனை ஏற்படுத்தியும் மக்களுக்கு நல்ல வாழ்க்கை முறையை ஏற்படுத்தித் தந்தார்களா வென்ருல்-- அதிலே வெற்றி பெறவில்லை என்றுதான் கூறமுடியும். பரிதாபத்திற் குரிய முறையிலே மக்களின் வாழ்வுப் பிரச்சினையை விட்டு விட்டு 400 கோடி ரூபாய் கடனும் வைத்தச் சென்ருர்கள். இதையெல்லாம் சரிக்கட்டும் முறையிலேதான் பெரிய பெரிய தொழிற்சாலைகளை இங்கே எழுப்பி வளத்தை--வகையைக் காணும் படி,: தமிழக அரசு பாசக் குரலிலே பேசிப் பார்த்து' எங்களுக்கு ஒத்துழைப்புத்தாருங்களென்று நேசக் கரம் நீட் டியது. அங்கிருந்து வந்த பெரிய மந்திரிகளும், துணை மந் திரிகளும் திட்டங்களைப் பற்றி அறிந்ததாக தலையசைத்து விட்டு எங்களிடம் பணமில்லையே, என்று கைவிரித்துப் போனுர்கள்.

பாசக் குரலுக்கு மதிப்பளிக்காத மத்திய அரசை எழுச்சிக் குரல் கிளப்பி கவனத்தைக் கவர முயன்றது தமிழக அரசு. தமிழக அரசை நடத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையம் ...'சேலம் இருப்பாலை தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகம் பற்றிய தமிழக கோரிக்கைகளின் நியாயத்தை மத்திய அரசுக்கு மேலும் வலியுறுத்தும் வண் ணம் ஜுலை--23ல் நாடெங்கும் தமிழக மக்களின் ஒரு மித்த குரலை எழுப்பிய சேலம்--தூத்துக்குடி நாள் கொண்டாடு வதற்கு ஏற்பாடு செய்யுமாறு மாவட்ட, வட்ட கிளைக்கழக அமைப்புக்கள் அனைத்தும் வேண்டப்படுகின்றன. என்று அறிக்கை வெளியிட்டு உணர்ச்சி கொண்ட உள்ளங்களை ஒன்று திரட்டியது.

முதற்பாகம் முற்றிற்று.